# தூறல்

இனிமையானது......

Jan - Mar 2011
சாரல் 02 : 01



அதிகம் பேசும் பெண்களுக்கு ஆயுள் குறைவு
– ஹலோ மோகன்



ரஜினியின் ஹரா



குழந்தைகள் கவனம்
LEAD TOYS



நண்பேன்டா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DATTA FOOD MANUFACTURY INC.

சைவ உணவுகளின் சாம்ராஜ்யம்...

அனைத்து உணவையும்
உங்கள் ருசிக்கேற்ப
தாயக தரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



**Phone: 416-297-8402**

#9-585 Middlefield Rd., Scarborough, ON
85 Kennedy Road, Unit #31, Brampton



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THOORAL

**P.O. Box 4056**
**McCowan Square, 1235 McCowan Road,**
**Scarborough, Ontario M1H 0A4**
Tel : 416 451 3177
Fax : 416 273 7606
Web : www.thooralonline.com
Email : editorial@thooralonline.com

Chief Editor
**Rajmogan Selliah**

Managing Editor
**EN. ES. Sivalingam**

Sub Editors
**Guru**
**Brrindha Kathirvel - Sri Lanka**

Media Co - ordinator
**Sinnaswamy Bashkar - Sri Lanka**

**Design & Concept**
**TNT Touch**

**Advertisements**
**TNT Touch**
P.O. Box 4056
McCowan Square, 1235 McCowan Road,
Scarborough, Ontario M1H 0A4
Tel : 416 451 3177
E-mail : tntshiv@gmail.com




**Disclaimer:** All Rights reserved. The Opinion / Views expressed by the contributors are their own and do not reflect those of the publisher.

The Publisher assumes no responsibility of any kind.


## தூறலில் நனைந்திட முன்...


அதிகாரப் பரவலாக்கத்தின் அவசியம் ........ 06
எதிலும் இன்பம் எவர்க்கும் இன்பம் ........ 10
பத்துக் கட்டளைகள் ........ 13
ஹலோ மோகன் ........ 14
Lead Toys ........ 18
வெளிச்சம் - அ.முத்துலிங்கம் ........ 20
குரு அரவிந்தன் பக்கம் ........ 22
ரொமான்ஸ் உணர்வுகள் ........ 24
வினாவும் விடையும் ........ 27
சேரனின் பதிவுகள் ........ 35
ஆழ் மனத்து அலைகள் ........ 39
என் மனவானில்... ........ 40
மருத்துவம் ........ 43
நினைவுகள் மலருகின்றன ........ 45
பேசாத வார்த்தைகள் ........ 54
நண்பேன்டா ........ 56
நீ அங்கே நான் இங்கே ........ 60
சுட்டிகள் ........ 72
டைரியின் அந்தரங்கம் ........ 75
காதல் காதல் காதல் ........ 79
பறுவதம் பாட்டி ........ 81
கருணாவின் பக்கம் ........ 87


29 25 வருடங்களுக்கு மேலாக பாவிக்ககூடிய மின்கலம்


93 2018 உலகக் கிண்ண உதைபந்தாட்டம்


36 பென்சில்கரி படலமும் நோபல் பரிசும்


70 சாதனைக் குயில் பி.சுசீலாவின் ஆசை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்பிக்கைகளை உருவாக்குவோம்!

வரலாறுகளை புனர்நிர்மாணம் செய்யும் நம்பிக்கைகளுடன், கடந்து சென்ற துன்பியல் வரலாறுகளின் நினைவுகளைத் தாங்கியபடி புதிய ஆண்டில் காலடி வைத்திருக்கின்றோம்.

அடையாளப்படுத்தப்பட்ட தேசிய இனத்தின் சிதைவுகள் எதுவும் கருத்தில் கொள்ளப்படாமல் அவர்களின் அடிப்படை வசதிகள் எதுவும் பூர்த்தி செய்யப்படாத நிலையில், வினாக்களை மட்டுமே தாங்கியபடி... காலங்கள் கடந்து கொண்டிருக்கின்றன. ஒரு இனத்தின் ஆற்றல்கள் புதிய சக்தியாக உருமாறுவது பரிணாமம். அதற்கான தளத்தை உருவாக்கிக் கொடுக்கும் முயற்சியில் தவறுகள் இடம்பெறுமென்றால் எமக்கான ஒரு ஆரோக்கியமான சமுதாய கட்டமைப்பின் தேவை அவசியமாகின்றது.

இன உணர்வுகள் பற்றிய விஞ்ஞான ரீதியிலான அணுகுமுறைகள் எமக்கிடையிலான பிரிவினைகளை இல்லாதொழிக்கும் என்பதில் தூறல் உறுதியான நம்பிக்கை கொண்டு தனது இரண்டாவது ஆண்டுக்குரிய பயணத்தில் அமைதியாகக் காலடி வைக்கின்றது.

தனித்துவமான பாதையில் மும்மாத இதழாக பரிணமித்த தூறல், வாழ்வியலின் யதார்த்தமான கூறுகளை உள்வாங்கி எழுத்தாளர்களுக்கும் சமுதாயத்திற்குமிடையிலான ஒரு தொடர்பை ஏற்படுத்தி நிற்கின்றது.

கலை இலக்கிய வடிவங்கள் தனிமனித அனுபவம் சார்ந்து வெளிப்படுபவை. வரலாற்றை வித்தியாசமான பாதையில் உருவகிப்பதும், நிகழ்கால யதார்த்தங்களை சிருஷ்டிப்பதும், எதிர்காலத்தை நிகழ்காலத்தில் தருவிப்பதும் ஒரு தரமான இலக்கியத்தின் அடிப்படைகள் என்பதில் உறுதியாக நிற்கின்றோம்.

எழுத்தாளர்களின் அனுபவங்கள் கடந்த கால இலக்கியங்களுடன் இசைவு பெறும் போது தரமான இலக்கியம் உருவாக்கப்படுகிறது. இவ்வாறான புதிய எழுத்துருவ ஆளுமைகளை அடையாளப்படுத்துவதற்கான தளமாக இருக்கவேண்டும் என்ற அவசியமும் எமக்கு தேவைப்படுகின்றது.

ஒரு இனத்தின் நம்பிக்கைகள் தொலைக்கப்பட்டிருந்தால் கூட... நம்பிக்கைகளை உருவாக்குவது ஒவ்வொருவரது கடமையாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளுடன் மீண்டும் சந்திக்கின்றோம்.

நன்றி - பிரதம ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகார பரவலாக்கத்தின் அவசியம்!



இன ஒருமைப்பாடு, பிரதேசம், மொழி, பண்பாடு, பொருளியல் இவையாவும் கொண்டு வரலாற்றில் நிலைத்துவிட்ட ஒரு சமூகமே ஒரு தேசிய இனமாக அடையாளப்படுத்தப்படுகின்றது. தேசம் என்பது பண்பாடு, மொழி, வரலாறு ஆகியவற்றைப் பகிர்ந்துகொண்டு ஒரு அரசின் கீழ் பெருந்தொகையான மக்கள் கூட்டம் வாழும் பிரதேசமே தேசம் என வரையறுக்கப்படுகின்றது. ஒரு நாடு ஒரு தேசமாகவும் இருக்கலாம் பல பிரதேசங்களைக் கொண்டதாகவும் இருக்கலாம்.

ஒரு தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு அங்கு வாழும் மக்கள் கூட்டத்தினர் ஒவ்வொருவரினதும் உயிருக்கு உத்தரவாதம் கிடைக்காதபோது மக்கள் புரட்சி வெடிப்பது தவிர்க்க முடியாததாகின்றது. மக்களை முழுமையாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படாமல் ஒரு பக்கச் சார்பாக வெளிப்படுத்தப்படும் அரசியல் நடவடிக்கைகள் நாட்டை ஒரு மோசமான நிலைக்கே இட்டுச் செல்லும்.


ஒருமைப்படுத்தப்பட்ட தேசத்தில் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும் வாழ முடியும் என்ற அடிப்படை எண்ணங்களே சமஷ்டிக் கொள்கையின் பிரதான நோக்கமாக கருதப்படுகின்றது. பல இனம், பல மொழி மற்றும் பொருளாதார ஏற்ற இறக்கங்கள் கலாச்சார வேறுபாடுகள் கொண்ட ஒரு நாட்டின் அரசியல் தீர்வு அதிகாரப் பரவலாக்கல் மூலமே சாத்தியப்படும் என்பது உலக வரலாறுகள் தெளிவுபடுத்தி உள்ளன. இன்றைய உலகம் வேகமாக சுழன்று கொண்டு இருக்கின்றது. ஒவ்வொரு கணத்திற்கு கணம் புதுப்புது விடயங்கள், கண்டுபிடிப்புகள் போட்டி போட்டு நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. சவால்களை எதிர்கொள்ள வளர்ச்சியடைந்த ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு இனமும் கடுமையான ஆராய்ச்சியிலும் உழைப்பிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இந்த நூற்றாண்டில் இன ஒடுக்கு முறைகள் பற்றியும் அதற்கான மூலகாரணங்கள் பற்றிய சரியான தெளிவும் இன்றி தம்மை தாமே பிறவுலகில் இருந்து துண்டித்துக்கொண்டுள்ளன.

அதிகாரப் பரவலாக்கத்தின் மூலம் தீர்வுகள் ஏற்படுத்துவதற்கான சூழல் ஒன்று அவசியம் தோற்றுவிக்கப்படவேண்டும். இது பற்றிய பூரணமான தெளிவு சம்பந்தப்பட்ட அனைத்து இனப்பிரிவுகளுக்கும் ஏற்படுத்தப்படுவது அரசியல் தலைமைகளின் கைகளிலேயே உள்ளது. புரட்சியின் வெவ்வேறு வடிவங்களால் வடுக்களை ஏற்படுத்திய கடந்தகால போரியல் வரலாறுகள் அரசியல் தீர்வுகளின் பலாபலன்களை எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றன.

ஒற்றையாட்சியின் மூலம் பெறப்பட்டிருக்கும் தீர்வு பற்றிய அறிவு மக்களிடையே தெரியப்படுத்தப்பட்டு ஒரு சுமூகமான நிலைப்பாடு ஏற்படுத்தப்பட்டு சகல இனமும் ஒற்றுமையாக, சமத்துவமாக, சகோதர உணர்வுடன் வாழ முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கடமையாக உள்ளது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IN சுவை!

## கோப்பி மருந்து...

கோப்பியில் உள்ள காஃபின் சுவாசக்குழாயிலுள்ள தசைகளைத் தளர்த்தி சுவாசக்குறைபாட்டை தற்காலிகமாக நிவர்த்திசெய்வதாக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 4 மணித்தியாலங்களுக்கு இந்த நிவாரணம் தொடர்ந்து கிடைப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகளவு கோப்பி அருந்துதல் பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் வேறு மருந்துகளைப் பாவிப்போர் தாம் அருந்தும் கோப்பியின் அளவைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்றும் மருத்துவர்கள் அலோசனை கூறுகிறார்கள்.

**நம்ம Tim எப்பவும் King ஆகத்தான் இருப்பான் போல...**




டைம்ஸ் சஞ்சிகையினால் இந்த ஆண்டிற்கான நபராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் Face Book இன் ஸ்தாபகர் Mark Zuckerberg.
26 வயதேயான இவர், உலகின் இளவயதுப் பணக்காரர்களில் ஒருவராகவும் மனித இனத்தின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் ஒருவராகவும் காணப்படுகிறார். Face Book இன் கால்வாசிப் பங்குகளுக்கு சொந்தக்காரரான இவர், Bill Gates, Waren Buffet ஆகியோரால் தொடங்கப்பட்ட தொண்டு நிறுவனத்திற்கு பங்களிப்பு செய்துவருகிறார்.

இந்த விருது 2008ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவிற்கும், 2007 ஆம் ஆண்டு ரஷ்ய அதிபர் புட்டின் அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

**Face book ஐ Mass book ஆக்கி விட்டார்...**

- If you judge people you have no time to love them
  **– Mother Teresa**
- In a day when you don't come across any problem, you can be sure that you are travelling in a wrong path.
  **– Swami Vivekananda**
- If someone feels that they had never made a mistake in their life, then it means they had never tried a new thing in their life.
  **– Albert Einstein**
- Never break four things in our life – Trust, relation, promise & heart because when they break, they don't make noise but pains a lot. **– Charles Dickens**
- Everyone thinks of changing the world, but no one things of changing himself. **- Leo Tolstoy**
- If you win you need not have to explain... if you lose you should not be there to explain. **– Adolf Hitler**

## ஷங்கருக்கு பொழுதுபோக்குக்கான சிறந்த இந்தியன் விருது!



இயக்குனர் ஷங்கர் பொழுதுபோக்குக்கான சிறந்த இந்தியர் விருதை தட்டிச் சென்றுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் சிஎன்என் ஐபிஎன் லைவ் நியூஸ் ஏஜென்ஸி சிறந்த இந்தியர்கள் என்ற பெயரில் விருதுகளை அளித்துவருகிறது. அரசியல், விளையாட்டு, வர்த்தகம், பொது சேவை, மற்றும் பொழுதுபோக்கு என ஐந்து துறைகளுக்கும் தனித்தனியாக விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்த ஆண்டு பொழுதுபோக்குக்கான சிறந்த இந்தியர் விருதுக்கு. அமீர் கான், ரஜினிகாந்த். சல்மான் கான், இயக்குனர் ஷங்கர், ஷிலாங் செம்பர் நிறுவனம் மற்றும் விக்ரம் ஆதித்தியா பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டன. இதில் இந்திய சினிமாவை உலக அளவிற்கு கொண்டு சென்ற பெருமைக்காக (எந்திரன் படத்திற்கு) இயக்குனர் ஷங்கருக்கு அதிக வாக்குகள் கிடைத்தது. இந்த ஆண்டின் பொழுதுபோக்குக்கான சிறந்த இந்தியர் விருது கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேலையில் ஜூலியா ராபர்ட்ஸ்



42 வயதாகிறது. இருந்தும் ஹாலிவுட்டில் அவர்தான் இன்றும் சூப்பர் ஸ்டார், பேரழகி. அவரது அழகு, நடிப்பைவிட தற்போது அதிகம் பேசப்படுவது ஜூலியா ராபர்ட்ஸ் இந்து மதத்துக்கு மதம் மாறியது. இந்திய ஆன்மீகத்தில் ஈடுபாடு ஏற்பட்டு இந்திய ஆன்மீக மரபையும், யோகா போன்ற கலையையும் பின்பற்றுகிறவர்கள் உலகம் முழுவதும் இருக்கிறார்கள். அமெரிக்காவில் இது அதிகம். எதிலும் நிலைகொள்ளாமல் எதையும் முயன்று பார்க்கும் அவர்களின் மனோபாவமும் இதற்கு முக்கிய காரணம். ஈட் பிரே லவ் படத்துக்காக இந்தியா வந்த ஜூலியா ராபர்ட்ஸ் திடீரென இந்து மதத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். இந்தப் படத்தின் கதை சற்று வித்தியாசமானது. விவாகரத்தான ஒரு பெண் தன்னை உணர்ந்து கொள்வதற்காக உலகம் முழுவதும் சுற்றி வருகிறார். இத்தாலிக்கு உணவுக்காகவும், இந்தியாவுக்கு ஆன்மீகத்துக்காகவும் அவர் வருவது போல் கதை அமைக்கப்பட்டுள்ளது.

| Names | When you rearrange the letters: |
| --- | --- |
| DILIP VENGSARKAR | SPARKLING DRIVE |
| PRINCESS DIANA | END IS A CAR SPIN |
| MONICA LEWINSKY | NICE SILKY WOMAN |
| DORMITORY | DIRTY ROOM |
| ASTRONOMER | MOON STARER |
| DESPERATION | A ROPE ENDS IT |
| THE EYES | THEY SEE |
| A DECIMAL POINT | IM A DOT IN PLACE |
| MOTHER-IN-LAW | WOMAN HITLER |

***Someone out there either has too much spare time or is deadly at Scrabble.***

## தத்துவம்ஸ்

**Girl** ஒரு தனி **word** வாழ்க்கை ஒரு **Dictionary**

ஒரு **Word**க்கு வெயிட் பண்ணி
**dictionary** ய மிஸ் பண்ணாதிங்க...

கோயில் மணிய நாம அடிச்சா சத்தம் வரும் கோயில் மணி நம்மள அடிச்சா ரத்தம் வரும்

டிக்கட் வாங்கிற்று உள்ள போனா
அது சினிமா தியேட்டர்.
உள்ள போயிற்று டிக்கட் வாங்கினா அது ஆப்பரேசன் தியேட்டர்

செல்லில பலன்ஸ் இல்லேண்ணா
'கால்' பண்ண முடியாது.
மனுசனுக்கு கால் இல்லேண்ணா பாலன்ஸ் பண்ணமுடியாது

பஸ்ஸில நீ ஏறினாலும்,
இல்ல பஸ் உன் மேல ஏறினாலும் டிக்கட் வாங்கப்போறது நீ தான்



## யார் இந்தச் சிறுவர்கள்?

64ம் பக்கத்தில் பார்க்கவும்.

### "ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்."

இதன் பொருள் முரண்பாடாக அல்லவா தோன்றுகிறது. பண்டைத் தமிழர் ஆயிரமாயிரம் மூலிகைகள் அதன் வேர்கள் பற்றி அறிந்தவர்கள். அப்படியான மூலிகை வேர்களைப் பயன்படுத்தி மருந்துகள் தயாரித்தளித்து நோய்களை நீக்கினர் மருத்துவர்கள். இவர்களா இப்படியொரு பழமொழியை வழக்கத்தில் கொண்டிருந்தார்கள்...

"ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியவன்"

என்று பழமொழியின் பொருளைப் புதுமைப்படுத்தினால் பழம்பொருள் விளங்கும்.

கொஞ்சம் கூட சென்ஸ் இல்லாம சிந்தித்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிலும் இன்பம் எவர்க்கும் இன்பம்

**தமிழர் வாழ்வியலின் இன்பக் கூறுகள் பற்றி சங்கப் புலவர் மாங்குடி மருதனார்...**

இயற்கையோடிணைந்து இன்புற்று வாழ்வைச் சிறப்பாக்கி, வாழ்வுக்கு வளமூட்டி வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுத்து வாழ்ந்த இனம் தமிழினம். மலைவளம், காட்டுவளம், வயல்வளம், கடல்வளம் அனைத்தையும் தம்பாற் கொண்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நிலப் பாகுபாடு செய்து வாழ்வியலுக்குத் தகுந்த இலக்கணம் வகுத்து வாழ்ந்தவர் தமிழர்.

நெல், தினை போன்றவற்றைப் பிரதான உணவாகப் பெருநிலப்பரப்புகளில் விளைவித்தனர். வெய்யிலிலும் மழையிலும் விவசாயிகள் கண்ணும் கருத்துமாக வேலை செய்தனர். தாயகத்திலிருந்து உணவு வகைகளை ஏற்றுமதி செய்தனர். பலவகையான பூக்கள் தமிழர் தேசத்தில் பூத்தன. அப்பூக்களை மருத்துவத்துக்கும் பூஜைக்கும் அலங்காரத்துக்கும் நறுமணத்தைப் பெறுவதற்கும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கும் பயன்படுத்தினர். மாலைகள் தொடுத்து மகளிரும் ஆடவரும் அவற்றை அணிந்து மகிழ்ந்தனர். தேனீக்கள் பூக்களிலிருந்து தேனைக் குடித்துச் சேகரித்தன. அத்தேனும் மருந்துக்கும் உணவுக்கும் பயன்படுத்தப்பட்டது.

கரும்பனை, தென்னை, கரும்பு போன்றவற்றை வளர்த்து அவற்றிலிருந்தும் பெரும்பயன் பெற்றனர். இன்சுவை நுங்கும் இளநீரும் கரும்புச் சாறும் குடித்து இன்புற்றனர். நுங்கு, இளநீர் என்றவுடன் புலம்பெயர்ந்து வாழும் எம்மவரிற் பலருக்கும் வாயூறும். முக்கண் உடைய நுங்கைச் சீவி ஆட்காட்டி விரலால் அதைத் தோண்டிச் சுவைக்கும் இன்பம் தனியானது. கேணி, குளம், ஆறு, கடல் போன்ற நீர் நிலைகளில் நீராடி மகிழ்வதும் பனையின் பதநீரைக் குடித்து மகிழ்வதும் ஈழத்தில் சாதாரண மக்களும் அனுபவித்த இன்பமாகும்.

சங்கத் தமிழ்ப் புலவரான மாங்குடி மருதனார் தமிழர் தம் வாழ்வியலின் இன்பக் கூறுகள் சிலவற்றைப் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

" நெல் அரியும் இருந் தொழுவர்
செஞ் ஞாயிற்று வெயில் முனையின்
தெண் கடல் திரை மிசைப் பாயுந்து
திண் திமில் வன் பரதவர்
வெப் புடைய மட்டுண்டு
தண் குரவைச் சீர்தூங் குந்து
தூவற் கலித்த தேம்பாய் புன்னை
மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்
எல்வளை மகளிர்த் தலைக்கை தரூஉந்து
வண்டுபட மலர்ந்த தண்ணறுங் கானல்

முண்டகக் கோதை ஒண்டொடி மகளிர்
இரும் பனையின் குரும்பை நீரும்
பூங் கரும்பின் தீஞ்சாறும்
ஓங்கு மணற் குவவுத் தாழைத்
தீ நீரோடு உடன் விராய்
முந்நீர் உண்டு முந்நீர்ப் பாயுந்து
தாங்கா உறையுள் நல்லூர்..." (புறம்.24)

"நெல்லை அரியும் பெரும் உழவர் ஞாயிற்றின் வெப்பத்தை வெறுப்பர். கடல் அலை மேல் பாயும் திண்மையான படகினை உடைய பரதவரோ வெம்மையான மதுவை விரும்பி உண்பர். புன்னைப் புதுமலரால் கட்டப்பட்ட கண்ணியை அணிந்த ஆடவர் வளையணிந்த பெண்களுக்குக் கைகொடுத்துக் குரவைக் கூத்தும் ஆடுவர். முள்ளிப்பூ மாலை சூடிய மகளிர் பனை நுங்கின் நீரும் கருப்பஞ்சாறும் இளநீரும் கலந்து உண்டு, பின் கடல் நீரிலே பாய்ந்து ஆடியும் மகிழ்வர். இத்தகைய வளமுடன் எல்லா மக்களும் இன்புற்று வாழும் நல்ல நாடு".●

–மீரா இராசையா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Mortgage யார் வேண்டுமானாலும் செய்யலாம்...!
ஆனால் எங்களிடம் ஓர் பாதுகாப்பான அனுபவத்தை உணருவீர்கள்.



We are always there to determine your both current financial mortgage needs and future personal needs...

VINCE SINNADURAI - 416 917 9462
Senior Accounts Manager - Residential Mortgages

MIKE AHILAN - 416 220 1184
Senior Accounts Manager - Residential Mortgages

RBC Royal Bank of Canada
Kennedy & Ellesmere Branch
1421 Kennedy Road, Scarborough, ON M1P 2L6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2005** ஆம் ஆண்டு டிசெம்பர் பதினைந்தாம் திகதி சிவாஜி படப்பிடிப்பு ஆரம்பமானது.

- முதல் காட்சியாக எகிப்திய அரண்மனை செட்டில் 'வாஜி வாஜி' பாடல் ஒளிப்பதிவு செய்யப்பட்டது. இப்பாடல் காட்சியில் 280 பேர் பங்கேற்றார்கள். இந்தப் பாடல் காட்சி படமெடுக்கப்பட்ட நாட்கள் அனைத்திலும் தினம் தினம் இருபதாயிரம் ரூபாய்க்கு பூக்கள் வாங்கப்பட்டன. காட்சியில் பயன்படுத்த கொஞ்சம் நகைக்கற்கள் தேவைப்பட்டபோது ஒருகிலோ நவரத்தினக்கற்கள் வாங்கப்பட்டன.

- இந்தப் பாடல் காட்சி படமாக்கப்பட்டதும் அந்த அரண்மனை செட் அப்படியே ஹீரோ, ஹீரோயின் படுக்கை அறையாக மாற்றப்பட்டது.

- தீபாவளி அன்று பென்ஸ் காரில் ரஜனி வந்து ஷ்ரேயாவைச் சந்திக்கும் அந்தக் காட்சியில் நிறைய பட்டாசுகள் கொழுத்தப்பட்டன. அந்த நிறைய பட்டாசுகளின் பெறுமதி மூன்று லட்சம் ரூபாய்.


- சண்டைக்காட்சி ஒன்றுக்காக புதிய முறையில் லைட்டிங் செய்யப்பட்டது. ஒரு பெரிய பலூன். உள்ளே சில கருவிகளைப் பொருத்தி ஹீலியம் வாயுவை அதனுள் நிரப்பினார்கள். சக்தி வாய்ந்த பல்பு ஒன்று உள்ளேயே பொருத்தப்பட்டது. கேஸ் நிரம்பிய அந்த பலூன் பட்டன் ஒன்றைத் தட்டத் தட்ட உயரே எழும்பும். எந்த உயரத்திலும் அதனை நிலை நிறுத்தலாம். இந்த பலூன் சண்டைக்காட்சிக்காக பயன்படுத்தப்பட்ட மைதானம் முழுவதற்குமான சீரான பௌர்ணமி நிலவின் வெளிச்சத்தை பரப்பியது. இந்தக் காட்சிக்காக தமிழ்நாடு ஸ்பெஷல் போலிஸ் ஐம்பது காவலர்கள், ஒரு சப் -இன்ஸ்பெக்டர், ஒரு இன்ஸ்பெக்டர் ஆகியோர் பாதுகாப்பு வழங்கினார்கள்.

- இந்த சண்டைக்காட்சி படமாக்கப்பட்டுக்கொண்டிருந்த ஒரு நாள் இரவு ரசிகர் ஒருவர் போதையில் அங்கு வந்து ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார். உள்ளே போகவேண்டும் என்று அங்கிருந்த இன்ஸ்பெக்கரிடம் வாதம் செய்துகொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் தன்னிலை மறந்து கையிலிருந்த போத்தலை உடைத்து இன்ஸ்பெக்டரைக் குத்திவிட்டார்.

- சஹானா சாரல் பூத்ததோ பாடல் காட்சிக்காக குற்றால மலையிலிருந்து அருவி பாய்ந்து கொட்டுவது போலவும், கீழே விடும் தண்ணீர் ஒரு ஆறு போல் கீழே ஓடுவது போலவும், கொட்டுகின்ற, ஓடுகின்ற தண்ணீருக்குக் கீழே சுமார் நூறு அடிக்கு 'அக்ரலிக் ஷீட்'களைப் பயன்படுத்தினார்கள். எனவே தண்ணீருக்கு கீழே இருப்பவை துல்லியமாகத் தெரிந்தன. அத்துடன் ஜெய்ப்பூர் அரண்மனை போன்ற ஒரு கட்டடம், முழுக்க முழுக்க கண்ணாடியிலான மாளிகை போன்ற செட்கள் அமைக்கப்பட்டன. இந்த செட்களுக்கான செலவு இரண்டரைக் கோடி ரூபாய்கள்.

- இந்தப் பாடல் காட்சியின் அரங்கத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் எல்லாமே கண்ணாடியிலானவை. தண்ணீர் குடிக்கும் டம்ளரில் இருந்து, மேசை, நாற்காலி, கடிகாரம் என்று எல்லாமே சிறப்பு வகை கண்ணாடியால் செய்யப்பட்டிருந்தது. சண்டைக்காட்சி ஒன்றிற்காக பீட்டர் ஹெய்ன் ரஜனியை நன்றாக வேலை வாங்கியிருப்பார். கயிற்றில் கட்டி ரஜனியைத் தொங்கவிட்டிருப்பார். கிரேன் அவரை இழுத்துக்கொண்டு போகும். இவ்வாறு பல. முக்கியமான சண்டைக்காட்சிகளில் டுப் போடாமல் ரஜனியே நடித்தார். "ரஜனி இருபது வயது வாலிபன் என்று பீட்டர் மாஸ்டருக்கு நினைப்போ... இப்படி வேலை வாங்குகிறாரே" என்று யூனிட்டில் உள்ளவர்கள் பேசிக்கொள்ளும் அளவுக்கு சண்டைக்காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. மூன்று நாட்கள் கழிந்ததும் திடீரென ரஜனியின் தோள்பட்டையில் பிரச்சனை ஏற்பட்டது. தாங்க முடியாத வலி. சண்டைக்காட்சிகளை கொஞ்ச நாள் தள்ளி வைக்கலாமா என்று ரஜனி கேட்டது அநேகமாக இந்த சந்தர்ப்பத்தில் தான் என்று சொல்லாம்.

- சிவாஜி மாதிரி இன்னொரு படம்வர பத்துப் பதினைந்து ஆண்டுகள் ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்று ரஜனி இத்திரைப்படம் தொடர்பாக குறிப்பிட்டிருந்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்துக் கட்டளைகள்



மூன்று விடயங்களை மீளப்பெறமுடியாது என்று சொல்வார்கள். முதலாவது நாம் கொட்டிய வார்த்தைகள், இரண்டாவது நாம் இழந்த சந்தர்ப்பங்கள், மூன்றாவது நாம் செய்த தவறுகள். நாம் பேசும் போதும் எழுதும் போதும் வெளிவரும் வார்த்தைகளில் நாம் அவதானமாக இருக்கவேண்டும். இவ்வாறான வார்த்தைகளில் ஏற்படக்கூடிய தவறுகளைத் தவிர்ப்பதற்காக என்றே பத்துக் கட்டளைகளைக் கொடுத்துள்ளது தொல்காப்பியம். அந்தக் காலத்து அறிஞர்கள் எல்லோரும் ஒரு பேச்சையோ, நூலையோ அங்கீகரிப்பதற்கு முன்னர் இந்த வகையான வழுக்கள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பார்த்துத்தான் அங்கீகரிப்பார்கள்.

இன்று எமக்குக் கிடைத்துள்ள நூல்களிலேயே மிகவும் பழமையானது தொல்காப்பியம். இது கி.மு. 5550 தொடக்கம் கி.மு. 1950 கடற்கோள் வரை 3700 ஆண்டுகள் தொடர்ச்சியாக கடல்கொண்ட கபாடபுரத்தில் இயங்கி வந்த இரண்டாம் தமிழ் சங்ககாலத்து நூல் என்று நக்கீரன் இறையனார் அகப்பொருள் உரை கூறுகின்றது. ஆராய்ச்சியாளர்கள் இந்நூல் குறைந்தது இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாய் இருக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

தொல்காப்பியத்தின் பின்வரும் சூத்திரம் எமது பேச்சிலும் எழுத்திலும் ஏற்படக்கூடிய பத்து வழுக்கள் அல்லது தவறுகளைப் பற்றிக் கூறுகின்றது.

சிதைவு எனப்படுபவை வசை அற நாடின்

கூறியது கூறல், மாறுகொளக் கூறல்

குன்றக் கூறல், மிகைபடக் கூறல்

பொருள்இல கூறல், மயங்கக் கூறல்

கேட்போர்க்கு இன்னா யாப்பிற்று ஆதல்

பழித்த மொழியான் இழுக்கம் கூறல்

தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்

என்ன வகையினும் மனக்கோள் இன்மை

அன்ன பிறவும் அவற்று விரி ஆகும்

- தொல்காப்பியம் சூத்திரம் 1608

**இந்தப் பத்து விடயங்களாவன:**

1. கூறியது கூறல் - Repetition
2. மாறுகொளக் கூறல் - Contradicting
3. குன்றக் கூறல் - Not revealed enough
4. மிகைபடக் கூறல் - Talking in excess
5. பொருள்இல கூறல் - Meaningless talk or writing
6. மயங்கக் கூறல் - Ambiguous talk/writing
7. கேட்போர்க்கு இன்னா யாப்பிற்று ஆதல் - Hurting to others
8. பழித்த மொழியான் இழுக்கம் கூறல் - Insulting others
9. தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல் - Talking or writing on his own assumption
10. என்ன வகையினும் மனக்கோள் இன்மை - Firmless talk or writing

இதே போல் பதின்மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நன்நூல் என்ற நூலும் பத்துத் தவறுகளைப் பற்றி கூறுகின்றது.

1. குன்றக் கூறல் - Not revealed enough
2. மிகைபடக் கூறல் - Talking or writing in excess
3. கூறியது கூறல் - Repetition
4. மாறுகொளக் கூறல் - Contradicting
5. வழூஉச் சொல் புணர்த்தல - Misnomer
5. மயங்கவைத்தல் - Ambiguous
7. வெற்று எனத் தொகுத்தல் - verbose or coinage of unwanted words
8. மற்று ஒன்று விரித்தல் - irrelevancy
9. நென்று தேய்த்து இறுதல் - Reducing the importance of the point when trying to stress that
10. நின்று பயன் இன்மை - No purpose for the used words

இதே பாடல் பதின்மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட குவலயானந்தம் என்ற நூலிலும் 271 வது பாடலாகக் காணப்படுகிறது.

இவற்றையெல்லாம் மீண்டும் வழமைக்குக் கொண்டுவந்தால் நமது எழுத்துக்களும், உரைகளும், பேச்சுக்களும், நூல்களும் ஓடி ஒளிந்து கொள்ள வேண்டியதுதான். ●

DR. இ. லம்போதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களே! உங்கள் உள்ளத்தில் தோன்றும் கேள்விகளை
ஹலோ மோகன் பார்வைக்கு அனுப்பி வையுங்கள்.
Email: hellomogan@thooralonline.com
Fax: 416 273 7606

# ஹலோ மோகன் கேள்வி - பதில்


மதன் - ஸ்காபரோ

**வாழ்க்கையில் மகிழ்ச்சிகளை பணம் கொடுத்து வாங்கமுடியுமா?**


மகிழ்ச்சிகளை பணம் கொடுத்து வாங்க முடியும் என்றால் வாழ்வியலில் ஒரு சுவாரஸ்சியமே இருக்காது. மகிழ்ச்சிகள் என்பது வங்கிக் கணக்குகள் மாதிரி. அதில் balance இருந்தால் மட்டுமே பணத்தை எடுக்க முடியும். Over draft இல் எடுக்கலாம் ஆனால் அது தற்காலிகமானது.

தேவி - ரொரன்ரோ

**கிளி, மைனா இரண்டில் எது நன்றாக பேசும் தன்மை கொண்டது?**



இரண்டும் நன்றாக mimicry பண்ணக் கூடிய ஆற்றல் கொண்டது.
இவற்றுக்குக் கொடுக்கப்படும் பயிற்சியைப் பொறுத்ததே அவற்றின் பேசும் திறனும் அமைந்திருக்கும். ஆனால் அவுஸ்திரேலியாவின் கிழக்குப் பகுதிகளில் காணப்படும் லைரே பறவைகள் (Lyre birds) தனது சூழலில் இருக்கும் அனைத்து இசைகளையும், ஒலிகளையும் பயிற்சிகள் எதுவுமின்றி அச்சொட்டாக மிமிகிரி செய்யும் ஆற்றல் கொண்டது. இது மயிலின் சிறு தோகையினையும் குயிலின் உடலமைப்பையும் கொண்டு காணப்படுகின்றது. இவற்றில் உள்ள முக்கியமான சிறப்பம்சம், பல் குரலில் பாடும் சக்தி ஆண் லைரே பறவைகளுக்கு மட்டுமே இருப்பதாகும். ஆண் லைரே பறவைகள் பெண் லைரே பறவைகளை கவர்வதற்கு செய்யும் காதல் குரல்ஜாலம் வினோதமாக இருக்குமாம்.



ரோகினி
- கொழும்பு 11

**அதிகம் பேசும் பெண்களுக்கு ஆயுள் குறைவதாகக் கேள்விப்பட்டேன் உண்மையா?**

ஆம் என்கின்றார்கள் ஆராய்ச்சியாளர்கள். Singer's nodule எனப்படும் குரல் வளையத்தில் ஏற்படும் பாதிப்பே அதற்கான காரணம் என்கின்றார்கள். நமது நுரையீரலில் இருந்து வெளிவரும் காற்றானது voice box எனப்படும் குரல் வளையத்தைக் கடந்து செல்லும் போது சில அதிர்வலைகள் ஏற்பட்டு ஒலியாக மாற்றமடைகின்றது. இந்த ஒலியே, பேச்சாக, பாடலாக, கத்தலாக, அலட்டலாக வெளிப்படுகின்றது. குரல் வளையத்தின் அதிக பாவனையால் ஏற்படும் பாதிப்பு அவர்களின் குரலில் மாற்றங்களைக் கொடுத்து நிரந்தர பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இந்த Singer's nodule இன் பாதிப்பு ஆண்களைவிட பெண்களுக்கே அதிகம் வருகின்றது. இதற்கான காரணம் பெண்களின் குரல்வளையத்தின் தன்மை மிகவும் மென்மையாக இருப்பது மட்டுமல்லாது அவர்கள் அதிகம் பேசுபவர்களாகவும் இருப்பதாகும். High pitch எனப்படும் உச்சஸ்த்தாயில் பாடுபவர்கள், மேடைப் பேச்சாளர்கள் இதனால் அதிகம் பாதிப்படைகின்றார்கள்.

கத்திப் பேசும் அம்மாக்கள், கொட்டித் தீர்க்கும் மனைவிமார்கள், வெட்டிப் பேச்சுப் பேசும் பெண்கள்.... இவர்களுக்கு வைச்ச ஆப்புத்தான் Singer's Nodule.

ரசித்தன் - பிரம்டன்

**காதல் தோன்றுவதற்கு அழகு அவசியமா?**

இல்லை. ஒரு பெண் அழகாக இருப்பதால் மட்டும் யாரும் காதலிப்பதில்லை. அவளைக் காதலிப்பதனால் தான் அவள் அழகாகத் தெரிகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளசி – மார்க்கம்

**விஜய்யின் 'காவலன்' கதை என்ன?**


உயரத்தில் பறந்து கொண்டிருந்த விஜய் ஒரு பந்தாவும் இல்லாமல் அப்படியே ஒரு பள்ளத்தாக்கினுள் விழுந்துபோய்க் கிடக்கின்றார். மெதுமெதுவாக தனது முயற்சியால் வெளியே வருவதற்கு முயற்சிக்கின்றார். அவருக்குத் துணையாக ஹெலிகொப்டர்கள், இராணுவ வாகனங்கள், போர் வீரர்கள் என்று ஒரு படையணியே முயற்சிக்கின்றது. ஒரு மாதிரி அவரைத் தூக்கி அந்தப் பள்ளத்தாக்கின் அரைவாசித் தூரத்திற்கு தூக்கிக்கொண்டு வரும்போது மீண்டும் ஒரு கோரச் சம்பவம் நடக்கிறது. அதுதான் அவர் மீண்டும் பள்ளத்தாக்கில் விழுந்து விடுகிறார்.

சொல்ல வந்த விடயம் விஜய்யின் தொடர் தோல்விகள் பற்றியது…புரியாதவர்கள் இதுதான் கதையென்று நம்பி படத்தைப் பார்க்காமல் விடவேண்டாம்.

சிவராணி – ரொரன்ரோ

**என்ன சார் விக்கிலீக்ஸ் உங்களது அந்தரங்கத் தகவல்களையும் வெளிப்படுத்தியுள்ளதாமே?**

இது ரொம்ப ஓவரா தெரியல்ல….வீக்னெஸ்சான விடயங்களை அம்பலப்படுத்துவதுதான் விக்கிலீக்ஸ். ஆக, வீக்கே இல்லாத வோக்கிங் தான் ஹலோ மோகனின் பாதை.



தக்ஷாயினி – மிஸிசாக்கா

**உலகில் சிறந்த செக்ஸியான பெண் என்று யாரைக் கருதுகிறீர்கள்?**

குழந்தைத்தனமான அழகுடன் பலரின் உள்ளத்தைக் கட்டிப்போட்டுள்ள கத்ரீனா கைப் (Katrina Kaif) தான் இப்போதைய சொயிஸ். லண்டனில் இருந்து வெளிவரும் ஈஸ்டன் ஐ நியூஸ் பேப்பர் கூட உலகிலேயே சிறந்த செக்ஸியான பெண் என்று 26 வயதுடைய காத்ரீனா கைப்பை மீண்டும் தேர்வு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடையீர்!

தங்களின் Oct-Dec 2010 தூறல் இதழ் பார்த்தேன். தூறலில் உள்ள ஒவ்வொரு சாரலும் மிகவும் தரமாக உள்ளது. தங்களின் தூறல் தொடர்ந்து பெரு மழையாக பொழிய என் மனப்பூர்வமான வாழ்த்துகள் உரித்தாகட்டும்.

பவானி சந்திரன் - மார்க்கம்

வடிவேலு பக்கம் அபாரம். கற்பனையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கனடாவில் வடிவேலுவை வைத்துப் பார்த்த போது சிரிப்பை அடக்க முடியவில்லை. பஸ்ஸில் இருந்தவர்கள் ஒரு கணம் என்னை வித்தியாசமாகப் பார்க்க வைத்த தூறலுக்கு வாழ்த்துக்கள். உங்கள் கற்பனைகளை இன்னும் இன்னும் அவிழ்த்து விடுங்கள் நாங்கள் சந்தோசப்படுவதற்கு.

தேவா - ஸ்காபரோ

"ஆண் பிழை செய்யவென சந்தர்ப்பம் நோக்கிக் காத்திருப்பவன்" என்ற வசனத்திற்கு என்னுடைய எதிர்ப்பை தெரிவிக்கிறேன். ஒரு சில ஆண்களை வைத்து அனைவரையும் குறை சொல்லக் கூடாது. ரஞ்சனி ஒரு பக்கச் சார்பாக எழுதுவதை தவிர்க்கலாம். மேலே குறிப்பிட்ட வசனம் பெண்களுக்கும் பொருந்தும் என்பதை நினைவில் கொள்ளவும்.

சந்திரன் - மிசிசாகா

தூறல் மிகவும் அற்புதமான இதழ். பார்த்ததும் வாசிக்கத்தோன்றும் அழகும். அற்புதமான ஆக்கங்களும். நாலாவது இதழைப் பார்த்தபின்பு தூறல் தொடர்ந்து தூறும் என்ற நம்பிக்கை துளிர்விட ஆரம்பித்துள்ளது. வாழ்க. வளர்க.

திருமதி சுசிலாதேவி - ஸ்காபரோ

வடிவேலு பக்கம் வித்தியாசமான கற்பனை. ரசிக்கக் கூடியதாக இருந்தது வாழ்த்துகள்.

பாபு – பிக்கரிங்

"தமிழன் தலைவருக்காகக் காத்திருக்க மாட்டான்". இரட்டை அர்த்தம் தொனிக்கும் வசனம். "மக்கள் தோற்றுவிட்டார்கள்" இந்த இரண்டும் கவனத்தை ஈர்த்தது. எப்படி எழுதினாலும் சிலரை மாற்றமுடியாது. அவர்கள் மாறவும் மாட்டார்கள்.

சிவா – எற்ரோபிக்கோ

ஓட்டிசம் ஆக்கம் அருமை. இது பற்றி தொடர்ந்து எழுதி ஒரு சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தவும். இன்று எத்தனையோ குடும்பங்கள் இதை வெளியில் கூறாமல் மூடிமறைத்து குழந்தைகளின் எதிர்காலத்தை பாழாக்குகின்றனர்

தேவராணி - ஏஜன்ட்கோட்

ஹலோ மோகனுக்கு கிக்கு கொஞ்சம் காணாது போல் தோன்றுது. எதிலயும் ஒரு கிக்கு வேணும் சார்.

கருணா – ஸ்காபரோ

கனடாவில் தமிழ்ச் சஞ்சிகைகளுக்கு எதிர்காலமே இல்லை... என்று கவலை கொண்ட எனக்கு தூறலின் சாதனை பிரமிக்கவைக்கின்றது. கடந்த வருடம் 4 இதழ்கள் விடுவதாக அறிவித்தீர்கள்...4 ஐயும் அபாரமாக வெளியிட்டீர்கள்... இதை ஒரு சாதனையாகவே வாசகனாகிய நான் கருதுகின்றேன். தூறல் தொடர்ந்து வெளிவர இறைவனை மட்டுமே என்னால் வழிபட முடியும். நன்றி.

முருகன் - மிடோவேவ்

தூறல் சஞ்சிகையில் பலமா? பலவீனமா? என்ற கட்டுரை பார்த்தேன். நல்ல அழகாக ஆணின் பலம் என்று கூறிக்கூறியே பெண்ணின் பலத்தை ஒப்புக்கொள்ளும் சமுதாயத்தை காட்டிய விதம் பிடித்துள்ளது. அழகுற பெண்வலிமை உடையவள் என்ற உண்மையை சுருங்கக் கூறி விளங்க வைத்த ரஞ்சனியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. கட்டுரை சிறிதானாலும் மனதை கவர்ந்த வரிகள் கொண்டது கட்டுரை. கட்டுரைக்கு நன்றி.

நன்றியுடன் வாணி

To the Editor,

I read the article இது பலமா. இல்லைப் பலவீனமா? written by ரஞ்சனி.

This is an intelligent piece of writing. Some interesting questions have been asked about the social stereotypes of gender. The article underlines the need to confront and challenge the traditional gender stereotypes.

**Maithili**

I read your magazine. Each and every page was very very good to read, very very intelligent and knowledgeable. I will definitely try to get the other Jan issue.

Thank you very much

**Vijayaluxmee - Scarborough**

ஹலோ மோகன்.

எறும்புகளைப் போல் சுறுசுறுப்பாக வாழ். ஆண் பெண் குழந்தைகளை நீங்களே தீர்மானிக்கலாம். எங்கிருந்தையா எடுப்பீர் இதற்கான பதில்களை. ஆபாரம். வாழ்த்துகள்.

ரஞ்சன் - மிசிசாகா

# உங்களிடம் இருந்து எதிர்பார்த்தவை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கு ஆபத்து!



ஹெல்த் கனடாவினால் வருடாவருடம் நூற்றுக்கணக்கான குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபயோகப் பொருட்கள் வியாபார நிலையங்களில் இருந்து அப்புறப்படுத்தப்படுவது பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஈயம் அல்லது Lead எனப்படும் ஒரு வகை உலோகம் மேற்குறிப்பிட்ட பொருட்களில் அதிகமாகக் கலந்திருப்பது கண்டுபிடிக்கப்படுவதை அடுத்தே இவற்றுக்கான தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

ஹெல்த் கனடாவினால் பலவிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள போதிலும் இவ்வகை ஈயம் கலந்த விளையாட்டுப் பொருட்கள் ஏதோ ஒரு வழியில் (Lead free என்ற வாசகத்துடன்) விற்பனைக்கு வந்துவிடுகின்றன.

ஈயம் ஒரு பாரமான உலோக வகையைச் சேர்ந்தது. இதனது துகள்களாகும் தன்மையினால், தொடுகையின்போது இலகுவாக நமது இரத்தத்தில் கலந்து விடுகின்றது. இது அநேகமாக Plastic பொருட்கள், costume jewelry, toys, paints, rubber, ceramics, dolls, lipsticks, rain coat போன்ற அன்றாடம் பாவிக்கும் பல பொருட்களில் காணப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன.

இது பற்றிய ஹெல்த் கனடாவின் அறிவுறுத்தலின்படி குழந்தைகள் பாவிக்கும் பொருட்களில் மிக அதிக கவனம் எடுக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. Pacifier, baby bottle nibbles, crib toys, வாய் ஊடாக உபயோகிக்கும் இசைக் கருவிகள், குழந்தைகளின் தளபாடங்கள், வண்டில்கள், உணவு ஊட்டும் மேசைகள், உணவுப் பாத்திரங்கள் மற்றும் மேசை விரிப்புகள் போன்ற பொருட்களை கொள்வனவு செய்யும்போது மிகவும் அவதானமாக பெற்றுக்கொள்ள வேண்டுமென நுகர்வோர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

ஈயக்கலப்படம் உள்ள பொருட்களின் ஈயத்தின் அளவு, PPM (Part Per Million) என்ற அடிப்படையிலேயே அளவிடப்படுகின்றது. ஹெல்த் கனடாவின் அறிவுறுத்தலின்படி இந்த ஈயத்தின் அளவு எந்த ஒரு பொருளிலும் 65 PPM க்கு மேல் இருக்கக் கூடாது. ஆனால் இன்றைய வியாபார உலகில் (made in China) இது பற்றிய அக்கறை உற்பத்தியாளர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

## "அம்மா... இதில ஈயம் இருக்கு வேண்டவே வேண்டாம்..."

அதேவேளை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் ஈயத்தின் அளவு குழந்தைகளுக்கு முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்கிறார்கள். இரத்தத்தில் சேர்ந்துள்ள மிகச் சிறிய அளவு ஈயம் குழந்தைகளின் கல்வி கற்கும் ஆற்றல், மூளை விருத்தி, IQ திறமைகள், கவனமின்மை, மறதி, hyper activity, வயிற்றுவலி, தலையிடி மற்றும் வாந்தி போன்ற பல பாதிப்புக்களை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குழந்தைகளின் இரத்தத்தில் இருக்கக்கூடிய ஈயத்தின் அளவை ஒரு slow killer என்றும், ஈயத்தின் அளவு இரத்தத்தில் அளவுக்கதிகமாகும் போது நரம்பு மண்டலம் பாதிப்படைந்து மரணம் அல்லது வலிப்பு (seizures) போன்றவை ஏற்படலாமென மேலும் கூறுகின்றார்கள்.

கண்ணால் பார்த்தோ அல்லது தொடுகை மூலமாகவோ ஈயக்கலப்படத்தைக் கண்டுபிடிப்பது மிகவும் சிரமமான ஒரு விடயம். ஆனால் dull (பிரகாசம் குறைந்த) மற்றும் grey வர்ணங்களைக் கொண்ட உலோகங்களின் உபயோகம், அதிகமான நிறையைக் கொண்டிருக்கும் விளையாட்டுப் பொருட்கள், அதி பிரகாசமான வர்ணங்கள் (orange and red) கொண்ட மினுமினுப்பான பொருட்கள், மென்மையான plastic இனால் செய்யப்பட்ட பொருட்கள், அளவுக்கு மீறிய பாரமான costume jewelry கள், Paint இனால் முலாமிடப்பட்ட பொருட்கள் போன்ற பல பொருட்களைத் தவிர்க்க முடியும்.

இது போன்ற பல வழிகளில் ஈயக்கலப்படமுள்ள பொருட்களை அடையாளப்படுத்த முடிந்தாலும் நீங்கள் lead test kits ஐ வாங்கி பரிசோதிப்பதன் மூலமே அவற்றை நூறு சதவீதம் உறுதி செய்துகொள்ள முடியும். இதற்கான நேரம் மற்றும் வசதிகள் எம்மிடம் உள்ளனவா என்பது மற்றைய கேள்வி.

அத்துடன் குழந்தைகளின் பாவனைப் பொருட்களில் உள்ள ஈயக்கலப்படத்தில் கவனம் செலுத்துவது மட்டுமல்லாமல் குழந்தைகளின் இரத்தத்தில் எற்கனவே இருக்கக்கூடிய ஈயத்தின் அளவை அறிவதும் கட்டாய தேவையாகின்றது.

ஈயக்கலப்படமுள்ள பாவனைப் பொருட்களினாலோ அல்லது வேறு பல புறக் காரணிகளினாலோ ஒரு குழந்தையின் இரத்தத்தில் ஈயம் கலந்திருப்பது இன்றைய காலகட்டத்தில் தவிர்க்கப்பட முடியாததொன்றாகவே இருக்கின்றது. நீங்கள் எப்படி கவனமாக இருந்தாலும் உங்கள் குழந்தைகள் ஏதாவது ஒரு வகையில் ஈயத்தை உள்வாங்கிக்கொள்கிறார்கள். இதனால் ஈயத்தை அளவீடு செய்யும் இரத்தப் பரிசோதனை மூலம் உங்கள் குழந்தையின் இரத்தத்தில் உள்ள ஈயத்தின் அளவைக் கண்டுபிடிப்பது அவசியமாக இருக்கிறது.

இரத்தத்தில் ஈயத்தின் அளவு ஒரு டெசி லீற்றருக்கு (decilitre) 10 மைக்ரோ கிராம் (micrograms) அளவாக இருந்தால் அது பாதுகாப்பான நிலையாக கருதப்படுகிறது. இது 25 மைக்ரோ கிராமுக்கு மேல் உயர்ந்திருந்தால் வைத்தியர்களால் அவதானிக்கப்படுகிறது. அதேபோல் 40 மைக்ரோ கிராமுக்கு மேற்பட்டிருந்தால் ஈயத்தை இரத்தத்தில் இருந்து நீக்குவதற்கான சிகிச்சை முறைகள் கொடுக்கப்படுகின்றன. உடலும் சூழலும் மாசுபடிந்துவரும் இன்றைய உலகில் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் மிகவும் கவனம் எடுத்தல் அவசியம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழர் நிர்வாகத்தில்
தொடர்ச்சியாக
20 வருடங்களுக்கு மேலாக
இயங்கிவரும் ஸ்தாபனம்...

SPECIALIZING CUSTOM MADE KITCHEN CABINET, COUNTER TOP BAR

# MAXWOOD KITCHEN INC.

BUY DIRECT FROM MANUFACTURERS

- Free Estimate
- Renovation
- Store Fixture
- Vanity & Vanity Top
- Complete Kitchen
- Rangehood
- Granite Counter Top

1120 Tapscott Road, Unit 1, Scarborough - Ont. M1X 1E8 (McNicoll & Tapscott)

Tel: 416-332-1539 Fax: 416-332-0129

Web: www.maxwoodcanada.ca E-mail: maxwoodcanada@hotmail.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்சம்



சிலர் செல்பேசியை தொலைப்பார்கள், பின்னர் கண்டு பிடிப்பார்கள். சிலர் பேனாவை தொலைப்பார்கள், பின்னர் கண்டுபிடிப்பார்கள். சிலர் சாவியை தொலைப்பார்கள், பின்னர் கண்டுபிடிப்பார்கள். நான் ஒருமுறை என் காரை தொலைத்தேன்.

அன்று ரொறொன்ரோவில் பனிகொட்டி கால நிலை மோசமாகும் என்று ரேடியோவில் அறிவித்தல் வந்துகொண்டிருந்தது. ஆஸ்பத்திரிக்கு அவசரமாகப் போய்ச் சேர்ந்தேன். மருத்துவர் கொடுத்த நேரத்துக்கு அவருடைய வரவேற்பறையில் நிற்கவேண்டும். இன்னும் ஐந்து நிமிடம் மட்டுமே இருந்தது. அந்த ஆஸ்பத்திரியில் கார்கள் நிறுத்துவதற்கு நாலு தளங்கள் இருந்தன. ஒவ்வொன்றிலும் பல பிரிவுகள். ஒவ்வொரு கார் தரிக்குமிடத்திலும் ஒவ்வொரு கார் நின்றது. கார்கள் வரிசையாகச் சுற்றிச் சுற்றி தரிப்பதற்கு இடம் தேடின. நானும் பலதடவைகள் சுற்றி இடம் கண்டுபிடித்து காரை நிறுத்திவிட்டு மருத்துவரிடம் ஓடினேன்.

பின்மதியம் இரண்டு மணியளவில் மருத்துவரைப் பார்த்துவிட்டு திரும்பி வந்தபோது எங்கே காரை நிறுத்தினேன் என்பது மறந்துவிட்டது. எந்த தளம் என்பது கூட நினைவில் இல்லை. எந்தப் பிரிவு எந்த தரிப்பு இடம் என்பது சுத்தமாக மூளையிலிருந்து அகன்றுவிட்டது. நிதானமாக ஒவ்வொரு காராக தேடிக்கொண்டே வந்தேன். இப்பொழுதுதான் அப்படி எழுதுகிறேன். ஆனால் உண்மையில் இங்குமங்குமாக ஒருவித ஒழுங்குமின்றி தேடித்தேடி சுற்றினேன். காரைக் காணவில்லை.

என் கையிலே கார் சாவி இருந்தது. அதை அழுத்தினால் காரின் முகப்பு வெளிச்சம் எரியும். நான் கையை முன்னுக்கு நீட்டி, ஒவ்வொரு செக்கண்டும் சாவியை அழுத்தியபடி தேடிக்கொண்டே வந்தேன். அப்பொழுதுதான் அந்த வெள்ளைக்கார தம்பதியினரைக் கண்டேன். மனைவியை கணவன் சக்கர நாற்காலியில் உட்காரவைத்து தள்ளிக்கொண்டு போனார். அவருக்கு வயது 45 இருக்கலாம். மனைவிக்கு அதனிலும் குறைவு. மனைவிக்கு உற்சாகம் காட்டுவதற்காக ஏதோ உரத்து சொல்லிக்கொண்டே நடந்தார். மனைவி ஒரு காலத்தில் அழகாக இருந்திருப்பார். மெலிந்து 70 றாத்தல் எடையில் நாற்காலியை பாதிகூட நிறைக்காமல் தலை ஒரு பக்கம் விழுந்துபோக இருந்தார். தலையில் கத்தை கத்தையாக தலமையிர் உதிர்ந்துபோய் கிடந்தது. கணவர் சொன்னதைக் கேட்டு சிரிக்க முயன்றார். ஆஸ்பத்திரி நுழைவு வாயிலை நோக்கி என்னைத் தாண்டிப் போனவர் நான் சாவியை அமத்தியபடி தேடி வருவதை கவனித்தார். “காரை தொலைத்துவிட்டீர்களா?” என்றார். “கார் எங்கேயோ நிற்கிறது. நான்தான் தொலைந்துவிட்டேன்” என்றேன். பாதி சிரிப்புடன் “தேடுங்கள் கிடைக்கும். நீங்கள் நாயை தொலைக்கவில்லை. பூனையை தொலைக்கவில்லை. அவை நகர்ந்து கொண்டேயிருக்கும். தேடிப்பிடிப்பது கஷ்டம். உங்கள் கார் நகராமல் அதே இடத்தில் நிற்கும். கண்டுபிடிப்பீர்கள்” என்று சொன்னார். பின்னர் அப்படியே நாற்காலியுடன் மறைந்துபோனார். நான் மறுபடியும் தேடுதலை ஆரம்பித்தேன்.

ஒரு மணி நேரம் மேலும் கீழுமாக, எல்லா பிரிவுகளிலும் தேடியும் கார் கிடைக்கவில்லை. அதிசயமாக இருந்தது. ஒரு தூணுக்கு பக்கத்தில் வலப்புறமாக நிறுத்தியது மட்டும் ஞாபகத்தில் இருந்தது. மீண்டும் வலப்புறத்தில் தூண் இருக்கும் தரிப்பு இடங்களை மட்டும் தேடியபடி முன்னேறினேன். சாவியை அழுத்தவும் தவறவில்லை. ஒரு முகப்பு வெளிச்சமும் எரியவில்லை, வயிறுதான் எரிந்தது. எல்லா தளங்களும் நீள அகலமாக இருந்ததால் நடந்து நடந்து கால்களும் களைத்துவிட்டன. கார் தரிப்பு நிலைய அதிகாரியிடம் சென்று என் பிரச்சினையை சொன்னேன். அவர் தினம் தினம் நடக்கும் ஒரு சங்கதியை கேட்பதுபோல என்னைப் பார்த்தார். பின்னர் “மன்னிக்கவேண்டும். வாடிக்கைக்காரர்களைவிட்டு என்னால் இப்ப வரமுடியாது. இன்னும் ஒரு மணிநேரத்தில் என் கடமை முடிகிறது. அப்பொழுது வந்து நான் உங்களுக்கு உதவி செய்வேன்” என்றார்.

மறுபடியும் நான் தேடத்தொடங்கினேன். இரண்டு மணிநேரம் ஆகியிருக்கும். வெளியே ஓர் அடி உயரத்துக்கு பனி கொட்டிவிட்டது. அப்போது நான் முன்பு பார்த்த மனிதர் திரும்பவும் வந்தார். இப்போது நாற்காலியும் இல்லை, மனைவியும் இல்லை. என்னைப் பார்த்துச் சிரித்து “இன்னமுமா தேடுகிறீர்கள்?” என்றார். “கார் அதுவாக ஓடவில்லை. இங்கேதான் எங்கேயோ நிற்கிறது” என்றேன். அவர் மனைவியை மருத்துவர்கள் பரிசோதிக்கிறார்கள். அவர் வீட்டுக்குப் போய் சில சாமான்கள் எடுத்து வரவேண்டும். தன் காரை நோக்கி சென்றவர் திரும்பவும் என்னிடம் வந்தார். என்ன கார் என்று கேட்டார். சொன்னேன். என்ன நிறம். சொன்னேன். தகடு இலக்கம். அதையும் சொன்னேன். கார் சாவியை கேட்டார். கொடுத்தேன். ஒவ்வொரு தளமாக அவர் கார் சாவியை அமத்தியபடி வர நான் எதிர் முனையிலிருந்து தேடிக்கொண்டே அவரை நோக்கி நடந்தேன். பத்து நிமிடமாகியிருக்கும். ஒரு தூணுக்கு பக்கத்தில் கார் வெளிச்சம் பத்தி பத்தி நூர்ந்தது. “அதுதான் அதுதான்” என்று அலறினேன். அவர் சாவியை நீட்ட நான் அவருக்கு நன்றி கூறினேன். அவர் பெயரைக் கேட்டேன். “என் பெயரை தெரிந்து என்ன செய்யப்போகிறீர்கள்?” என்று சொன்னார். “உங்களுக்கு நான் ஒன்றும் திருப்பி செய்யவில்லை. உங்கள் பெயரையாவது ஞாபகத்தில் வைத்துக்கொள்கிறேன்.”

“நோம்” என்றார்.

“உங்கள் மனைவி சீக்கிரம் குணமடைந்து வீட்டுக்கு வருவார்.”

“இனிமேல் வரமாட்டார்.”

அவர் முகம் மாறியது. ஏன் சொன்னோம் என்று ஆகிவிட்டது.

எனக்கு பின்பக்கத்தை காட்டியபடி காரை நோக்கி நகர்ந்த அவர் திரும்பாமல் கையை தூக்கி அசைத்து விடைபெற்றார். ●

அ.முத்துலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோம்பித் திரியேல்...!

ஒன்றுமே செய்யாமல் சோம்பிக் கிடப்பவனை ஊரிலே சோம்பேறி என்று சொல்லி அழைக்கத் தொடங்கிவிடுவார்கள். அதுவே உளரீதியாக அவர்களைப் பாதிப்பதால், மேற்கொண்டு எதுவும் செய்யமுடியாமல் அவர்களைத் தடுத்துவிடும். அந்த நிலையில் இருந்து விடுவித்துக் கொள்ள அவர்கள் பழகிக் கொள்ள வேண்டும். அதனால்தான் சோம்பிக் கிடக்கும் குழந்தைகளைப் பார்த்து, 'ஓடிவிளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கல் ஆகாது பாப்பா' என்கிறார் புதுமைக்கவி பாரதியார். உடற்பயிற்சி செய்தால் உடல் நலமாக இருக்கும். உடல் நலமாக இருந்தால்தான் உளநலன் பேணமுடியும்.

'இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர்.'

இதையேதான் முயற்சி செய்வதில் அக்கறையின்றிச் சோம்பேறிகளாய் வாழ்பவர்கள் இகழ்ச்சிக்கு ஆளாவார்கள் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். அதனால்தான் எமது முன்னோர்கள் இளைஞர்களைப் பார்த்து 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்று எப்போதும் குறிப்பிடுவர்.

சோம்பல் தோல்வியைத்தான் தரும். அதனால் பல பிரச்சனைகள் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஒரு இலட்சியத்தை அடைய வேண்டுமானால், மனம் தளராது முயற்சி செய்ய வேண்டும். அப்படி முயற்சிக்கும்போது கட்டாயம் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். நம்பிக்கைதான் வாழ்க்கை என்பதால், மிகுந்த நம்பிக்கையோடு முயற்சி செய்ய வேண்டும்.

**700 மீற்றர் ஆழமான பாதாளச் சுரங்கத்தில் இருந்து 69வது நாள் உயிரோடு மீட்டனர்....**

'முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.'

என்று திருவள்ளுவர் இன்னுமொரு இடத்தில் இதைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். சாதனையாளர்களைப் பாருங்கள், அவர்கள் எல்லாம் சோம்பலை உதறித் தள்ளியவர்கள். ஒரு கணமும் ஓய்ந்திருக்காது ஊக்கத்தோடு உழைப்பவர்கள். அவர்களது வெற்றிக்குக் காரணம் இடைவிடாத பயிற்சியும், கடின உழைப்புமேயாகும்.

சமீபத்தில் சிலி நாட்டில் நடந்த ஒரு சம்பவம் இதற்கு நல்ல உதாரணமாகும். சிலி நாட்டு செம்புச் சுரங்கத்தில் ஏற்பட்ட ஒரு விபத்தில் பாதாளத்தில் வேலைசெய்து கொண்டிருந்த 33 பணியாளர்களும் உள்ளே அகப்பட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்றே பல நாட்களாகத்



-குரு அரவிந்தன் பக்கம்-

தெரியவில்லை. சிலி நாட்டு ஜனாதிபதியின் விடாமுயற்சியால், தீவிரமான தேடுதலின் பலனாக 17ம் நாள் அவர்கள் பாதாளச் சுரங்கத்தில் உயிரோடு இருப்பது தெரியவந்தது. அவர்கள் அத்தனைபேரையும் 700 மீற்றர் ஆழமான பாதாளச் சுரங்கத்தில் இருந்து 69வது நாள் உயிரோடு மீட்டனர். முடியும் என்ற நம்பிக்கை, இடைவிடாத முயற்சி, கடின உழைப்பு, திட்டமிட்டுச் செயற்படுத்தல் இவை எல்லாம் ஒன்று சேர்ந்து அவர்களை உயிரோடு மீட்க உதவி செய்தன. இதையேதான் ஒளவையார் ஆத்திசூடியில் 'ஊக்கமது கைவிடேல்..!' என்று சொல்லிச் சென்றார். வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு, கடந்து போன காலம், தவறவிட்ட சந்தரப்பம் எதுவுமே திரும்பி வரப் போவதில்லை. எனவே இதை மனதில் நிறுத்தி, சோம்பிக் கிடக்காமல் உங்கள் இலட்சியத்தை நோக்கி நடைபோடுங்கள். நிச்சயம் ஒருநாள் வெற்றி கிடைக்கும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-கலைவாணி

# பிரிவுத் துயரின் வேதனைகளை இனிமையாக்குங்கள்...



**ரொமான்ஸ்** என்ற புத்தகத்தின் அழகிய இருண்ட பக்கங்கள் தான் "பிரிவும் காத்திருப்பும்". இந்தப் பிரிவுகளும் அதனால் ஏற்படுத்தப்படுகின்ற காத்திருப்புக்களும் தான் ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் நேசத்தின் அளவை மீளாய்வு செய்யும் உணர்வு பூர்வமான தருணங்கள். அருகில் இருந்தால் அருமை தெரியாது என்பார்கள். அந்த வகையில் பிரிதலை பொசிட்டிவ்வான சிந்தனையுடன் எதிர்கொண்டு, பிரிதலின் உணர்வுகளை புரிந்து, வாழ்வியலின் இன்பங்களை அறிதல் வேண்டும்.

"எப்ப அவன் வருவானோ... எப்ப அவன் என்னை அணைப்பானோ..." என்ற ஏக்கத்துடனான காத்திருப்புகள் நிச்சயம் தம்பதியினரின் இல்லற வாழ்க்கையின் ரொமான்ஸ் உணர்வுகளுக்கு உத்வேகம் கொடுக்கும் டானிக்காக இருக்கும்.

சங்ககால இலக்கியங்கள் முதல் இன்றைய வாழ்வியல் இலக்கியங்கள் வரை பிரிவுகளும் காத்திருப்புக்களும் அடையாளப்படுத்தப்பட்ட ரொமான்ஸ் உணர்வுகளை மேலும் ஆரோக்கியமாக்கும் ஒரு விடயமாகவே கருதப்படுகின்றது. நெடுநல்வாடையின் போர்க்கால பிரிதல்களும் காத்திருப்புக்களும் சங்க இலக்கியங்களில் மிகவும் அழகானவை. பிரிதலின் ஆழமான வேதனை வெளிப்பாடுகள் வித்தியாசமான உணர்வுகளை கொடுக்கவல்லன. இந்த வித்தியாசமான வேதனையின் உணர்வுகளை புரிந்து கொள்வது மட்டுமல்லாமல் அதை அனுபவிக்கவும் பழகிக்கொள்ள வேண்டும்.

சிந்துவுக்கு இருப்புக்கொள்ளவே இல்லை... அவன் வேலைவிடயமாக அயல் நாட்டுக்குச் சென்று ஒரு வாரமாகிவிட்டது. இன்னும் ஒரு கிழமைக்கு அவள் தனது தனிமையை சமாளித்தே ஆக வேண்டும். அவளது இரவு நேர ஒவ்வொரு மணித்துளியும் ரணவேதனையுடனேயே கழிந்து கொண்டிருந்தது. தொலைபேசியை நோக்கிய விழிகளும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது உடைகளை அணிந்து உறவாடும் உணர்வுகளும்... அவனுடன் கால் பதித்த தடங்களும்... திருமண நாளின் சந்தோஷங்களும்... முதலிரவின் ஆண்மையும்... என்று ரொமான்ஸ் மீளாய்வுகள் தொடர்ந்துகொண்டே இருந்தன. அவனும் அதே உணர்வுகளுடன் அவளுக்கான நாட்களை எண்ணியபடி எதிர்பார்த்துக்கொண்டிருப்பான். "நீ ஆடை அணிகலன் சூடும் அறைகளில் ரோஜா மல்லிகை வாசம்...." என்று தொடங்கி... La Senza வரை ஏறி இறங்கி அவளது ரசனைக்கேற்ப பரிசுப் பொருட்களை வாங்கிவிடுவான். "என்ன... நேற்றுத்தான் கல்யாணம் நடந்த மாதிரி..." என்று அவள் இழுக்க... "ஆமா நேற்றுத்தானடி..." என்று அவன் இழுத்தணைக்க....ரொமான்ஸ் தொடரும்.

எப்படி இவர்களால் பிரிவிலும் சந்தோஷமாக இருக்க முடிகிறது? சிறந்த நண்பர்களாக இருந்து... ஒருவரின் ரசனையை மற்றவர் புரிந்து கொண்டு... ரொமான்ஸ் உணர்வுகள் மூலம் தம்மை பிஸியாக வைத்திருப்பதாலேயே இது சாத்தியமாகின்றது. அவர்களுக்கிடையிலான மாறாத காதல்... எப்படியும் தனது துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க நினைக்கும் மனசு... என்று இவர்களது வாழ்க்கை இறுதிக் காலம் வரை சுவாரஸ்யமானதாக அமைந்துவிடும்.

அளவுக்கு அதிகமான அன்பும்... அரவணைப்பும் கொண்ட தம்பதியினரின் ரொமான்ஸ் உணர்வுகள்
தோற்கடிக்கப்படுவதில்லை.
மாறாத மகிழ்ச்சியும் மனதான அன்பும் கொண்டு அந்நியோன்யமாக வாழும் தம்பதியினருக்கு மனதில் சோர்வுகளோ, உடலில் சோர்வுகளோ கிட்டவும் நெருங்காது என்பது உளவியலாளர்களின் அண்மைக்கால கருத்து.
ஆக...
சுவாரஸ்யமான திருமண வாழ்வின் ரகசியம்
தினம் தினம் காதலில் விழுவது தான்...!!!

# A Friend...

You're there,
When I need you,
While others,
Are untrue,

From morning,
Tonight,
All we do,
Is fight,

Then we joke,
And we smile,
Even just,
For a while.

We laugh,
We cry,
But we never,
Say bye,

We'll search,
And we'll find,
But never get off,
Each others minds,

As friends,
We now meet,
But as sisters,
Together we'll flee,
Partners in crime,
We sneak out,
But when in trouble,
We don't back out,

The path we've
taken,
Is just a beginning,
To many more
surprises,
That are awaiting,

Your friendship truly
means,
So much to me,
It's something
special,
That only we will see,

And friendship,
Being one,
Stays with us,
Even as we continue
to run...

**By, Saakethiya Sriranjan**

# கவித் தூறல்

காத்திருக்கிறேன்...!
விடியலுக்காய் மட்டும் அல்ல...
என் வாழ்வின் விடியலுக்குமாய்...
காத்திருப்புகள் நீளுகின்றன...
விடியலை மட்டும் காணவில்லை...

பிரியா - ஸ்காபரோ

தூரிகை தொடாத ஓவியம்
தூறல் தராத வானம்
சாரலில் நனையாத கிடுகு
காற்றில் ஆடாத சருகு
கரைகள் காணாத அலை
கவிதை எழுதா பேனா
காதல் அறியாத என் மனது
எல்லாம் அழகு பெற காத்திருக்கின்றன
நீ சொல்லப்போகும் வார்த்தை கேட்டு...!

நிரோஸ் - டோகா

**கவிதை தலைப்பை நீங்களே தெரிவு செய்யலாம்!**
கவிதைகள் 8 வரிகள் அல்லது 32 சொற்களுக்கு மிகாமல் எழுத வேண்டும்.
P.O. Box 4056 McCowan Square, 1235 McCowan Road,
Scarborough, Ontario M1H 0A4
Fax : 416 273 7606 E-mail : editorial@thooralonline.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாவும் விடையும்

# கவிதை என்றால் என்ன?

**வி.கந்தவனம்**

இக்காலத்தில் கவிதை என்றால் என்ன என்று தெரியாமலே பலர் கவிதை எழுதுகின்றார்கள். சமயம் தெரியாதவர் சமயம் பேசுவதைப் போல.

சமையல் தெரியாத மனைவி தயாரித்த உணவைக் கணவன் அவள் மீதுள்ள காதலால் சுவையாக இருக்கிறது என்று சொல்லி உண்ட கதைபோல கவிதை தெரியாதவர் எழுதும் கவிதைகளும் அவர்களது நண்பர்களால் போற்றப்படுகின்றன.

இந்த நிலை முற்காலத்தில் இருக்கவில்லை. தகுதி அற்ற படைப்புகளுக்கு அறிஞர் அங்கீகாரம் வழங்கவில்லை. அது சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மன்னர் காலம். இது மக்கள் காலம். காலம் மாறினாலும் தகைமை, தகுதி, தரம் என்பன வளர்ந்து கொண்டு வருகின்றனவேயன்றிக் குன்றிப்போகவில்லை. தரமான கவிதைகள்தாம் தமிழை வளர்க்கும். தரமான கவிதைகள்தாம் நின்று நிலைக்கும். தரமான கவிதைகளை ஆக்க விரும்புகின்றவர்தாம் கவிதை என்றால் என்ன என்று அறிய முற்படுவர். அவர்களுக்குச் சில அறிவுரைகள்:

கவிதை ஓர் ஒப்பற்ற கலை - இலக்கியத் துறை. எந்தத் துறை என்றாலும் அதுபற்றிய அடிப்படை அறிவு இன்றி அதில் இறங்குதல் நல்லதல்ல.

கவிதையை விளக்குவது கடினம் என்றுதான் பலர் சொல்லிவருகிறார்கள். கவிதை என்றால் என்ன என்று அறிய விரும்புகின்றவருக்கு அதனை விளக்குவது கடினம் என்று சொல்லி நாம் சமாளிக்க முடியாது.

கவிதை என்றால் என்ன என்பதற்குக் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை,

உள்ளத்தில் உள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்து உரைப்பது கவிதை

என்று விடை தருகின்றார்.

'... in its widest sense, poetry is creation or invention of ideal beauty.'

என்று விளக்கம் தருகின்றார் R.F. Brewer என்ற அறிஞர். இவருடைய விளக்கத்தில் poetry என்ற சொல்லை எடுத்துவிட்டு அந்த இடத்தில் art என்ற சொல்லை வைத்தால் விளக்கம் ஓவியத்துக்கும் பொருந்துவதாகவுள்ளது. உண்மையில் ஓவியர் வண்ணங்களாற் செய்வதைக் கவிஞர் சொற்களாற் செய்கின்றார், அவ்வளவுதான்.

கவிமணியின் விளக்கம் கவிதையின் இயல்புகளையே முன்வைக்கின்றது. புரூவரின் விளக்கம் கவிதைக்கு மட்டுமன்றிப் பிற கலைகளுக்கும் பொருந்தக்கூடிய ஒரு பொதுவிளக்கமாகவே உள்ளது. கவிதை என்றால் என்ன என்ற வினாவுக்கு நான் எனது மாணவருக்கும் பிறருக்கும் கூறிவருகின்ற விடை இது:

கவிதை என்பது உள்ளத்தில் ஊறி, மீறி வளர்ந்து வெளிப்படத் துடிக்கும் உணர்வு ஒன்றுக்கு அழகானதும் அளவானதுமான சொற்களால் கற்பனையும் விற்பனமும் நிறைந்த வடிவம் கொடுத்தல்.


தமிழ்மொழி கவிதையிலே பிறந்து கவிதையிலே வளர்ந்த ஒரு மொழி. அதன் கவிதைப் பாரம்பரியத்தை விளங்கிக்கொள்ளாத எவரும் நல்ல கவிஞராக முடியாது. ●

### இனிப்பான பானங்களை குடிப்பதால் கோபம் குறையும்!

இனிப்பான பானங்களை குடிப்பதால் கோபம் கட்டுப்படும் என்று ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக உளவியல் ஆய்வு இதழ் ஒன்று தெரிவித்துள்ளது. இனிப்பு பதார்த்தங்களை விட, இனிப்பு சுவை உடைய பழச்சாறுகள், பானங்கள் குடிப்பவர்களுக்கு எரிச்சலூட்டும் விஷயங்களோ அல்லது கோபத்தை வெளிக்காட்டும் சம்பவங்களோ ஏற்பட்டால், அவர்களுடைய கோபத்தை மனத்தளவில் கட்டுப்படுத்தி சாந்தப்படுத்துவதாக இந்த ஆய்வு கூறுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rajan Kanagasabai (M.Eng)


# 25 வருடங்களுக்கு மேலாக பாவிக்ககூடிய அணுசக்தியிலான மின்கலம் (Atomic battery)



Radioisotope அணுசக்தியிலான மின்கலம்

மின்கல திறனேற்றல் (Battery Charger) அற்ற மடிக்கணனிப் பொறி (Laptop) அல்லது கைத்தொலைபேசியை உங்களால் நினைத்துப் பார்க்கக் கூடியதாகவுள்ளதா? ஆம் உங்கள் கனவு நிறைவேறும் காலம் மிக தூரத்தில் இல்லை. உலகின் பலதரப்பட்ட பல்கலைக்கழகங்களும், தொழில்நுட்ப நிறுவனங்களும் மேற்கொண்ட ஆராய்ச்சிகளில் பல முன்னேற்றங்கள் கண்டறியப்பட்டுள்ளதோடு மட்டுமல்லாது, பல தொழில்நுட்ப நிறுவனங்கள் பொது மக்களின் பாவனைக்கான அணுசக்தியிலான மின்கலத்தின் (Atomic battery) தயாரிப்பு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

அணுசக்தியிலான மின்கல தொழில்நுட்பமானது 1913 ஆண்டு கென்றி மோசிலியினால் (Henry Moseley) கண்டுபிடிக்கப்பட்டு முதலாவது முன்மாதிரி செய்யப்பட்டது. கடந்த 80 ஆண்டுகளுக்கு மேலாக இதன்



தன்னைத்தானே திறனேற்றக் கூடிய அணுசக்தியிலான மின்கலம்

பாவனையை பொது மக்களுக்குக் கொண்டுவரும் தொழில்நுட்பத்தில் பல தடங்கல்கள் ஏற்பட்டன. ஆரம்பத்தில் கண்டு பிடிக்கப்பட்ட அணுசக்தி மின்கலங்களினால் ஏற்படும் பக்க விளைவுகள் காரணமாக இவ் அணுசக்தி மின்கலங்களானது யாருமற்ற விண்வெளி விஞ்ஞான கூடங்களிலும் மற்றும் மனித நடமாட்டமற்ற பகுதிகளில் உள்ள இயந்திரங்களிலும் மட்டுமே இதுவரை




தன்னைத்தானே திறனேற்றக் கூடிய அணுசக்தியிலான மின்கலம்

காலமும் பாவிக்கப்பட்டு வருகிறது.

இவை எல்லாம் தாண்டி புதிய Radioisotope அணுசக்தியிலான மின்கலத்தை மிஸ்சூரி பல்கலைக்கழக (University of Missouri) விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளார்கள். இந்த மின்கலமானது ஒரு செப்பு நாணயத்தின் அளவுடையது மட்டுமல்லாது 25 வருடங்களுக்கு மேலாக மின்கல திறனேற்றல் இன்றி பாவிக்கவும் கூடியது. அத்துடன் இம் மின்கலத்தின் இன்னுமொரு சிறப்பு, தற்போது சாதாரணமான பாவனையில் உள்ள மின்கலங்களிலும் பார்க்க பத்து லட்சம் மடங்கு அதிக மின்சக்தியையும் வழங்கக் கூடியது.

அத்துடன் Widetronix எனப்படும் தொழில்நுட்ப நிறுவனம் அணுக்கருவினாலான மிகச்சிறிய மின்கலன்களை உருவாக்கியுள்ளார்கள். இம் மின்கலமானது தன்னைத்தானே திறனேற்றக் கூடியது. இப்படிப் பட்ட சிறிய மின்கலமானது சத்திர சிகிச்சை (surgery) செய்து உள்ளே வைக்கப்படும் செயற்கை இதயம் போன்ற கருவிகளுக்குப் பாவிப்பதன் மூலம் மீண்டும் சத்திர சிகிச்சை செய்து மின்கலங்களை மாற்ற வேண்டிய அவசியமில்லை.


எப்படி இந்த சிறிய அணுமின்கலம் இயங்குகிறது?

இந்த தொழில்நுட்பமானது Betavoltaics என அழைக்கப்படுகிறது. இது மெல்லிய சிலிக்கன் படலத்தின் உதவியுடன் கதிர் இயக்கமுடைய வாயுவிலுள்ள இலத்திரன்களை கவர்வதன் மூலம் மின்சாரத்தை உருவாக்குகின்றது. கவரப்படும் இலத்திரன்களின் இயல்புகளையும் அளவுகளையும் கொண்டு மின்சாரத்தின் அளவீடு கட்டுப்படுத்தப்படுகின்றது. இந்த சக்தி கிட்டத்தட்ட சூரியகதிர்கள் மூலம் உருவாக்கப்படும் மின்சக்தியைப் போன்றது.

அணுசக்தியிலான மின்கலத்தின் உற்பத்தி வடிவமானது தற்போதுள்ள Semiconductor ஐப் போல இருப்பதனால்




புதிய தொழில்நுட்பங்கள் எதுவும் இதனை உருவாக்குவதற்குத் தேவையற்றது. உலக தொழில்நுட்ப நிறுவனங்கள் இதற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இன்னும் இரண்டு தொடக்கம் ஐந்து வருடங்களில் அணுசக்தியிலான மின்கலத்தின் பாவனை சாதாரண மின்கலன்களைப் போல வருமென விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள். ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Ontario Vegetarian Food Bank

## CERTIFIED FOOD HANDLERS

Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handler Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.

### Food Handler Training available for:

PSW's, Food service Workers, ECE / ECA Workers, Day Care Providers
Dietry Aides, Cooks, Home Care Workers, Nannies, Restaurateurs.

*Financial assistance may be available to those who qualify

**CALL TO REGISTER : (416) 744 (HELP) 4357**

Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"



Started From
Nov.15, 2010
Mar. 15, 2011

MALAN JOE, B.COMM(HONS),MBA.
CERTIFIED TRAINER.

## Help us to Help the Helpless!

North York: 3005 Islington Ave. (Islington / Steeles) / Scarborough : B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)
www.vegfoodbank.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்லையா மாஸ்ரரின் தீர்க்கதரிசனம்

கலாநிதி.எஸ்.சிவநாயகமூர்த்தி

**1948** ஆம் ஆண்டு யான் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அக்காலத்தில் நெடுந்தீவு மக்களின் கல்வியில் விடி வெள்ளியாகத் திகழ்ந்த அதிபர் திரு. எட்வேட் நவரட்ணசிங்கம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். ஆறாம் வகுப்பில் திரு. க. செல்லையா ஆசிரியர் கணிதபாட ஆசிரியராகவும், சரித்திரபாட ஆசிரியராகவும் கடமையாற்றினார். இவர் கண்ணியமும், கட்டுப்பாடும், கடமை உணர்வும் கொண்டவர். மாணவர்களுக்குச் சிறப்பாகக் கல்வியையும், ஒழுக்கத்தையும் புகட்டிய ஒரு சிறந்த ஆசிரியருமாவார். எல்லா மாணவர்களும் கல்வியைக் கற்றுச் சிறப்புறவேண்டுமென மாணவர்களுக்குப் புத்திமதிகளைக் கூறி அவர்களை நல்வழிப் படுத்துவதற்காக அயராது உழைத்தவர். ஊர்ப்பற்றும் மற்றவர்களுக்குதவிடும் மனப்பான்மையும் கொண்டவர். கண்டிப்பானவர், ஆனால் கருணையுள்ளம் படைத்தவர். சரித்திரம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதில் சிறந்த ஆற்றலுடையவர். உயர் வகுப்பு மாணவர்களுக்கும் இப்பாடங்களைக் கற்பித்துச் சிறந்த பெறுபேறுகளைப் பெறச் செய்தவர். அவரது அறிவுரைகளில் இலக்கியம் சார்ந்த கருத்துக்கள் இழையோடி இருப்பதை அதிகம் காணமுடியும். பின்வரும் புறநானூற்றுச் செய்யுளின் கருத்துக்கள் அவரது அறிவுரைகளை இன்றும் ஞாபகத்திற்குக் கொண்டுவரும்.

உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,

பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!

பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்,

சிறப்பின் பாலால், தாயும் மனந்திரியும்,

ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்,

"மூத்தோன் வருக" என்னாது, அவருள்

அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்,

வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,

கீழ்பால் ஒருவன் கற்பின்,

மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.

ஒரு தாய் வயிற்றுப் பிறந்தவருள்ளும், அவரவர் சிறப்பின் காரணமாகத் தாயும் தன் பாசத்திலே ஓரளவிற்கு வேறுபடுவாள். ஒரு குடிப்பிறந்த பலருள்ளும், மூத்தோனை வருக என்று அழையாது, அறிவுடையோனையே வருக என்று அரசனும் அழைப்பான். வேற்றுமைப்பட்ட நால்வேறு வகையான மக்களுள்ளும் கீழ் நிலையிலுள்ளான் ஒருவன் கல்வி கேள்விகளிலே வல்லானாயின், மேல்நிலையிலுள்ளவனும் அவனுக்கு ஆட்படுவான். இதனால் கஷ்டம் நேர்ந்த இடத்து உதவியும், மிக்க பொருளைக் கொடுத்தும் அதனால் ஏற்படும் இழப்பு, வருத்தம் முதலிய நிலைகளைக் கண்டு மனம் தளராது முயற்சியுடன் அனைவரும் கற்று அறிவுடையவராகி மேம்படுதலே நன்றாகும். இதனால் வாழ்விலும் உயர்ச்சி பெறலாம்... என இச் செய்யுள் கல்வியின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது.

யான் இவரிடம் கல்வி கற்றபோது நடந்த ஒரு சம்பவம் இன்றும் என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளது. அன்றொரு புதன்கிழமை கல்வி அதிகாரி அப்பாடசாலைக்கு வருடாந்த சோதனைக்காக வருகை தரவுள்ளார் எனப் பாடசாலை அதிபருக்கு அறிவிக்கப் பட்டிருந்தது. அன்று பாடசாலை முழுவதும் சுறுசுறுப்படைந்தது. ஆசிரியர்மார்கள் தங்கள் பாடங்களில் மாணவர்கள் செய்த ஆக்கங்களை எல்லாம் கல்வி அதிகாரி பார்வையிடுவதற்கான பல ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். வருடாந்தத் திரட்டுகள் சம்பந்தமான வேலைகள் யாவும் முடிந்ததும் கல்வி அதிகாரி அதிபரின் காரியாலயத்தைவிட்டு வெளியில்வந்து ஒவ்வொரு வகுப்பாக எல்லா வகுப்புக்களுக்கும் சென்று மாணவர்களின் வேலைகளையும் அவர்களின் அப்பியாசப் புத்தகங்களையும் பார்வையிட்டும், மாணவரிடம் சில வினாக்களைக் கேட்டும் பரீட்சித்துக் கொண்டு வந்தார்.

அடுத்து எங்களின் ஆறாம் வகுப்பிற்கும் வந்தார். எங்களின் அப்பியாசப் புத்தகங்களையும் ஒவ்வொரு மாணவராகப் படிப்படியாகப் பார்வையிட்டார். பின்னர் மாணவர்களிடம் கேள்வி கேட்கும் தருணம் வந்தது. முதலில் இலகுவான வினாக்களையும் பின்னர் சற்றுக் கடினமான வினாக்களையும் கணித பாடத்திலும், சரித்திர பாடத்திலும் கேட்டார். இலகுவான கேள்விகளுக்கு மாணவர்கள் சாதுரியமாகப் பதில் சொல்லி விட்டனர். பின்னர் சற்றுக் கடினமான வினாக்களை இவ்விருபாடங்களிலும் கேட்டார். பலர் பதில் சொல்லவில்லை. ஆசிரியரின் முகத்திலும் சற்றுக் கவலை தென்பட்டது. எனது முறை வந்தது. கல்வி அதிகாரி கடினமான வினாக்களை என்னிடம் கேட்டார். நான் அவற்றுக்குச் சட்டென பதில் கூறிவிட்டேன். கல்வி அதிகாரிக்கும் மனம் நிறைவு பெற்றது. ஆசிரியரின் முகத்திலும் மகிழ்ச்சி தென்பட்டது. கல்வி அதிகாரியும் வகுப்பை விட்டு வெளியேறிவிட்டார்.

ஆசிரியர் என்னை அழைத்தார். "சிவநாயகமூர்த்தி நீ ஒருநாள் கல்வி அதிகாரியாக வருவாயடா" என்று என்கையைப் பிடித்துக் குலுக்கிக் கூறினார். அதை அந்த வயதில் யான் பெரிதாக எடுத்துக் கொள்ளவுமில்லை, அது எனக்கு விளங்கவுமில்லை. பின்னர் யான் முதலில் சாதாரண தமிழ் பயிற்றப்பட்ட ஆசிரியராகவே இருந்தேன். பின்னரே விசேட பயிற்சிகளையும் பட்டப்படிப்புக்களையும் தொடர்ந்தேன். அக்காலத்தில் ஒரு தமிழ் பயிற்றப்பட்ட ஆசிரியர் கல்வி அதிகாரியாக வருவதென்பது கனவிலும் நினைக்க முடியாத காரியமாகவேயிருந்தது.

ஆனால் 1973ஆம் ஆண்டில் நடைபெற்ற கல்வி நிர்வாகசேவைக்குத் (S.L.E.A.S) தமிழ்ப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் தோற்றலாம் எனக் கல்வி அமைச்சு அறிவித்திருந்தது. அதனால் யானும் அப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றினேன். அதில் இலங்கை முழுவதிலும் அப்போது தெரிவு செய்யப்பட்ட 17 தமிழ்மொழிமூல கல்வி உத்தியோகத்தர்களில் யானும் ஒருவனாகத்தெரிவு செய்யப்பட்டேன்.



அப்பொழுதுதான் ஆசிரியர் க. செல்லையா அவர்களின் தீர்க்கதரிசனமான வாக்குப் பலித்ததை எண்ணி எண்ணி ஆச்சரியமும், மகிழ்ச்சியுமடைந்தேன். கல்வி அதிகாரியாகத் தேர்வு பெற்றபின்னர் ஆசிரியரைச் சென்று சந்தித்தேன். அவரின் இரட்டிப்பான வாழ்த்துக்களையும் பெற்றேன். இன்றும் அவரின் தீர்க்க தரிசனமான வாழ்த்தை எண்ணிப்பார்த்து என்மனதால் இறைஞ்சுகிறேன். ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. PAUL HEALTHY LIFE CLINIC

## (Homeopathy and Acupuncture)

## Dr.போல் ஜோசேப்

BHMS (Ind.), HD (can.) RAP (can.)



### ஹோமியோபதி (ஜெர்மன் மருத்துவமுறை)
### அக்குபங்சர் (சீன மருத்துவமுறை)

B.H.M.S (Bachelor of Homeopathy Medicine and Surgery)
Qualified from Tamilnadu Dr. M.G.R. Medical University, Madras, india.
Doctor of Homeopathy, Doctor of Acupuncture

முன்னாள் பேராசிரியர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ கல்லூரிகள்.

முன்னாள் விரிவுரையாளர், விநாயகா மிஷன்ஸ் பல்கலைக் கழகம் சேலம், இந்தியா.

மருத்துவ ஆலோசகர், சண்முகா மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், சேலம்.

இந்தியாவின் பல்வேறு பல்கலைக் கழகங்களின் தேர்வாளராகவும், சிறப்பு வருகை விரிவுரையாளராகவும் பணிபுரிந்தவர்.

இலங்கையின் முதல் B.H.M.S மருத்துவ பட்டம் பெற்ற மருத்துவர்.

கனடா, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் பதிவு பெற்ற மருத்துவ நிபுணர்.

ஹோமியோபதி, அக்குபங்சர், அக்குபிரஷர், நாடிப் பரிசோதனை தியானம், யோகா மற்றும் உளவியல் ஆலோசகர்.

பக்க விளைவுகளில்லாத, பத்தியமேதுமில்லாத, அனைத்து நோய்களிலிருந்தும் சுகமடைந்து ஆரோக்கிய வாழ்வு பெறலாம்.

**Tel : 416 438 3939 Cell : 416 9864903 drjp63@yahoo.com**

**Unit 10, 1193 A, Brimley Rd., (Brimley & Brimorton) Scarborough M1P 3G5**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊறலில் நனைந்த நிகழ்வுகள்...






**Homelife/Realty Inc. Brokerge** இன் 8வது வருடாந்த ஒன்றுகூடல் டிசெம்பர் மாதம் 18ம் திகதி ஸ்காபரோவில் நடைபெற்றது. மாலை 7 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் முகவர் சிவா சண்முகநாதன் அவர்களுக்கு **Top Producer 2010** விருதும், சிவா சண்முகநாதன் மற்றும் ஜோய் செல்வநாயகம் ஆகியோருக்கு **Top Producing Team 2010** விருதும் வழங்கப்பட்டது.

## மகாஜனக் கல்லூரியின் சர்வதேச நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா

**மகாஜனக்** கல்லூரியின் சர்வதேச நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா அண்மையில் ஸ்காபரோ சிவிக்சென்ரர் பார்வையாளர் மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.






கனடாவில் உள்ள மகாஜனக் கல்லூரியின் மூத்த பழைய மாணவரான திரு திருமதி தர்மலிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்து விழாவை ஆரம்பித்து வைத்தனர். கல்லூரிக் கீதமும், அதைத் தொடர்ந்து செல்வி பாஸ்கரனால் கனடா தேசிய கீதமும் இசைக்கப்பட்டன.

தொடர்ந்து பொருளாளர் திரு. கே. ஜெயேந்திரன் ஆரம்ப உரை நிகழ்த்தினார். அடுத்து செயலாளர் க. முத்துலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து இ. ரவீந்திரனின் தலைவர் உரை இடம் பெற்றது. அடுத்து கலாநிதி திருமதி கௌசல்யா சுப்பிரமணியன் அவர்கள் மகாஜனாவின் ஆரம்பகால அதிபர்களைப்பற்றி உரையாற்றினார். அடுத்து எழுத்தாளர் குரு அரவிந்தனின் நூல் அறிமுக உரை இடம் பெற்றது. தொடர்ந்து கலாநிதி நா.சுப்பிரமணியன், வே. நந்தீஸ்வரர், நா.சாந்திநாதன், ஆசிரியர் கி.சிவலிங்கம் ஆகியோரின் உரை இடம் பெற்றது. முன்னாள் அதிபர் சின்னப்பாவின் மகனான திருவருட்செல்வனினால் நூற்றாண்டு மலரின் முதற் பிரதி வெளியிடப்பட்டது. தி.விஜயகுமாரின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேரனின் பதியங்கள்

## { தலைமுறை }

ஒரு தலைமுறைக்கு முன்
நாடு கடந்தார்கள்
அடுத்த தலைமுறை மெல்ல மெல்ல மொழி இழக்கும்
தருணத்தில்
தீராப்பெருவலி எழுந்து எம்மை இணைக்கிறது

பனி உதிர்ந்து காற்றுறையும் இரவுப் பெரும் பொழுதிலும்
சினத்துடன் எழுந்து தெருவை நிறைத்த
பல்லாயிரம் மக்களிடையே
குரல் வற்றிய ஒரு பெண்ணைக் கண்டேன்

கண்ணீரின் சுவடுகளால் முகக் கோலம் அழிந்தாலும்
இன்னொரு முகம் பன்முகமாக விரியக் கண்டேன்.

## { உடல் }

கடலோரம் தலை பிளந்து கிடந்த
உடல்.

இறப்பிலும் மூட மறுத்த கண்களின்
நேர் கொண்ட பார்வையில் மிதக்கிறது:
எதிர்ப்பு, ஆச்சரியம், தவிப்பு, தத்தளிப்பு, கொதிப்பு, ஆற்றாமை,
முடிவற்ற ஒரு பெருங்கனவு.

## { காணி நிலம் }

இந்தக் காணி நிலத்தில் என்னுடைய கதை பிறந்தது

அங்கு கடல் கொண்ட பெருமரங்களின்
வேரடிமண் இப்பொது வெளித் தெரிகிறது

கோடை காலத்திலும் ஈர மனிதர்
உலவித் திரிந்த நிலம்
ஒரு சில நாட்களில்
மொழி பெயர் தேயமாக மாறுகிறது

இந்தக் காணி நிலத்தில் தென்னைகள் இல்லை
குடிசைகள் இல்லை
கிளைக் கதைகள் சிறைப்பட்டுப் போனபிற்பாடும்

முடிவற்ற கதை இது என்று சொல்கிறது
குரல்.

## { இல்லாமை }

நீரற்றது கடல்
நிலமற்றது தமிழ்
பேரற்றது உறவு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பென்சில்கரி படலமும் நோபல் பரிசும்

தலைப்பு என்ன வித்தியாசமாக இருக்கின்றதே எனப் பார்க்கின்றீர்களா? இந்தப் பென்சில்கரி படலம்தான் 2010ம் ஆண்டின் பௌதீகத்திற்கான நோபல் பரிசைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது. "ஆண்றே கியும்", (Andre Geim) "கொன்ஸ்ரான்ரின் நோவோசெலோவ்" (Konstantin Novoselov) என்ற இரண்டு ரஷ்யாவின் இயற்பியலாளர்களுக்கு இந்தப் பரிசு கிடைத்துள்ளது. 2004ம் ஆண்டில் இந்த இருவரும் பென்சில்கரியை உரித்து மிகவும் மெல்லிய சீவலைப் பெற்றுக் காட்டியே இப்பரிசினைப் பெற்றுக் கொண்டார்கள்.
இன்று இங்கிலாந்தின் மன்செஸ்ரர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களாக இருக்கும் இவர்கள் இருவரும், உலகிலேயே மிகப் பெரிய சாதனையாளர்கள் வரிசையில் இடம் பிடித்திருக்கின்றார்கள். எத்தனை பென்சில்களைத்தான் நாங்களும் சீவியிருப்போமே! விசயம் தெரியாமற் போய்விட்டதே? என்கின்றீர்களா? விடயம் அவ்வளவு எளிதானதில்லை. இதன் பின்னால் உள்ள விபரங்களை அறிந்தால் மூக்கின் மேற் விரல் வைப்பீர்கள்.

கிரபீன் (Graphene) - இதுதான் படலத்தின் அறிவியல் பெயர். இதில் உள்ள தனிமம் எல்லா உயிரினங்களிலும் காணப்படும், உயிரினங்களுக்கு காரணியான காபன் மட்டுமே.
இந்தக் காபன் அணுக்கள் பல வெவ்வேறு ஒழுங்குகளில் தம்மை ஒழுங்குபடுத்துகையில் வெவ்வேறு பொருட்கள் கிடைக்கின்றன. காபனின் சிறப்புகளில் இதுவும் ஒன்று. அதில் ஒருவகைதான் இந்தக் கிரபீன்கள்.



- கனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மெல்லிய படலம் என்றேனே. அதன் தடிப்பு எவ்வளவாக இருக்கும்? ஒரு தனி அணுவின் தடிப்பு மட்டுமே கொண்டது இந்தக் கிரபீன்கள். அதாவது 0.0000000001 மீற்றர் தடிப்புடையது. இவ்வளவு சிறிய தடிப்பில் பென்சில்கரியை உரித்து எடுத்திருக்கின்றார்கள். அடடா, இவ்வளவு சிறிய தடிப்பா? அணுவை வெற்றுக் கண்களால் பார்க்கமுடியாதே எப்படித்தான் இப்படி உரித்து எடுத்தார்களோ. எமகாதப் பேர்வழிகள்! சரிசரி அவர்களுக்கு நோபல் பரிசு கொடுக்கத்தான் வேண்டும் என்கிறீர்களா!

கிரபீன்களின் 2 மில்லியன் படலங்கள் சேர்ந்துதான் பென்சில்கரியின் ஒரு மில்லிமீற்றர் தடிப்பு வருகின்றது. இந்த 2 மில்லியன் படலங்களையும் வலிமையான பிணைப்புகள் இறுக்கிச் சேர்த்து வைத்திருப்பதாலேயே பென்சில்கரி இருக்கிறது. இந்தப் பென்சில்கரியின் அறிவியற் பெயர் கிரபைட் (Graphite). நாம் இதனை காரீயம் என்கிறோம். இந்தக் காரீயமும் வைரம் போன்றதே. காபனின் ஒழுங்கமைப்பில்தான் சிறிது வித்தியாசம்.. அந்தச் சின்ன வித்தியாசம் எவ்வளவு பெரியதாய் எமக்குத் தெரிகிறது. வைரம் எங்கே? காரீயம் எங்கே? இன்னொரு வேடிக்கையான விடயமும் இருக்கின்றது. வைரங்களை அவற்றின் பாட்டிலே விட்டு விட்டால் மில்லியன் வருடங்களின் பின்னராக, அவற்றின் இயல்பான கதிர்வீச்சினால், காபன்கள் மறுஒழுங்குபடுத்தப்பட வைரமும் காரீயமாக, பென்சில்கரியாக மாற்றமடைந்து விடுமாம்.

இந்த இரண்டு விஞ்ஞானிகளும் எவ்விதம் கிரபீன்களை (இனி பென்சில்கரிப் படலங்கள் வேண்டாம்) பிரித்தெடுத்தார்கள் எனப் பார்ப்போம். காரீயத்தை எடுத்து சாதாரண scotch tape ஐ அதன் மேல் ஒட்டியிருக்கிறார்கள். பின்னர் அந்த ரேப்பை கவனமாக. மிகக் கவனமாக இழுத்தெடுத்து அந்த மெல்லிய படலத்தை பென்சில்கரியில் இருந்து பிரித்தெடுத்திருக்கிறார்கள். அட, இவ்வளவு தானா? நாங்கள் கூடச் செய்திடலாமே, செய்யப் போகிறோம் என்கிறீர்கள் அப்படித்தானே! தாராளமாக! ஆனால் ரேப்பை சரியாக உரித்தெடுப்பதுதான்... சரி வெறுமனே கிரபீனைப் பெற்றுக் கொண்டதற்கா இந்தப் பரிசு? கிரபீனின் சிறப்புக்கள் என்ன? என்பது போன்ற கேள்விகள் உங்களுக்கு எழும். அவை பற்றிக் கொஞ்சம் பார்ப்போமே.

இதுவரையிலே பெறப்பட்ட மிக மெல்லிய பொருள் இதுதான். (இனிமேற் காலங்களிலும் இதைவிட மெல்லிய பொருளைப் பெறமுடியுமோ?) இவ்வளவு மெல்லியதாக எந்தப் பொருளும் உறுதிநிலையில் இராது என்றே பலரும் முதலில் எண்ணினார்கள். மிகவும் மெல்லியது என்றாலும் உருக்கை விடவும் 200 மடங்கு வலிமை வாய்ந்தது. மிகவும் சிறந்த ஊடுகடத்தி. இரண்டாவது, சிறிய அணுவான ஹீலியம் மிக இலகுவாக கிரபீன் ஊடாகச் சென்றுவிடும். செப்பினைப் போலவே மிகவும் சிறந்த மின் கடத்தி. வெப்பக் கடத்தி. இவ்வளவு சிறப்புக்களைக் கொண்ட கிரபீன்களின் உபயோகங்களைப் பார்ப்போம்.

பிளாத்தீக்குகளுடன் கிரபீன்களை சரியான வீதத்தில் கலந்தால், பிளாத்தீக்குகளை, நல்ல மின்கடத்திகளாக்கலாம். மிகவும் வலிமை வாய்ந்தவையாக மாற்றலாம். அத்துடன் பிளாத்தீக்குகளை வெப்ப அரிதிற் கடத்திகளாகவும் மாற்றிவிடலாம் என்கின்றார்கள். இது தொழிற்துறையில் மிகவும் வரவேற்புடையதாகும். இனிவரும் காலங்களில் கிரபீன்களின் கலப்புப் பிளாத்தீக்குகளின் பாவனை அதிகமாக வர, பாரம் குறைந்த வலிமையான வாகனங்களைத் தெருக்களிற் காணலாம். வானூர்திகள் கூட இவ்வகைப் பிளாத்தீக்குகளில் வரலாம்



## எத்தனை பென்சில்களை சீவியிருப்போம்... விசயம் தெரியாமல் போய்விட்டதே?

என்கிறார்கள். இதனால் அதிக அளவில் எரிபொருட் சக்தி சேமிக்கப்படும்.

கிரபீன்கள் ரான்சிஸ்ரர்கள் செய்வதற்கும் தகுதியானவை. கிரபீன் ரான்சிஸ்ரர்கள் தற்போது பாவனையில் இருக்கும் சிலிக்கன் ரான்சிஸ்ரர்களை விடவும் வினைத்திறன் கூடியவை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மிகவும் சிறியனவாகவும் பாரம் குறைந்தவையாகவும் இருப்பதனால், ரான்சிஸ்ரர்களில் சிலிக்கனின் இடத்தை வெகு விரைவில் இவை பிடித்துக் கொள்ள, தொலைக்காட்சிப் பெட்டிகள், கணனிகள், கணிப்பான்கள், கைத்தொலைபேசிகள் என்பவற்றில் கிரபீன்களின் செல்வாக்கு அதிகரிக்கப் போகின்றது. தொடுகைத் திரைகளில் கிரபீன்கள் பயன்படுத்தப்படும் என்பதை நான் கூறாமலே ஊகித்திருப்பீர்கள் அல்லவா!

எல்லாவற்றிக்கும் மேலாக, இன்று நாம் வாழ்வது 'குவாண்ரம்' உலகம். நவீன உலகத்தின் சகல தொழிற்பாடுகளும் குவாண்ரம் பொறிமுறைச் செயற்பாடுகளின் உதவியுடனேயே நடைபெறுகின்றன. குவாண்ரம் உலகு என்பது அணுவின் தடிப்புடைய, அதையும் விடச் சிறிய தடிப்புடைய துகள்களின் செயற்பாட்டு உலகாகும். எங்களுக்குத் தெரியாமல் இருந்தாலும் இத் தொழில் நுட்பத்தின் செல்வாக்குடனேயே நாம் வாழ்கிறோம். அணுவின் தடிப்புடைய இந்த இரு – பரிமாணப் படலத்தின் கண்டு பிடிப்பானது குவாண்ரம் உலகிற்கு நல்வாய்ப்பாக இருக்கின்றது. குவாண்ரம் உலகினர் அதிகம் சிலாகிக்கும் இந்தக் கிரபீன்கள், பென்சில்கரிச் சீவல்கள் எனப்படும் படலங்கள் மனித குலத்தின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு பெரிதும் உபயோகமாக இருக்கப் போகின்றது.

என்ன, இயற்பியலுக்கான நோபல் பரிசு.... சரிதானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் வாகனத் திருத்த
வேலைகள் அனைத்தையும்
நவீன தொழில்நுட்ப
வசதிகளுடன் குறைந்த விலையில்
குறைந்த காலத்தில்
குறையில்லாது செய்து
தருகிறோம்!

# Kaizen Auto Repair

435 Midwest Road, Unit A5 Scarborough, ON M1P 3A6
Tel: +1 (416) 759-3553 Fax: +1 (866) 654-5057
Email: info@kaizenautorepair.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்மனத்து அலைகள்

# வைத்தியர் கணபதிப்பிள்ளையின் வாய் நாடி நோய் தீர்க்கும் வழி!

- புலவர் ஈழத்து சிவானந்தன் -

1969ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடந்த சேக்கிழார் விழாவுக்கு சொற்பொழிவு ஆற்ற வந்தவர் வஞ்சிரவேலு முதலியார். இவர் மாயவர தர்மபுர ஆதினத்தின் ஆஸ்தான வித்துவான். நிறைந்த தமிழ் புலமை உடையவர். இவரை புங்குடுதீவில் ஏற்பாடு செய்திருந்த திருவள்ளுவர் விழாவுக்கு உரையாற்ற அழைத்தனர். கவிஞர் சு. வில்வரட்ணம், க. சிவநாமம் ஏற்பாட்டில் பெருங்காடு ஸ்ரீ சுப்பிரமணிய மகாவித்தியாலயத்தில் நடந்த இந்த விழாவில் நானும் பேசினேன்.

திருவள்ளுவர் ஈழத்திற்கும் வந்திருக்கிறார். தமிழகம் என்பது வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல் உலகம் மட்டுமல்ல, ஈழம் வரை பரந்து விரிந்தது. தொல்காப்பியரும் ஈழம் வரை வந்து பாயிரம் பாடிய பனம் பாரனனாருக்கு தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் தொல்காப்பியச் சூத்திரங்களில் உள்ள பல செம்மொழிச் சொற்கள் அதன் ஆசிரியரை ஈழத்தமிழகம் வந்ததாகக் காட்டுகின்றன. இது போன்றே ஈழத்து தமிழ் சொற்களை திருக்குறளிலும் காணலாம்.

'பேணி' என்ற தமிழ்ச்சொல், தண்ணீரை, பாலை, தேநீரைப் பேணி வைத்திருப்பதால் 'பேணி' என வழங்கலாயிற்று.

"தற்காத்து தற் கொண்டான் பேணித் தகை சான்ற

சொற்காத்துச் சோர்வு இலாள் பெண்"

என்ற குறளில் 'பேணி' என்ற சொல்லைப் பெய்திருக்கிறார் வள்ளுவர். தென் தமிழகத்தில் பேணி என்ற சொல் வழக்கில் இல்லை. டம்ளர், கெண்டி என்றுதான் சொல்கிறார்கள் என்றதோடு, இன்னும் ஐயப்பாடு, கடுஞ்சொல், காக்கை என்ற சொற்களையும் கூறி ஒப்பிட்டுக் காட்டினேன். இத்தோடு திருக்குறளுக்கு பலரும் வியக்கத்தக்க உரை சொன்ன ஒரு சித்த வைத்தியர் எங்கள் ஊரில் வாழ்கிறார். இந்தச் சபையிலும் இருக்கிறார். அவரைச் செல்லமாக சின்னத் தம்பர் என அழைப்பார்கள். கணபதிப்பிள்ளை என்பது அவர் பெயர். இவர் 1938ஆம் ஆண்டிலே தனது மைத்துனர் பசுபதிப்பிள்ளை என்பவருக்கு வைத்தியம் செய்வதற்காக இங்கிருந்து சிங்கப்பூருக்குப் பயணமானார். இவருடைய மைத்துனர் மூலமாக, சீனர்கள், மலாய்காரர்கள், தமிழர்கள் ஆகியோரும் வைத்தியத்திற்கு வந்தனர். பெரும்பாலானவர்கள் சீன இனத்து பெரும் பணக்காரர்கள். பெரும் புள்ளிகள்.

இவர்களிலே ஒருவர் வித்தியாசமான வியாதிக்காரர். சீன, மலே வைத்தியர்களிடையே தனது வியாதியைக் காட்டி மருந்து எடுக்க விரும்பாதவர். தனது வியாதி மற்றவர்களுக்குத் தெரிந்தால் தன்னைப்பற்றிய மதிப்பு குறைந்து விடும் என்ற பயம். பசுபதிப்பிள்ளையின் நட்பைப் பெற்றதால் புங்குடுதீவு வைத்தியரிடம் சென்றார். இவருடைய கை நாடியை வைத்தியர் பார்த்தார். சொற்ப நேரத்தில் இவருக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. நாளைக்கு காலை எழுந்தவுடன் முகம் கழுவாமல், வாய் கொப்பளிக்காமல் வாருங்கள் நாடி பிடிக்க வேண்டும் என்று சொல்லி அனுப்பி விட்டார்.

மறுநாள் காலை வைத்தியர் சொன்னபடியே நோயாளி வந்தார். அவர் கையைப் பிடித்து நாடி பார்த்த வைத்தியர் தன் முகத்தை அவர் வாய் அருகே கொண்டு போய் மூக்கால் மோப்பம் பிடித்தார். பரிசோதனை முடிந்தது. வாய் நாற்றத்தில் அவர் பால் இயல் தொடர்பால் பாதிப்புற்றவர் என்று சொன்னதும் சீனப் பிரமுகரான பணக்காரப்புள்ளி பதறிப் போனார். சரியான கண்டுபிடிப்பைக் கண்டு அதிர்ச்சியுற்றார்.

இப்படி புகழ் பெற்ற வைத்தியரின் பாராட்டு விழாவில் வைத்து பேட்டி கண்ட சீன மருத்துவர்கள் அவரிடம் கேட்ட கேள்வி, கை நாடி மூலம் இல்லாது வாய் மணத்திலிருந்து நோயைக் கண்டுபிடிக்கும் முறையை எந்த வைத்திய வாகடத்தில் கற்றீர்கள் என்பது. இதற்கு புங்குடுதீவு வைத்தியர் சொன்ன பதில் திருக்குறள் அறிஞர்களுக்கும் வியப்பளிப்பதாகும்.

"நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்"

என்ற திருக்குறளில் வாய் நாடி என்பதற்கு நோய் தீர்க்கும் வழி எது என்று ஆய்வு செய்து முறையாக வைத்தியம் செய்ய வேண்டும் என்று உரையாசிரியர்கள் எழுதியுள்ளார்கள். கை நாடி பார்ப்பது போல் வாயையும் நாடி அதன் மணத்திலிருந்து நோயைக் கண்டுபிடிக்கலாமே என்றும் வள்ளுவர் கூறியிருக்கலாம் என்று நான் யோசித்ததை செயற்படுத்திப் பார்த்தேன். அது எனக்கு வெற்றியைத் தந்துள்ளது என்றார் வைத்தியர். இக்குறளின் புதிய பொருளைக் கண்டுபிடித்தமைக்காகவே சீன மருத்துவ அமைப்பு வைத்தியருக்கு பாராட்டும் நடாத்திப் பத்திரமும் வழங்கியது என்று நான் பேசி முடித்தேன்.

வஞ்சிரவேலு முதலியார் மேடையில் எழுந்து நின்றார். அந்த வைத்தியர் சபையில் இருந்தால் மேடைக்கு வரவும் என ஒலிவாங்கியில் சொன்னார். சபையில் இருந்த வைத்தியர் மேடைக்கு வந்தார். கதர் வேட்டி, வெறும் மேனி, திருநீற்றுக்குறிகள், சந்தனப்பொட்டு, குங்குமச்சாந்து. வஞ்சிரவேலு அவரைக் கட்டித்தழுவி, முத்தமிட்டு முறுவல் பூத்து திருவள்ளுவரால் எத்தனை புதிய மனிதர்களைக் காண முடிகிறது என்று கூறி மகிழ்ந்தார்.

புங்குடுதீவு குறிகட்டுவான் நடுவுத் துருத்திச் சந்திப்பில் சமாதி வைக்கப்பட்டுள்ள சி. கணபதிப்பிள்ளை வைத்தியர் எனது தந்தையார் என்பதை அடக்கத்தோடு சொல்லலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் மனவானில்...

சினிமாத்துறையில் நடிகனாக எனது பிரவேசம் எதிர்பாராத ஒரு சந்தர்ப்பத்தில் எதிர்பாராத வகையில் நிகழ்ந்தது. எனது நண்பர் சிவதாசன், மேடை நாடகத்துறையின் மூலம் எனக்கு அறிமுகமானவர், செங்கை ஆழியானின் "வாடைக்காற்று" நாவலை திரைப்படமாக்குவதின் மூலம் சினிமாத்துறையில் கால் வைத்தார்.

வீரகேசரி பிரசுரமாக 1974ல் வெளிவந்த "வாடைக்காற்று" நாவலை நான் வாசித்தபோதே இது திரைப்படமாக உருவாக்குவதற்கு ஏற்ற கதை என்று என் மனதில் பட்டது. உண்மையில் "விருத்தாசலம்"தான் எனக்கு பிடித்த பாத்திரமாக இருந்தது.

அந்தப்பாத்திரத்தில் சிங்கள நடிகர் காமினி பொன்சேகா நடிக்கப்போவதாக சிவதாசன் ஆரம்பத்தில் எனக்குச் சொன்னார். பிரேம்நாத் மொறாயஸ் (இவர் தமிழர்தான்) என்பவரை இயக்குனராக போட்டதே அவர் மூலம் காமினி பொன்சேகாவை எடுத்துப்போடலாம் என்ற நம்பிக்கையினால்தான் என்றும் சொல்லப்பட்டது. காரணம் அவர்கள் இருவரும் சிங்கள சினிமாத்துறையில் மிகநெருங்கிப் பணியாற்றியவர்கள்.

ஆனால் அந்த முயற்சி பலனளிக்கவில்லை. காமினி வாடைக் காற்றில் நடிக்க மறுத்துவிட்டார். பலரையும் அந்தப்பாத்திரத்துக்கு யோசித்துவிட்டு, சிவதாசனும் அவரது தேர்வுக்குழுவும் கடைசி, கடைசியாக என்னில் வந்து நின்றார்கள்.

நான் ஒரு மூவி டெஸ்ட்டுக்கு அழைக்கப்பட்டேன். (மேக் அப் டெஸ்ட் அல்ல) என் நல்ல காலத்துக்கு பிரேம்நாத் மொறாயஸ் என்னிடம் ஆடுவாயா, சண்டைபோடுவாயா, குதிரை ஓடுவாயா என்ற வழக்கமான கேள்விகள் எதுவும் கேட்கவில்லை. ஒருமுறை என்னை நிமிர்ந்து பார்த்தார். அவ்வளவுதான் சரியென்று சொல்லிவிட்டார்.

வாடைக்காற்றில் "சம்மாட்டி" பாத்திரங்களில் நடிப்பதற்கு இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஒருவர் அக்காலத்தில் பிரபலமான பொப்பிசைப் பாடகர் ஏ.ஈ.மனோகரன், அவருக்காவது யாழ்ப்பாணக்கல்லூரிக் காலத்தில் ஜோதேவானந்தின் "பாசநிலா" என்ற 16 மி.மி. படத்தில் நடித்த அனுபவம் இருந்தது. ஆனால் 'மரியதாஸ்' சம்மாட்டியாக நடிக்க வந்தவர், ஒரு மருத்துவர், விஞ்ஞான எழுத்தாளரும் கூட. ஆனால் டொக்டர் இந்திரகுமாருக்கு நடிப்பு அனுபவம் இருந்ததாக தெரியவில்லை.

"வாடைக்காற்று" நாவலின் கதைக்களம் நெடுந்தீவு. ஆனால் நாவல் வெளிவந்த காலத்தில், நாவலின் குறிப்பிடப்பட்ட சில உவமைகளையிட்டு அந்த ஊர்வாசிகளுக்கும் செங்கை ஆழியானுக்கும் முரண்பாடுகள் இருந்தன. இந்த நிலையில் அங்கு படப்பிடிப்பை வைப்பது உசிதமாகப் படவில்லை. எனவே அதேமாதிரியான ஒரு இடம் என்பதினால் "பேசாலை" தேர்ந்தெடுக்கப்பட்டது. பனைக்கூடல்கள், மட்டக்குதிரை, கரைவலை போடும் மீனவர்கள் என்று பலவகையிலும் நெடுந்தீவுக்கு ஒத்ததாக இருந்தது. அத்தோடு பேசாலைக்கு நெடுந்தீவைப்போல படகில்போக வேண்டியதில்லை. கொழும்பிலிருந்து, மன்னார் புகையிரதத்தில் நேராகப் போய் இறங்கி விடலாம்.

கதையின்படி, விருத்தாசலம், மட்டக்குதிரையில் கையில் முயல் வேட்டைக்காக ஈட்டியுடன் எந்த நேரமும் அலைந்துகொண்டிருப்பவன். தயாரிப்பு நிர்வாகி சிவதாசன், எனக்காக பொலிஸ் குதிரை ஒன்றை வாடகைக்கு பெற்றுக் கொண்டுவரத் தீர்மானித்தார். ஆனால் கதாசிரியர் செங்கை ஆழியானோ, விருத்தாசலம், மட்டக்குதிரையில்தான் சவாரி செய்யவேண்டுமென்று நிர்த்தாட்சண்யமாக சொல்லி மறுத்துவிட்டார். எனவே எம்.ஜீ.ஆர் போல குதிரைச்சவாரி செய்யும் எனது கனவு பலிக்காமல் போனது.

இந்த இடத்தில் மட்டக்குதிரையைப்பற்றி சொல்லித்தானாக வேண்டும். அது குள்ளமானது. கட்டாக்காலியாக பனைக்கூடல்களில் மேய்ந்து கொண்டு திரியும். உள்ளூர் சிறுவர்கள் எப்படியோ மடக்கிப் பிடித்து ஏறி சவாரி செய்வார்கள். அவர்களே படப்பிடிப்புக்காக எனக்கு ஒரு மட்டக்குதிரையை பிடித்து தந்தார்கள். அதன் மேல் சவாரி செய்வது சிரமமாக இருந்தது. புது ஆள் (நான் தான்) ஏறியதும் சண்டித்தனம் செய்தது. அடிக்கடி என்னை தூக்கி மணலில் எறிந்தது. இதுவே பொலிஸ் குதிரையாகவிருந்தால் வீழ்ச்சி எப்படி இருந்திருக்கும் என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் நாளடைவில், எனது குதிரைக்கும் "சினிமா ஆசை" வந்து விட்டது போலும். என்னோடு சகஜமாக ஒத்துழைத்து நடித்தது.

நானும், ஆனந்தராணி ராஜரட்னமும் (பாலேந்திரா) இதற்கு முதலே பல வானொலி நாடகங்களில், குறிப்பாக இளங்கீரன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கே.எஸ். பாலச்சந்திரன்

எழுதிய "வாழப்பிறந்தவர்கள்" தொடர்நாடகத்தில் இணைந்து நடித்திருந்ததினால் எங்களுக்குள் ஒரு புரிந்துணர்வு இருந்தது. எனவே வாடைக்காற்றில் இருவரும் சேர்ந்து நடிப்பது சிரமமாக இருக்கவில்லை.

அதேபோல பொப்பிசைப்பாடகர் ஏ.ஈ.மனோகரனும் இலங்கை வானொலியில் தயாரிப்பாளராக வேலை பார்த்த காலத்தில் இருந்தே என்னுடைய நண்பர். தென்னிந்திய திரைப்படங்களில் நடிக்கவேண்டுமென்பதே அவரது கனவாக இருந்தது. வாடைக்காற்றில் நடித்த பின்னர், தென்னிந்தியா சென்று, இலங்கையரான இயக்குனர் வி.சி.குகநாதனின் உதவியால், மாங்குடி மைனர் என்ற படத்தில் நடித்து, தொடர்ந்து, பல தமிழ், தெலுங்கு படங்களில் வில்லனாக நடித்தவர். அண்மைக்காலத்தில், சின்னத்திரை நாடகங்களில் தோன்றி வருகிறார்.

படப்பிடிப்பின் பெரும்பகுதி பேசாலையிலும், மிகுதி யாழ்ப்பாணத்தில், கல்லுண்டாய் வெளி, காக்கைதீவு, துணைவி (வட்டுக்கோட்டை), குரும்பசிட்டி போன்ற பகுதிகளிலும் நடந்தன. ஏ.ஈ.மனோகரன், சந்திரகலா சம்பந்தப்பட்ட காதல் பாடல் காட்சியொன்று, வல்லிபுரக் கோவில் சூழலில் உள்ள மணல் திட்டிகளில் படமாக்கப்பட்டது.

இவர்களைவிட, "சுடலைச் சண்முகம்" என்ற முரட்டுப்பாத்திரமொன்றில் பிரபல நடிகரான கே.ஏ.ஜவாஹர் நடித்தார். அவரது நடிப்பு பலராலும் பாராட்டப்பட்டது.


பாட்டனாராக நடித்த எஸ்.ஜேசுரத்தினம் அவ்வாண்டின் (1978) சிறந்த தமிழ் துணை நடிகராக தேசிய விருது பெற்றார். வாடைக்காற்று 1978ம் ஆண்டின் சிறந்த தமிழ்ப்படம் என்ற ஜனாதிபதி விருது பெற்றது. கே.கந்தசாமி, வசந்தா அப்பாத்துரை, பிரான்சிஸ் ஜெனம், எஸ்.எஸ்.கணேசபிள்ளை, லடீஸ் வீரமணி, சி.எஸ்.பரராஜசிங்கம், சிவபாலன், நேரு, டிங்கிரி, சிவகுரு போன்ற பல கலைஞர்கள் நடித்தார்கள்.

வாடைக்காற்று திரைப்படத்திற்கு இசையமைத்தவர் ரி.எப்.லத்தீப். ஈழத்து இரத்தினம் எழுதிய "வாடைக்காற்று வீசுகின்ற காலத்திலே" என்ற புகழ்பெற்ற பாடலை, ஜோசெப் இராஜேந்திரனும் குழுவினரும் பாடியிருந்தார்கள். இலங்கைத் திரைப்படப் பாடல்களில் அதிகமாக வானொலியில் ஒலித்த பாடல் இது. திரைப்படம் வெளிவருவதற்கு முன்னரே எனது முயற்சியால், புறக்கோட்டை விசாகமால்ஸ் நிறுவனத்தின் அதிபர் ஹெட்டியாரச்சி இந்தப்பாடல்களை இசைத்தட்டாக வெளியிட்டார்.

வாடைக்காற்று திரைப்படத்தின் உதவி இயக்குனராகவும் என்னை நியமித்தார்கள். நானும், படத்தின் எடிட்டர் இராமநாதனும், உதவி எடிட்டர் எல்மோ ஹலிடேயும் (தற்போது சிங்கள திரைப்பட இயக்குனர்) சிலோன் ஸ்டுடியோவில் படத்தை தொகுத்து கொண்டிருக்கும்போது, வெளியில் 1977 கலவரம் உக்கிரமாக நிகழ்ந்து கொண்டிருந்தது. 13 நாட்கள், இரவும், பகலும் ஸ்டுடியோவிலேயே தங்கி, படத்தை முடித்தது தனி அனுபவம்.

"வாடைக்காற்று" 1978ல் வெளியானது. யாழ்ப்பாணத்தில் ராணி தியேட்டரில் திரையிடப்பட்டது. அங்கு 41 நாட்கள் தொடர்ந்து ஓடியது. ●

## சிதறல்கள்



1. உலகின் மிகப்பெரிய முருகன் சிலை இருப்பது, மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் இருந்து 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பத்துமலைக்குகை சுப்பிரமணியசாமி கோவிலில்தான். இங்கு தமிழர்களைப்போலவே சீனர்களும் பக்தியுடன் அலகு குத்தி காவடி எடுப்பார்கள். 400 அடி உயரத்தில் உள்ள இந்த மலைக் கோவிலுக்கு போக 272 படிக்கட்டுகளைக் கொண்ட மூன்று நடைபாதைகள், ரெயில் பாதை என்றெல்லாம் உண்டு.

இந்த கோவிலுக்கு மேலும் பெருமை சேர்ப்பது, அக்கோவில் முன்பு உள்ள பிரம்மாண்டமான முருகன் சிலை. தங்கம் போல் தகதகவென ஜொலிக்கும் இச்சிலையின் உயரம் 42.7 மீட்டர், அதாவது 140.09 அடி.



2. 1836ம் ஆண்டளவில் நியூசிலாந்துக்கு சென்ற மதபோதகர் வில்லியம் கொலென்சோ என்பவர், அங்கு வாழ்ந்த பழங்குடிமக்களான மாவோரி இனத்தவர் சிலர், உருளைக்கிழங்கு அவிப்பதற்கு பாவித்த இரும்பிலான கலம் ஒன்றினைக்கண்டு அதைப்பற்றி விசாரித்தபொழுது, அது தங்களிடம் தலைமுறை, தலைமுறையாக இருந்ததாகச் சொல்லி, பண்டமாற்றாக அவருக்கு கொடுத்திருக்கிறார்கள். அந்தக்கலம், உண்மையில் ஒரு கப்பலில் பாவிக்கும் மணி என்பதையும், அதில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் ஆதிகால தமிழ் எழுத்துக்கள் என்பதையும் பின்னர் அறியக்கிடைத்தது. "மொகைதீன் பக்கின் கப்பல் மணி" என்று பொறிக்கப்பட்ட அந்த மணி எவ்வாறு நியூசிலாந்து போயிருக்கமுடியும் என்ற கேள்விக்கான விடை தெரியாத நிலையில், இப்போது அது நியூசிலாந்து அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.




3. இலங்கைக்கு சர்வதேச தடகளப்போட்டிகளில் முதன்முறையாக பதக்கத்தைப் பெற்றுத்தந்தவர், 1948ல் லண்டனில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் 400மீற்றர் தடைதாண்டி ஓட்டத்தில் இரண்டாம் இடத்திற்கு வந்த, டங்கன் வைற் என்பவர். இவரைப்போலவே 1958ல் டோக்கியோவில் நடந்த ஆசியவிளையாட்டுப்போட்டியில், உயரப்பாய்தலில் புதிய ஆசியசாதனையை நிறுவியதோடு, முதன்முறையாக தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்தவர், யாழ்ப்பாணத்தில் வீளானைப் பிறப்பிடமாகக் கொண்ட, யாழ் மத்தியகல்லூரி பழைய மாணவரான நாகலிங்கம் எதிர்வீரசிங்கம்.



4. அமெரிக்காவை தற்செயலாக கண்டுபிடித்த கிறிஸ்தோபர் கொலம்பஸின் கடற்பிரயாண ஆர்வத்துக்கு காரணமாகியது அவருக்கு 100 வருடங்களுக்கு முதலே சீனா, இந்தியா போன்ற நாடுகளுக்கு பயணம் செய்து வந்த மார்கோபோலோவின் அனுபவங்கள்தான். மார்கோபோலோ நீண்டகாலமாக சீனச்சக்கரவர்த்தி குப்ளாய்கானின் அரசவையில் இருந்துவிட்டு, பாரசீக மன்னரை திருமணம்செய்து கொள்வதற்காக புறப்பட்ட 17 வயதான சீன இளவரசி கொக்கச்சின் உடன் துணையாக 18 மாதங்கள் பயணம்செய்தபொழுது, அவர்களின் கப்பல் யாழ்ப்பாணத்திற்கும் வந்து போயிருக்கிறது. அக்கால யாழ்ப்பாணக்குடாநாடு, ஆட்சி செய்த மன்னர், அவரிடமிருந்த மிகப்பெரிய மாணிக்கக்கல் பற்றியெல்லாம் மார்கோபோலோ விபரமாகச் சொல்லியிருக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேள்வி-பதில்

# மருத்துவ மகத்துவம்

டாக்டர் போல் ஜோசெப்

முன்னாள் பேராசிரியர் : தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்லூரிகள்
ஹோமியோபதி மருத்துவம், அக்குப்பங்சர் சிகிச்சை சிறப்பு நிபுணர்.

வாசகர்களே! உங்கள் மருத்துவக் கேள்விகளை தூறலுக்கு அனுப்பி வையுங்கள். editorial@thooralonline.com - Fax : 416 273 7606

**எனது தந்தையாருக்கு Pulmonary Fibrosis என்று குடும்ப மருத்துவர் சொல்லியிருக்கிறார். அப்படியென்றால் என்ன டாக்டர்?**

கோனேஸ் - மிசிசாகா

இது இன்றைய காலகட்டத்தில் ஒரு பொதுவான பிரச்சனையாக இருக்கிறது. இப்போது நிறையப்பேருக்கு இந்தப் பிரச்சனை இருக்கிறது. இந்த நோயின் தாக்கம் மனிதனில் பல பாரிய பாதிப்புக்களை உண்டாக்கும். இனி விடயத்துக்கு வருவோம். மிக மென்மையான சவர்க்கார நுரை போன்ற சுவர்களையுடைய காற்றறைகளைக் கொண்ட ஒரு பைதான் சுவாசப்பை. பல மில்லியன் கணக்கான காற்றறைகளைக் கொண்ட இந்த நுரையீரலில் சுவாசிக்கும்போது பிராணவாயு என்ற ஒட்சிசன் உள்வாங்கப்பட்டு இரத்தக்குழாய் வழியே குருதிச் சுற்றோட்டத்திற்கும், அதே நேரத்தில் குருதிச் சுற்றோட்டத்தில் உள்ள காபனீரொட்சைட்டு என்ற கரியமில வாயு இந்த காற்றறைக்குள் சென்று வெளிச்சுவாசத்தின்போது வெளியேற்றப்படும் ஒரு அற்புதமான பணியை இந்தச் சுவாசப்பை செய்கிறது. இந்த மென்மையான நுரைபோன்ற காற்றுப்பைகள் சில காரணங்களால் நார்த்தன்மையடைந்து, இறுக்கி பின்பு இயங்க மறுத்தல் தான் இந்த ''பல்மினரிஃபைபுரோசிஸ்'' என்கிற நோயாகும். இதனால் தொடர்ச்சியான இருமல், மூச்சுவிட கஷ்டம், பலவீனம், பசியின்மை, உடல் எடைக்குறைவு. உடல் கலங்களுக்கு ஒட்சிசன் குறைவுபடுவதால் உண்டாகும் மற்ற ஏனைய பாதிப்புகள் பல. இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் முதலில் வருவது அந்தக் காரணம் இன்னும் சரியாக கண்டுபிடிக்கப்படாத நோய் எதிர்ப்பு ஆற்றல் தொடர்பான பிரச்சனைகள், இதை மருத்துவத்தில் 'Idiopathic Cause' என்றழைக்கப்படுகிறது. எது எப்படியிருப்பினும் இந்த வியாதிக்குப் பல காரணங்கள் உண்டு. இவற்றை உங்களுக்கு தெளிவுபடுத்தி சொன்னாலே இதற்கான காரணத்தை அறிந்து இந்த நோய் வராது நீங்களும் உங்களை பாதுகாத்துக் கொள்ளலாம்.

1. சுற்றுச்சூழலில் உள்ள பலவிதமான மாசுக்களும் நச்சுத்தன்மையும்
2. தொழிற்சாலையில் பணிபுரிவோர், தளபாடங்கள் தச்சுவேலைகள், இவற்றின் தூசுகள் மற்றும் துகள்கள்
3. ஆஸ்பெஸ்ரோசிஸ் போன்ற செயற்கை பலகைகள்
4. கல்லு அறுத்தல் அல்லது உடைத்தல், சீமென்ட் தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் பணியாற்றுவோர் அல்லது குடியிருப்போர்
5. பெற்றோலியம் காஸ், இது தொடர்பான மூலப்பொருட்கள்
6. சமையல் புகை, பொரியல், கருகல் வாசனைகள்
7. சுரங்கப் பணியாளர்கள்
8. கப்பல் பணியாளர்கள்
9. தொழிற்சாலைக்கு அருகில் வசிப்போர்
10. தொடர்ச்சியாக Fungus என்ற தொற்றுக்கு ஆளாகுபவர்கள்
11. தொடர்ச்சியான புகைப்பழக்கம் (Smoking Cigarette)
12. ஆர்த்தரைட்டிஸ், லூப்பஸ் போன்ற பல நோய்களின் தாக்கம்.
13. ஏற்கனவே பாக்ரீறியா, வைரஸ் போன்ற நோய்க்கிருமிகளின் தாக்கத்தினால் உண்டான தொற்றுக்களின் விளைவுகள் போன்று இன்னும் பலவாகும்.

**டாக்டர் அவர்களே எனக்கு மன அழுத்தம் (Depression) என்கிற மனநோய் இப்போதுதான் தொடங்கியுள்ளதாக மனநல மருத்துவர் சொல்லியுள்ளார். அதற்குரிய சில மாத்திரைகளையும் கொடுத்திருக்கிறார். ஆனால் அப்படி எந்தப் பாதிப்பும் எனக்குத் தெரியவில்லை. நான் வழக்கம் போல நன்றாக இருப்பதாகவே உணர்கிறேன். பின்பு ஏன் மன அழுத்தம் என்கிறார்கள். அப்படியென்றால் உங்களது வைத்தியத்தில் அதற்கான சிகிச்சைகள் உண்டா?**

பெயர் குறிப்பிடாத வாசகி – ரொறன்ரோ

ஆம், அன்புள்ள சகோதரி உங்களின் ஆதங்கம், அவசரம் எனக்குப் புரிகிறது. நீங்கள் நீண்ட கடிதம் எழுதியிருந்தீர்கள். அதைச்சுருக்கித்தான் இங்கு வினாவாக எழுதியிருக்கிறேன். மனவழுத்தம் என்பது சளி, இருமல், காய்ச்சல் போன்று திடீரென உண்டாகும் நோயல்ல. உடலிலும் உள்ளத்திலும் கொஞ்சம் கொஞ்சமாக தாக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமல்ல, பிறகு நாளடைவில் பாரிய விளைவுகளைக் கொண்டுவரும் மாபெரும் பிரச்சனையாகும். ஒருவருக்கு மனவழுத்தம் உண்டாவதற்கு நூற்றுக்கணக்கான காரணங்கள் இருந்தாலும், உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும், அவரில் உண்டாகும் மாற்றங்கள் அதிலும் ஆரம்ப கட்ட மாற்றங்கள் மிகவும் முக்கியமாகும். இந்த குணங்குறிகளின் அடிப்படையில் அவர் மன அழுத்த நோய்க்கு ஆளாகிறார் என்று இலகுவாக கண்டறிய முடியும். வாசகர்களே... இதன் மூலம் நீங்களே உங்களை பரிசோதனை செய்து கொள்ள முடியும். இதில் ஏதாவது சில குணங்குறிகள் உங்களிடம் இருக்குமாயின் நீங்கள் மனவழுத்த நோய்க்கு ஆளாகத் தொடங்குகிறீர்கள் என்று அர்த்தம்.

### உடல்ரீதியான மாற்றங்களும் குணங்குறிகளும்

அடிக்கடி ஏற்படும் தலைவலி, தூக்கமின்மை அல்லது அதிக தூக்கம், எப்போதும் உடலின் ஒரு பாகத்தில் வலி உணரப்படுதல், தலையின் பின்புறம் அல்லது கழுத்துப்பகுதியில் ஏற்படும் இறுக்கம். நோவு அல்லது கனமான உணர்வு, பசியின்மை அல்லது தீவிர பசி, எப்போதும் ஒரு விதமான சோர்வு அல்லது தாமதமான செயற்பாடு அல்லது சோம்பல் உணர்வு, மலச்சிக்கல், ஜீரண கோளாறுகள், உடல் உடை குறைதல் அல்லது அதிகரித்தல், கை, கால்களில் அதிக வியர்வை அல்லது பதட்டம், படபடப்பு, அடிக்கடி பெருமூச்சு விடுதல், வயிறு எரிச்சல், தாம்பத்திய உறவில் விருப்பமின்மை, புகைப்பழக்கம் அல்லது மது, போதைப்பழக்கம், வலி மற்றும் தூக்க மாத்திரைகளை அடிக்கடி பயன்படுத்துதல், இன்னும் பல...

### உளரீதியான மாற்றங்கள்

அடிக்கடி கோபப்படுதல், தாழ்வு மனப்பான்மை, எதிலும் நம்பிக்கையின்மை, இனம் புரியாத கவலைகள், நெஞ்சுப் பகுதியில் ஒரு வெற்றிடம் அல்லது வெறுமையுணர்வு, அவமானப்பட்டது போன்ற உணர்வுகள், எதற்கும் பயம், பதற்றம், படபடப்பு, அமைதியின்மை, தனிமையை விரும்புதல், பாதுகாப்பற்ற தன்மையை எப்போதும் உணர்தல், எதிலும் சந்தேக உணர்வு, எப்போதும் எதிர்மறையான எண்ணங்களும் அதைப்பற்றிய பேச்சும், தற்கொலை செய்ய உணர்வு, வேலைகள், படிப்பு இவற்றில் விருப்பமின்மை. இப்படி இன்னும் பல.

மேற்குறிப்பிட்ட உடல், உள மாற்றங்கள் குணங்குறிகள் சில உங்களிடம் இருக்குமாயின் நீங்களும் மனவழுத்த நோய்க்கு மெல்ல மெல்ல ஆளாகிக் கொண்டிருக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம். அப்படியிருப்பின் உடனடியாக உளவியல் ஆலோசகர்கள், காரணங்களை கண்டறிதல், சில பயிற்சிகள், ஹோமியோபதி மருந்துகள் போன்றவற்றின் மூலம் முளையிலேயே கிள்ளி நோய்வராது வருமுன் காத்துக்கொள்ளலாம். இதைவிடுத்து தொடக்கத்திலேயே மனச்சோர்வு மாத்திரைகள், மன அமைதி மருத்துவர்கள், தூக்கமாத்திரைகள், போன்றவற்றை எடுக்கத் தொடங்கினால்பின்பு அவற்றிற்கும் அடிமையாகி நிரந்தர மனநோயாளியாக மாறிவிடுவீர்கள். இது எனது தாழ்மையான எச்சரிக்கை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் குடும்பமா?


## வள்ளத்தில் இருந்து இறங்கிய நாம் கரையோரமாக நடந்து வந்தோம்...

செம்மொழி மகாநாட்டிற்கு என்னுடன் எனது பெண் பிள்ளைகளும் வந்தார்கள். அவர்கள் கேரளா பக்கம் போகாதவர்கள். ஆகவே கோயம்புத்தூர் போகும் முன்னர் அங்கு போவோம் எனத் தீர்மானித்து கொச்சின் ஊடாகக் கோயம்புத்தூர் செல்வதாகத் தீர்மானித்தோம். கொச்சினில் உள்ள தேக்கடி நீர்சரணாலயம் பற்றிக் கேள்விப்பட்ட பிள்ளைகள் அங்கு போவதாகத் தீர்மானித்தார்கள். வள்ளத்தில் கணிசமான தூரம் ஆற்றில் எடுத்துச் சென்று மீண்டும் திரும்பக் கொண்டு வந்து கரையில் இறக்கி விட்டார்கள். ஆற்றில் போய் வருகையில் ஆற்றின் இருபுறத்துக் காடுகளில் சில மிருகங்களைக் காண முடிந்தது.

வள்ளத்தில் இருந்து இறங்கிய நாம் கரையோரமாக நடந்து வந்தோம். ஒரு பக்கத்துச் சுவரின் மேற்பரப்பிலே இருந்த குடும்பம் ஒன்று எனது கவனத்தை ஈர்த்தது.

அக் குடும்பத்தில் ஒரு தாய் (மந்தி) தந்தையுடன் (வானரம்) தாயின் மார்போடு அணைக்கப்பட்ட நிலையில் ஒரு குழந்தை. அது ஆணோ பெண்ணோ என அறிய முடியவில்லை. தாயும் தந்தையும் சுவாரஸ்யமாக ஆணின் கையில் இருந்த பழம் ஒன்றினை ருசித்துக் கொண்டிருந்தனர். ஒரு பழம் தான். அதை கடித்துச் சுவைப்பதும் அதன் பின்னர் பெண்ணின் வாயுள் வைப்பதுமாக, சிலசமயம் வைப்பது போலப் பாசாங்கு காட்டுவதுமாக ஒரு லீலை நடந்து கொண்டிருந்தது. ஆண் பெண் சல்லாபித்துக் கொண்டிருந்தன. ஒவ்வொரு தரமும் வானரம் தலையினை மந்திப் பக்கம் சாய்த்து அதன் காதுபட ஏதோ செல்லியது தெரிந்தது. என்ன சொல்லிற்று என்பது எனக்குப் புலப்படவில்லை. ஆனால் பெண்ணின் கொஞ்சலிலும் அதன் முகத்தில் ஏற்பட்ட பாவனையிலும் அது வெட்கத்துடன் தலையைக் கீழே சாய்த்த சாயலிலும் அது எத்தகைய உரையாடல் என்பது எனக்கு உணர முடிந்தது. அவர்களின் காதல் சல்லாபம் என் கண்களை நிறைத்தது. அது விரசமான செயல் இல்லையா எனலாம். ஆசை வெட்கமறியாது.

**"வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
**மந்தி சிந்து கனிகளுக்கு வான் கவிகள் கெஞ்சும்**
**கானவர்கள் விழி எறிந்து வானவரை அழைப்பர்**
**தமனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்..."**

*(வானரம், கவி ஸ்ரீ ஆண், மந்தி ஸ்ரீ பெண்)

"திருக்குற்றாலக் குறவஞ்சி" என்ற நூலிலே மலைவளம் பற்றி திரிகூடராசப்பக் கவிராயர் எழுதியுள்ளார். அதனை நிதர்சனமாகப் பார்க்கின்ற சந்தர்ப்பம் கிடைத்து கவிதையின் இன்பத்தினைப் பருக முடிந்தது.

திடீரெனக் காட்சி மாறிற்று. வானரம் தனது காதலியை விட்டுத் தனது வாரிசின் பக்கமாக தன் பார்வையைத் திருப்பிற்று. இது நேரம் வரை நீங்கள் என்னவாயினும் செய்யுங்கள் என்ற தோரணையில் தாயின் மார்பின் சுகத்தினை அனுபவித்துக் கொண்டிருந்தது குட்டி. அதன் கிட்டே நெருங்கியது தகப்பன். அதன் முகத்திலே தந்தைக்குரிய ஒரு வாஞ்சை தெரிந்தது. மெல்லத் தன்கைகளை நீட்டிக் குழந்தையைப் பற்றியது. சிறிது நேரம் தாயினுக்கு ஓய்வு கொடுக்கலாமென்று எண்ணியதோ அல்லது தாயின் அந்த அரவணைப்பினை அந்தப் பிள்ளை மாத்திரம் பெறுவதா தனக்குப் பங்கில்லையா என்ற பொறாமை உணர்ச்சியாலோ அல்லது பெற்ற பிள்ளையை அணைத்து முத்தமிட வேண்டும் என்ற பாச உணர்ச்சியாலேயோ தெரியவில்லை. குழந்தையை எட்டிப் பற்றியது.
அதன் முகத்தில் தெரிந்த பவ்வியம் மூன்றாவது காரணம் தான் நெருங்கியதற்கானது என என்னை எண்ண வைத்தது.

தந்தையின் பாங்கான பற்றுதல் குழந்தைக்கு முற்றாகவே பிடிக்கவில்லை எனத் தெரிந்தது. அது தந்தையினது பற்றிய கைகளைத் தள்ளிவிட்டு தாயினது மார்பினை மேலும் இறுக்கமாகப் பற்றிக் கொண்டது. தந்தையின் முகத்தில் தோன்றிய ஏமாற்றமும் ஏக்கமும் பரிதாபமாக இருந்தது. அங்கும் இங்கும் பார்த்த தந்தை சிறிது நேரத்தின் பின்னர் இன்னொரு முறையும் முயற்சித்தது. அதே நிராகரிப்பும் ஏமாற்றமும் தான் மிஞ்சியது. தந்தைக்குத் தோல்வியை எற்க முடியவில்லையோ அல்லது குழந்தையை ஒரு முறையாயினும் அணைத்து தனது ஆசையைத் தீர்க்க வேண்டுமென்ற ஆதங்கமோ தெரியவில்லை மூன்றாவது முறையாகவும் ஒரு முயற்சியை மேற்கொண்டது. பெறுபேறு என்னவாயிருக்கும் என்று நான் சொல்லத் தேவையில்லை. ஆனால் இம்முறை இன்னும் ஒரு பக்கத்திலிருந்து நிராகரித்தலைக் காண முடிந்தது. ஒவ்வொரு முறையும் தந்தையின் முயற்சியின் போது குழந்தை தாயையே இறுகப் பற்றிக் கொள்வது தாயினுக்கு உபத்திரவமாகத் தோன்றிற்றோ தெரியவில்லை. பிள்ளை நிராகரித்ததும் தாய் குட்டியுடன் மதிற் சுவரிலிருந்து கீழே பாய்ந்து சிறிது தூரம் சென்று நிலத்தில் குந்தியிருந்தது. குட்டியை உச்சி மோந்தது. மதில் மேல் உறைந்து போயிருந்த ஆண்குரங்கு ஏக்கத்துடன் அதனைப் பார்த்தபடி இருந்தது.

எனது மனம் நாற்பது வருடங்கள் பின்னோக்கித் தாவின!! ★

பொ. கனகசபாபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரஜினியின் அடுத்த புதிய படம் ஹரா

ரஜினி பாட்ஷா படத்தின் இரண்டாம் பாகத்தில் நடிக்கவிருக்கிறார் என்றெல்லாம் யூகத் தகவல்கள் கோடம்பாக்கத்தை வலம் வருகிறது. ஆனால் இதுவரை அவர் புதிய படம் எதையும் ஒத்துக் கொள்ளவில்லை என்பதும், ஹரா முடிந்த பிறகே அடுத்த படம் குறித்து யோசிக்க இருக்கிறார் என்பதுமே உண்மை.

சரி, அது என்ன ஹரா?

சௌந்தர்யா ரஜினியால் தொடங்கப்பட்ட அனிமேஷன் படமான சுல்தான் தி வாரியர் படத்தின் புதிய பெயர்தான் ஹரா.

இந்தப் படத்தின் தயாரிப்பில் பங்குபெற்ற நிறுவனங்களுக்கு உரிய பணம் கொடுத்து செட்டில் செய்துள்ளார் சௌந்தர்யா. அவரது ஆக்கர் ஸ்டுடியோ தயாரிப்பு பொறுப்பை முழுமையாக ஏற்றுள்ளது.

அனிமேஷன் ரஜினி ஒருவேளை ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யாமல் போனால் என்ன செய்வது என்று ரஜினியை வைத்து நேரடியாக சில காட்சிகளை எடுக்கவுள்ளனர். அதாவது பாதி அனிமேஷன் ரஜினி, மீதி ஒரிஜினல் ரஜினி.

இந்த மாற்றங்கள் நிகழ்ந்ததாலும், சுல்தான் தி வாரியர் பழமையாகிப் போனதாலும் ஹரா என்ற புதிய பெயரை சூட்டியுள்ளனர்.

# கன்னடத்தில் களவாணி

தமிழில் பெரும் வெற்றி பெற்ற களவாணி தற்போது கன்னடத்தில் ரீமேக் செய்யப்படுகிறது. இதிலும் களவாணி நாயகி ஓவியாவே நாயகியாக நடிக்கப் போகிறார்.

விமல், ஓவியா நடிப்பில் வெளியாகி சத்தம் போடாமல் பெரும் வெற்றி பெற்ற படம் களவாணி. தஞ்சைப் பக்கத்து பின்னணியுடன் வெளியான இப்படம் நல்ல கதைகளுக்கு என்றுமே வரவேற்பு உண்டு என்பதை ஆணித்தரமாக நிரூபித்த படம். இப்படத்தின் மூலம் விமலுக்கு நல்ல நடிகர் என்ற அந்தஸ்தும், நாயகி ஓவியாவுக்கு சிறந்த அறிமுகமும் கிடைத்தது. இதையடுத்து தற்போது முன்னணி நாயகர்களுடன் ஜோடி சேர ஆரம்பித்துள்ளார் ஓவியா.

இந்த நிலையில் கன்னடத்தில் இப்படத்தை ரீமேக் செய்யவுள்ளனர். இதிலும் ஓவியாவே நாயகியாக நடிக்கப் போகிறார். மேலும் தமிழ் நடிகரான டேணியல் பாலாஜி இப்படத்தில் அண்ணன் வேடத்தில் நடிக்கவுள்ளார். வருகிற நாட்களில் மேலும் பல முன்னணி நாயகர்களுடன் இணைந்து தமிழில் பெரிய ரவுண்டு வரவும் திட்டமிட்டுள்ளாராம் ஓவியா.

# வணிக கல்லூரி பாட புத்தகத்தில் ரஜினியின் "முத்து" படம்

அகமதாபாத் வணிக கல்லூரி பாடப்புத்தகத்தில் ரஜினியின் "முத்து" படம் இடம் பெற்றுள்ளது. இப்படம் தமிழகம் மட்டுமன்றி ஜப்பான் ரசிகர்களையும் கவர்ந்தது.

அங்கு இது வெற்றிகரமாக ஓடியது. ஜப்பானியர்கள் ரஜினிக்கு ரசிகர் மன்றம் தொடங்கினர்.

இதையடுத்து "முத்து" படம் சிறந்த வணிக சினிமா என்ற பெயர் பெற்றுள்ளது. ரஜினியின் மற்ற படங்களுக்கு இல்லாத சிறப்பு இந்த படத்துக்கு எவ்வாறு கிடைத்தது என்ற கேள்விக்குறி கல்விமான்களை சிந்திக்க வைத்தது.

இது குறித்து ஆராய்ச்சி செய்யும் முகமாக இந்தியாவின் பிரபலமான வணிக கல்லூரியான அகமதாபாத் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மெண்ட் பாடப் புத்தகத்தில் "முத்து" படத்தை சேர்த்துள்ளனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷ்கின் கூறுகிறார்

# வரும்... ஆனா வராது...




மிஷ்கினின் நந்தலாலா திரைப்படத்தைப் பார்த்த கமல்ஹாசன் தனது வழக்கத்தை மீறி அது பற்றி பலரிடமும் பாராட்டிப் பேசியதை நாம் அறிவோம். நந்தலாலா போன்ற திரைப்படங்களுக்கு உங்களைப் போன்றவர்கள் ஆதரவு தர வேண்டும் என்று சன்பிக்சர்ஸ் தலைமை செயல் அதிகாரியிடம் நேரடியாக கூறவும் செய்தார்.

நந்தலாலா திரைப்படத்தை இந்தியாவின் மிகச் சிறந்த திரைப்படங்களில் ஒன்றாக தமிழின் முக்கியமான எழுத்தாளர்களான சாரு நிவேதிதா, மனுஷ்யபுத்திரன், பவா செல்லத்துரை போன்றவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வளவும் ஏன், ப்ரிவியூ பார்த்த பத்திரிகையாளர்கள் அனைவரும் எழுந்து நின்று கைத்தட்டி படத்தை வரவேற்றுள்ளனர்.

ஆனால்... இத்தனைக்குப் பிறகும் மிஷ்கின் உண்மை பேசுவதாக இல்லை என்பதுதான் வருத்தமான விஷயம்.

நந்தலாலா படம் ஜப்பானிய இயக்குனர் டகேஷி கிட்டானோ 1999ல் இயக்கிய கிகுஜிரோ படத்தின் அப்பட்டமான தழுவல். கிகுஜிரோவின் ஆன்மாவை சிதைக்காமல் தமிழ் சினிமாவுக்கும், தமிழ் கலாச்சாரத்துக்கும் ஏற்ப அற்புதமாக படமாக்கியிருக்கிறார் மிஷ்கின். மற்றொருவரின் படத்தை அதன் ஆன்மா கெடாமல் எடுப்பது மிகப்பெரிய கலை. உலகின் புகழ்பெற்ற இயக்குனர்கள் பலரும் இதனை செய்திருக்கிறார்கள்.

ஷேக்ஸ்பியரின் நாடகத்தை அகிரோ குரோசவா, கொடார்ட் போன்ற மேதைகள் திரைப்படமாக்கியிருக்கிறார்கள். அப்படி படமாக்கப்பட்ட ரான், த்ரோன் ஆஃப் பிளட் போன்றவை இன்றும் உலக ரசிகர்களால் காவியமாகக் கொண்டாடப்படுகிறது. குரோசவா பிரியரான மிஷ்கினுக்கு இது தெரியாததல்ல.

இந்தியாவிலும்கூட கப்போலோவின் காட்ஃபாதர் திரைப்படத்தைதான் ராம்கோபால் வர்மா சர்க்கார் என்ற பெயரில் திரைப்படமாக்கினார். ஷேக்ஸ்பியரின் மெக்பத் நாடகம்தான் விஷால் பரத்வாஜ் இயக்கிய மெக்பூல். அவரது ஓம்காராவும் ஷேக்ஸ்பியரின் நாடகத்தின் தழுவலே.

இந்தப் படைப்பாளிகளின் படைப்புக்கும் நந்தலாலாவுக்கும் உள்ள ஒரேயொரு வித்தியாசம், அந்தப் படைப்பாளிகள் அவை எந்த நாடகத்தின் பாதிப்பில் அல்லது எந்த திரைப்படத்தின் பாதிப்பில் எடுக்கப்பட்டது என்பதை வெளிப்படையாக அறிவித்தார்கள். அப்படி அறிவித்த பிறகே படப்பிடிப்புக்கு கிளம்பினார்கள்.

ஆனால் நந்தலாலாவின் படைப்பாளி அதனை இதுவரை வெளிப்படையாக அறிவிக்கவில்லை.



# கலகலப்பாக முடிந்த பிரஸ்மீட்!

“மன்மதன் அம்பு” படத்தின் பாடல் வெளியீட்டு விழா சிங்கப்பூரில் நடந்தது. அதை சென்னையில் லைவ் ரிலே செய்து அங்கிருக்கும் செய்தியாளர்களையும் கேள்வி கேட்க வைக்க வேண்டும் என்று நினைத்தாராம் கமல். (“இதெல்லாம் யாருக்கு தோணும்? இவருக்குதான்” என்று பக்கத்திலிருந்த கமலை கை காட்டினார் டைரக்டர் கே.எஸ்.ரவிகுமார்) ஆனால் டெக்னிகல் கோளாறு. மொத்தமும் அவுட்! என்றாலும் அந்த நிகழ்ச்சியை செய்தியாளர்களுக்கு திரையிட்டார்கள்.

எல்லா கேள்விகளுக்கும் கிண்டலும் கேலியுமாக பதில் சொல்லிக் கொண்டிருந்தார் கமல். இந்த கதையில் நீங்க “ஷாவ்னிஸ்ட்டா” என்றார் ஒரு நிருபர். “அதோ அங்க ஒரு அறிவுஜீவி என்னவோ கேட்கிறார்” என்றார் கமல். தெலுங்கு சேனல் ஒன்று தெலுங்கில் பேச சொன்னது அவரை. பேசி முடித்ததும் சார் எங்களுக்கு மலையாளத்தில் பேசிருங்களேன் என்றார் இன்னொருவர். அதுவும் முடிந்ததும் சார்... ஹிந்தி? என்றார் இன்னொருவர். கடைசியாக யாருக்காச்சும் துளுவில் பேசணுமா என்று கமல் கேட்டார். அதைத் தொடர்ந்து இந்த கதை ஏன் கப்பலில் நடக்கணும்? என்ற கேள்விக்கு “கப்பல் ஒண்ணு கிடைச்சுது. அதனாலதான்” என்றார் கமல்!

இப்படியே கலகலப்பாக போய் கொண்டிருந்த பிரஸ்மீட்டில், நகைச்சுவை நடிகரும் பத்திரிகையாளருமான பயில்வான் ரங்கநாதன் ஒரு கேள்வி கேட்டார். தேவி ஸ்ரீ பிரசாத் தன் இசையில் சிரஞ்சீவி படத்தின் தெலுங்கு ட்யூனை அப்படியே யூஸ் பண்ணியிருக்காரே...?. அதற்கு “விடுங்க. அவரு நம்மாளுதான்” என்றார் கமல். விடாமல் மடக்கி மடக்கி அதே கேள்வியில் பயில்வான் தொங்கிக் கொண்டிருக்க, “ரவிகுமார்... அடுத்த படத்துல பயில்வானுக்கு ஒரு கேரக்டர் கொடுத்திருங்க. இல்லைன்னா இப்படித்தான் கேட்டுகிட்டே இருப்பார்” என்று கமல் சொன்னதற்கு செம க்ளாப்ஸ்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசாத வார்த்தைகள்...

"ம்... எல்லாருக்கும் அவங்க அவங்க ரூம் சொர்க்கம் என்பது உண்மைதான். என் ரூம்ல, என் கட்டில்ல தூங்கிஎழும்புற நிம்மதி உலகத்தில வேறெந்த இடத்திலயும் கிடைக்காது.


பாவம் அம்மா... நேற்று நல்லா பயந்திருப்பா... அதுதான் எல்லாரும் காலையிலேயே வந்திட்டாங்க போல இருக்கு. இதில போய் டீ கேட்டு அம்மாவ குழப்ப வேண்டாம். அவங்களே கொஞ்ச நேரத்தில கொண்டுவந்து தருவாங்க.

நேற்று பிறந்த நாளும் அதுவுமா எத்தனை விடயம் நடந்து போச்சு. நேற்று ஒரு நாள்ல மட்டும் எத்தனை மாற்றங்கள்... நேற்று முதல் நாளும் அதுவுமா வேலைக்கும் போக முடியவில்லை. கவி வேற எங்கயும் தன்ன கூட்டிக்கொண்டு போக இல்லை என்று கோபமா இருப்பா. இன்றைக்கு கட்டாயமாக எங்கேயாவது கூட்டிக்கொண்டுபோய் நல்ல கிஃப்ட் ஒன்று வாங்கிக் கொடுக்கனும்.

அம்மா எனக்காக வாழ்க்கையில ரொம்ப கஷ்டப்பட்டுப்போயிட்டாங்க. அம்மா இனி எப்பவுமே சந்தோஷமா மட்டுமே இருக்க வேண்டும். எனக்காக அப்பாட்ட எந்தத் திட்டும் வாங்கக் கூடாது" என்று யோசித்துக்கொண்டிருக்கும்போது தாயின் அழுகுரல் கேட்டது.

"அம்மா ஏன் அழுகிறா? நான் எழும்பி இவ்வளவு நேரமாச்சு, இன்னும் என்னை வந்து பாக்கவும் இல்லை." என்று யோசித்தவாறு வீட்டின் முன்னறைக்குச் சென்றான் சுதாகர்.

மூலையில் உட்கார்ந்திருந்து அழுதுகொண்டிருந்த தாயின் அருகில் சென்று, "ஏன் அம்மா இப்படி அழுறிங்க? இப்ப என்ன நடந்து போச்சென்று இப்படி அழுறிங்க? அம்மா பிளீஸ்மா



அழாதிங்கம்மா... அம்மா பிளீஸ்... நான் திரும்ப திரும்ப இவ்வளவு சொல்லுறன்... அம்மா இனிமேல் உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் வராம நான் பாத்துக்கொள்ளுவன். உங்க பிள்ள நான் இருக்கிறன் அம்மா பிளிஸ்..." என்று கெஞ்சினான் சுதாகர்.

அவன் அருகில் உட்கார்ந்ததைக் கூட உணராமல் தொடர்ந்து அழுதுகொண்டிருந்தாள் தாய். அப்போதுதான் சுதாகர் ஒரு விடயத்தை அவதானித்தான். எல்லோருக்கும் தேநீர் பரிமாறிக்கொண்டிருந்த மாமி, தனக்குத் தராமல் தன்னைக் கடந்து சென்று மற்றவர்களுக்குப் பரிமாறிக்கொண்டிருந்தாள்.

முன்னறையில் இருந்தவர்கள் யாருமே தான் அங்கு இருப்பதை பொருட்படுத்தவே இல்லை, அம்மாவும் இவ்வளவு சொல்லியும் கேட்காம அழுதுகொண்டே இருக்கின்றாரே என்று யோசித்தவாறு திரும்பியவன் அதிர்ந்து போனான்.

"நான் இறந்து போயிட்டேனா? அதுதான் நான் யார் கண்ணுக்கும் தெரிய இல்லையா? அதுதான் நான்சொன்னது அம்மாவுக்கு கேட்க இல்லையா... இல்லையே... நேற்று அக்ஸ்சிடன்ல எனக்கு சின்னக் காயம் தானே பட்டது. கார் தானே நொருங்கிப் போச்சு... ஐயோ நான் சாகக் கூடாது. கடவுளே நான் சாகக் கூடாது. அப்பா அம்மாவுக்கு நான் ஒரே பிள்ள... என்னைவிட்டா அவங்களுக்கு யாருமே இல்ல. நான் அவங்கள சந்தோசமா வைச்சிருக்கவேணும். இப்பதான் நல்ல வேலை கிடைச்சிருக்கு. இன்னும் நான் வேலையில சேரக்கூட இல்ல. புதுக் கார் கூட வாங்கியிருக்கிறனே... நான் சாகக் கூடாது.. யாராவது சொல்லுங்களேன்... நான் சாக இல்லையென்று யாராவது சொல்லுங்களேன்..." என்று கதறிக் கதறி அழுத சுதாகர், வேதனையுடன் தாயின் அருகில் உட்கார்ந்திருந்தான்.

தாயின் கதறல் சுதாகரின் வேதனையை இன்னும் கூட்டுவதாய் இருந்தது. "பத்துமாசம் சுமந்து இந்த இருபத்தேழு வருசமா உன்னை பொத்திப் பொத்தி வளர்த்தது இப்படி பாதியில பறிகொடுக்கத்தானா சுதா? உன் பிள்ள, உன் பிள்ளைகளோட பிள்ளை என்று விருத்தியடைந்து சந்தோசமா இருக்கனும் என்றுதானே சுதா உன்னை பெறும்போது நான் கனவு கண்டன். இந்தக் கனவெல்லாம் பாதியிலேயே சிதைஞ்சு போகும் என்று நான் நினைக்கவே இல்லையே... எந்தநேரமும் அம்மா அம்மா என்று சுத்தி சுத்தி வந்தது இப்படி பாதியில என்னை விட்டுப்போறதுக்கா..." என்று புலம்பிய தாயின் மடியில் தலைவைத்து சாய்ந்திருந்தான் சுதாகர்.

திடீரென நினைவு வந்தவனாக தந்தையை நோக்கிச் சென்றவன், தந்தை கல்லாக உறைந்திருப்பதைக் கண்டு அவரின் அருகில் சென்றமர்ந்தான். "கடைசிக்காலத்தில எங்க ரெண்டுபேரையும் பார்த்துக்கொள்ளுவான், நல்ல வேலை கிடைச்சிருக்கு, இனி எந்தப் பிரச்சினையும் இல்ல என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டது... கடவுளே உனக்குப் பொறுக்கயில்லையா? என்னய எடுத்து என் பிள்ளைய விட்டிருக்கலாமே... நான் வாழ்ந்து முடிச்சிட்டன். அவன் வாழவே இல்லையே... அவன் கல்யாணம் பண்ண இருந்த பிள்ளையின் முகத்தை பார்க்கக் கூட என்னால முடியவில்லையே..." என்று மௌனமாக புலம்பிக்கொண்டிருந்த தந்தையை ஆச்சரியமாகப் பார்த்தான். "அப்பா உங்களுக்கு என்மேல இவ்வளவு பாசமா? இது எனக்குத் தெரியாம போய்விட்டதே... எனக்குத் தெரிஞ்சதெல்லாம் என்னய எந்தநேரமும் திட்டுற அப்பாதானே... ஐயோ... இத நான் புரிஞ்சு கொள்ளவில்லையா... அப்பா என்னய மன்னிச்சு கொள்ளுங்கப்பா..." என்று புலம்பியது அவனது மனது.

அங்கிருந்து மெல்ல அகன்ற அவன், தன் காதலி கவிதா அருகில் அமர்ந்தான். "ஸாரி கவி, உன்னோடு கடைசிவரை வாழனும் என்றுதான் நினைச்சன், ஆனால்..." என்றவன் கவிதாவின் எண்ண ஓட்டத்தில் நிறுத்திக்கொண்டான். "சே... என்னோட வாழ்க்கை இப்படியா அமையனும். பாவம் சுதாகர் எவ்வளவு நல்லவன்.

எவ்வளவு தூரம் அவன நான் அலைய வைச்சிருப்பன். ம்... எல்லாம் முடிஞ்சு போச்சு... இவன்தான் காதலன், இவனைத்தான் கல்யாணம் பண்ணப்போறன் என்று எல்லோருக்கும் சொல்லியாச்சு... இனி எல்லாரும் என்னை ஒரு மாதிரியாப் பார்ப்பாங்க... இப்ப என்ன அழுகிறதா அல்லது அழுகிற மாதிரி நடிக்கிறதா? இப்படி ஆகும் என்று தெரிந்திருந்தால் இவனை காதலித்தே இருக்க மாட்டேனே..." என்று யோசித்துக் கொண்டிருந்தவளை வெறித்துப் பார்த்தான் சுதாகர். என்னடா இது... இவளது அன்பு வெறும் வேஷமா... இப்படியெல்லாம் ஒரு நிமிடத்தில மனசை மாற்றிவிட முடியுமா என்று யோசித்தவாறு தன் நண்பர்களை நோக்கி நடந்தான்.


அவனது இழப்பையிட்டு நண்பர்கள் உண்மையிலேயே வருத்தத்தில் இருந்ததை அவனால் உணரமுடிந்தது. "அப்பாடா... அம்மா அப்பாவிற்கு பிறகு எனக்காக கவலைப்பட நண்பர்களாவது இருக்கிறார்களே..." என்று நினைத்தவாறு தனது நெருங்கிய நண்பன் வித்யனின் அருகில் சென்று அவனது தோள் மேல் கை போட்டான்.

"கவிதாவ நான் ஒரு தலையாக காதலிக்கிறது அவளுக்கு மட்டுமே தெரியும்... யார் என்ன சொன்னாலும்... யார் என்ன நினைத்தாலும் அவளுக்கு வாழ்வு கொடுக்கிற சாட்டில அவள எப்படியும் அடைஞ்சிரனும்... கடவுள்தான் இப்படி ஒரு நல்ல சந்தர்ப்பத்த கொடுத்து எனக்கு ஒரு வழியக்காட்டியிருக்கிறார். இதையே சாட்டா வைச்சு சோகமாக நடித்து கவிதாவோட நெருங்கிப் பழகி என் காதல மெல்லச் சொல்லனும்..." என்றதைக் கேட்ட சுதாகர் மொத்தமாக உடைந்து போனான்.

மேலும் யாரையும் சந்திக்க விருப்பமின்றி... கவலையுடன் அந்த இடத்தைவிட்டு அகன்று தனது கட்டிலில் அமைதியாக காத்திருந்தான் தனது இறுதியான... அமைதியான... மனித மனங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட உலகத்தின் பயணத்திற்காக...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பேண்டா...

- ஹரி நாராயணா

"நண்பேண்டா" இன்றைய இயந்திரமயமான வாழ்க்கையின் வேகத்திற்கு சின்னதாய் ஒரு பிரேக் போட்டு பாலைவனத்தில் பூக்கும் மேக்கூரிப் பூக்களைப்போல நாம் வாழும் வாழ்வின் ஸ்பரிசங்களை உணரவைக்கும் The most powerful phrase.

மனிதனை மனிதனாக வைத்து வாழ்க்கையின் அழகான பக்கங்களின் சுவாரஸ்யங்களை வருடிச்செல்லும் விடயங்களில் நட்புக்கு மிகவும் முக்கியமான இடம் உண்டு.

அழகான ஒரு உறவை அறிமுகப்படுத்த... மணிக்கணக்காக பேசிக்கொண்டிருக்க... சோகத்தின் வேதனைகளை பகிர்ந்து கொள்ள... யார் யாருக்கோ பதிலடிகள் கொடுக்க... வீட்டுப் பிரச்சினைகளைப் பேசிக்கொள்ள... பணத் தேவைகளைப் பூர்த்தி செய்ய... அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ள... நண்பேன்டா... இது அவசியம் தேவை.

கடந்து செல்லும் வாழ்க்கையின் ஒவ்வொரு மணித்துளியிலும் நண்பர்களின் அங்கத்துவம் மிகப் பெரியது. சொந்த உறவுகளை விட நண்பர்களின் உறவு சாதி, மதம், மொழி போன்ற பல விடயங்களுக்கு அப்பாற்பட்டது. ஏழை, பணக்காரன் என்று யோசிக்காமல், தோளின் மேல் கைபோட்டு உடன் வருபவர்கள் நண்பர்களாகத்தான் இருக்க முடியும். தாழ்ந்து கொண்டிருக்கும் போது கைகொடுத்து உதவுபவர்களும் நண்பர்கள் தான். ஏணிப்படிகளாக இருந்து உயர்த்தி விடுபவர்களும் நண்பர்கள் தான். உறவுக்காரர்களைப் போல உதறித் தள்ளுபவர்கள் அல்ல நண்பாகள். எதையும் எதிர்பார்க்காமல் உரிமையோடு உறவாடுபவர்களே நண்பர்கள்.

கல்லூரி ஒன்றில் படித்துக்கொண்டிருப்பவள் ரேணுகா. நட்பு விடயத்தில் அதிகம் பொஸிட்டிவானவள் என்று கூறுவதைவிட சற்று அளவுக்கதிகமாகவே எதிர்பார்ப்பவள் என்று கூறலாம். அவளுடன் பழகும் நண்பர்கள் எல்லாம் அவளை மாதிரியே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பாள். நண்பர்களுக்காக விழுந்து விழுந்து உதவி செய்பவள். அதே போல் தனக்கு ஒன்று என்றால் மற்றவர்களிடம் இருந்து அதிகம் எதிர்பார்ப்பாள். அவளுக்கு நண்பர்கள் என்றால் உயிர். ஆனால் அவளது நண்பர்களால் அவளது எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுக்க முடிவதில்லை. இதனால் அவர்களிடையே அடிக்கடி மனஸ்தாபங்கள், விரிசல்கள், பிரிவுகள்... நட்பு என்பது கொடுக்கல் வாங்கல் அல்ல. அது ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் ஒரு சென்சிட்டிவான உறவு. அதனை சரியான வழியில் நடத்திச் சென்றால் இறுதிப் பயணம் வரை கொண்டு செல்ல முடியும்.

அவர்கள் திருமணமான ஒரு இளம் தம்பதியினர்... அவர்களின் நண்பர்கள் அவர்கள் இருவருக்கும் மிகவும் நெருக்கமானவர்கள். அவர்களது ஊடல் சேட்டைகள், நக்கல்கள், நளினங்கள், துன்பங்கள், துயரங்கள் என்று அவர்கள் உறவின் வெளிப்பாடுகள் எல்லாம் ஒரு தனி ரகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நண்பர்களின் அந்நியோன்னியத்தைப் பார்க்கும் ஒவ்வொருவரையும் பொறாமைப்படவைக்கும். "சே... இப்படி நண்பர்கள் எனக்குக் கிடைக்க மாட்டார்களா..." என்று ஏங்கத்தோன்றும். இவையெல்லாம் விடுத்து 'உங்களிடம் எத்தனை உண்மையான நண்பர்கள் உள்ளார்கள்...' என்று பலரிடம் கேட்டால் அனேகமானவர்களிடம் இருந்து யாருமே இல்லை என்றுதான் பதில் வரும்.

ரேணுகாவைப் போல் நண்பர்கள் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இந்த புனிதமான உறவை மட்டம் தட்டுவதாகவே அமையும். நண்பர்களின் ரசனைகள் வெவ்வேறாக இருக்கலாம். எமது ரசனைகள் கூட வேறுபட்டதாக இருக்கலாம். இவை எல்லாம் நட்பு என்ற வரைவிலக்கணத்திற்கு அப்பாற்பட்டவை. ஒவ்வொரு நண்பர்களின் உணர்வுகளுக்கும் ரசனைகளுக்கும் மதிப்பளிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். நேரடியாகப் பேசி மனஸ்தாபங்களைத் தீர்த்துக்கொள்ளுதல், நண்பர்களை அனுசரித்துப் போகுதல், முரண்பாடுகளைத் தவிர்த்தல் போன்ற விடயங்களில் அதிகம் அக்கறை கொள்ள வேண்டும். நட்பு என்ற விடயம் இயல்பாக, ஒருவரை ஒருவர் அறியாமல், எதுவித எதிர்பார்ப்புகளுமின்றி ஏற்பட வேண்டும். எமது சொந்த விருப்பு வெறுப்புகள் மற்றும் ஒழுங்கு முறைகள் வேறு, நண்பர்கள் மேல் நாம் வைத்திருக்கும் பிரியம் வேறு என்ற பொலிஸியை புரிந்து வைத்துக்கொண்டால் வாழ்க்கையே ஜாலிதான்.

பனைமரத்தைப் போல நண்பர்கள் செயற்கையாக உருவாவதில்லை. அது தானாக விதைக்கப்பட்டு தானாக வளருபவை. தனக்குத் தேவையான நீரை நிலத்தில் இருந்து தானாக உறிஞ்சி எடுத்து கிளைவிட்டு வளம் சேர்ப்பது போல நண்பர்களின் உறவும் தானாக வளர வேண்டியது.

எத்தனையோ மனிதர்கள் எமது வாழ்வியலில் வந்து செல்கிறார்கள். தியாகம், அன்பு, ஆதரவு, அரவணைப்பு, சில துரோகம், மன்னிப்பு என்று எத்தனையோ விடயங்கள் அரங்கேறி முடிகின்றன. இவற்றில் இருந்து சில விடயங்களைத் தெரிவுசெய்து எமக்கான பயணத்தின் பாதையில் நண்பர்களையும் இணைக்க வேண்டும்.

ஒரு மாலைப் பொழுதின் இனிமையான நட்பின் சந்திப்பு... பிரிவின் வலியை மொத்தமாக மறையச் செய்யும் பொழுதுகள்... கண்கள் வலிக்க காற்றோடு கலக்கும் இரவிரவான சிரிப்பொலிகள், பழைய நினைவலைகள்... வார்த்தை பரிமாற்றங்கள்... என்று நண்பர்களின் உறவு தனித்துவமானது. கிடைத்தவனுக்குப் புரியும், கிடைக்காதவனை சிந்திக்க வைக்கும்.

**பத்து மாதம் என்னை சுமக்கவும் இல்லை**
**பிரசவ வேதனையில் நீ துடிக்கவும் இல்லை**
**இருந்தும் நீ என் நண்பேன்டா!**

- நட்பு என்பது நமது ஆரோக்கியம் போன்றது, அதை இழந்த பிறகுதான் அதன் அருமையை உணர்வோம்.
- எந்த ஒரு காயத்திற்கும் நண்பன் மருந்தாவான், ஆனால் நண்பன் ஏற்படுத்தும் காயத்திற்கு மருந்தே இல்லை.
- உன் நண்பனுக்காக எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடு, ஆனால் ஒரு போதும் நண்பனை மட்டும் விட்டுக் கொடுத்து விடாதே.
- வாழ வைப்பவன் இறைவன், வாழத் தெரிந்தவன் மனிதன், வீழ வைப்பவன் துரோகி, தூக்கி விடுபவன் நண்பன்.
- உரிமை கொண்டாடும் உறவை விட, உறவைக் கொண்டாடும் நட்பே சிறந்தது.
- உன் நண்பர்களைக் காட்டு... உன்னைப் பற்றிச் சொல்கிறேன்.
- நமது நண்பர்கள் தான் நமது உண்மையான சொத்துக்கள்.
- வேறு எதுவும் கிடைக்காவிட்டாலும் நீ எங்கிருந்தாலும் உன் நண்பன் உன்னை அடைவான்.
- ஒவ்வொரு நண்பர்களும் புதிய உலகத்தின் வாயிற்கதவுகள்.
- சிறந்த நண்பர்களாக நிறைய நாட்கள் பிடிக்கும்.
- உன்னைப் பற்றி முழுதாக அறிந்திருந்தும் உன்னை விரும்புபவனே உன் நண்பன்.
- ஒரு சில சமயம் உன் நண்பர்களை நீ தேர்ந்தெடுக்கிறாய், சில சமயங்களில் அவர்கள் உன்னைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.
- நமது வாழ்க்கையில் பலர் கடந்து செல்கின்றனர், ஆனால் நண்பர்கள்தான் அழியாத சுவடுகளை ஏற்படுத்திவிடுகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Uravu

**Uravu** is a brave film about immaturity and insecurity destroying the marriage of a young couple who were not really ready for marriage. I call it "brave" because it defies Tamil cultural norms in order to give the couple exactly what they desperately need: a divorce.

The doomed union begins poorly, as a hasty rescue effort that leaves the immigrant husband resentfully indebted to his blithely ignorant Canadian wife. She's the kind of forcefully joyful person who giggles all the time, dances for work and pleasure, and doesn't discuss her desperate inner struggles with anyone - not even with her parents or her "best friend"/co-worker, and certainly not with her husband. In fact, she doesn't have any serious conversation with him until the very end, when it was already too late. Until that point, she dismisses or postpones every dialogue that he starts.





It isn't that she's afraid of confrontation; but, she seems genuinely convinced that his obsessive concerns and her own creeping doubts are silly and will not have any effect on their marriage. Her sheltered life, surrounded by people who have always loved and coddled her, had left her sadly unable to detect or deal with conflict when it did arise.

Her husband has also been coddled all his life. But his coddling came from the Sri Lankan Tamil society with its patriarchal values - which emphasize that women should avoid causing problems at all costs, rather than men' should be reasonable. The husband's paranoid jealousy is revealed when he witnesses his wife hugging her male co-worker on the night of her dance show. When she (laughingly, of course) mentions his sense of insecurity to her mother, she's told to be forgiving because neither dancing nor hugging are allowed for women in Sri Lanka. Perhaps it's because, as burqa apologists say, men are incapable of handling their lust, so it is the duty of women to avoid being provocative. . Of course, that kind of reasoning creates only male chauvinism. Like eternally pubescent boys, men express themselves with vicious, petulant outbursts rather than with the reasoned introspection of true adults. In Uravu, this pitiable attitude is compounded by the husband's sense of powerlessness in a new country with a woman he doesn't know. Over the course of the film, he cruelly cuts her off from everything she loves in order to regain his sense of control. He also hits her. Even without the hitting his manipulations alone would have led any Canadian court to classify him as an abusive partner.


The wife, of course, would never take him to court. In fact, up to the time she finally realizes how awful her husband really was, she's eager to reassure him that she would never call the police or talk to anyone at all about his despicable behaviour towards her. The film seems to expect the audience to applaud her inaction as evidence of her virtue, but to me Uravu is a powerful lesson on the importance of getting help from outside sources, especially when the inside participants are unable to help themselves. Beyond anything, it is a powerful lesson on the importance of serious premarital discussions and agreements regarding values, lifestyles, expectations, and communication strategies. At the very least, such discussions before a wedding might tell the participants whether they're even ready to make the life-changing decision to tie their lives together. Lack of understanding will only make differences irreconcilable and lead eventually (and appropriately) to divorce.



Sivahami Vijenthira



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறந்த
வேலைவாய்ப்புக்களுக்கான
பயிற்சியினைப்
பெற்றுக்கொள்ள...

# JRS College

College of Leadership Excellence!

## DIPLOMA COURSES

- Accounting & Payroll
- Office Assistant
- Computerized Accounting
- Health Office Administrator

## OTHER TRAINING

- Payroll
- Bank Teller
- Food Handling
- Cashier
- Ms Office
- Accpac
- Simply Accounting
- QuickBooks
- Business Communication

*We offer free computer basic class every month

**Tel: (416) 292-2455**
**Fax: (416) 292-4255**

**Scarborough Campus**
4168 Finch Ave. E., Unit 330 (Finch & Midland)
Scarborough, ON M1S 5H6
**Tel: (416) 292-2455 / Fax: (416) 292-4255**

**Etobicoke Campus**
300-5359 Dundas Street West, (Dundas & Kipling)
Etobicoke, ON, M9B 1B1
**Tel: (416) 207-9975 / Fax: (416) 207-0427**
*Some courses are not available in Etobicoke Campus

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கே...

அன்புள்ள என் சுரேஷ்,

நலம். நீங்களும் அப்படியே என்று எதிர்பார்க்கிறேன்.

பிள்ளைகள் இருவரும் மிகவும் நலமாக இருக்கிறார்கள். ஸ்கூலுக்கு ஒழுங்காகப் போய் வருகிறார்கள். மகன் ரொம்ப கெட்டிக்காரன் என்று டீச்சர் எல்லாம் சொல்லும் போது ரொம்ப பெருமையாக இருக்கும். இந்த மாதிரி நேரத்தில நீங்க இல்லையே என்று யோசிக்கும் போதுதான் கவலையா இருக்கு.

என்ன பெரிய கனடா. நமக்கு வேணாம் சுரேஷ். நீங்க திரும்பி வந்திடுங்க. முன்னைய மாதிரி நாம இங்கயே உங்கட வேலைய பார்த்துக்கொண்டு சந்தோஷமா இருக்கலாம். நீங்க திரும்பி வந்தா நிச்சயம் உங்க முதலாளி அந்த வேலைய உங்களுக்குத் தருவார். அன்றைக்கும் கடையில அவர கண்டபோது உங்கள பத்தியே ஒரே பேசிக்கொண்டிருந்தார். என்னால அந்த சந்தோஷமா இருந்த நேரங்கள நினைச்சுக் கவலை தாங்கமுடியாம இருக்குது.

காசு மட்டும் வாழ்க்கை இல்ல. நீங்க இங்க இருந்தப்போ நாம கொஞ்சம் கஷ்டப்பட்டோம். ஆனால் சந்தோஷமா இருந்தோம். நீங்க கனடாவுக்குப் போன பிறகு காசு இருக்கு சந்தோஷம் இல்ல. நான் இரண்டு பிள்ளைகளையும் வைச்சுக்கொண்டு எவ்வளவு கஷ்டப்படுறன் என்று உங்களுக்குத் தெரியுமா? மகள் எந்தநேரமும் உங்கள பத்தியே பேசினபடி. வீட்டில எந்தப் பொருள பாத்தாலும் இது அப்பாட, இது அப்பாட என்று ஓடி ஓடி எடுத்துக் கொண்டுபோய் கவனமாக வைக்கும் போதும், அப்பா எப்பம்மா வருவார் என்று கேட்கும் போதும் எனக்கு அழுகைய அடக்க முடியவில்ல.

உங்களுக்கே நல்லாத் தெரியும். இரண்டு பிள்ளைகளோட தனியா இருந்தா எப்படியிருக்கும் என்று. அவனவன் பார்வைகளும், ரோட்ல போகும் போது சும்மா சும்மா வந்து கதைக்கிறதும், அது எல்லாத்தையும் விட அந்தச் செக் போயின்ட தாண்டிப்போற கொடுமை இருக்கே... கொழும்பு முன்னேற்றமில்ல. ஆனா இன்னும் மோசமா போய்க்கொண்டிருக்கு. ஒரு நகையோட வெளியில நடந்துபோறதுக்கு பயமா இருக்கு. நகை போடாமா போன நம்ம ஆக்களோட கதை தெரியுந்தானே. புருசன் ஒழுங்கா காசு அனுப்ப இல்ல போலிருக்கு என்று எனக்கு கேட்கவே சொல்றாங்க. நல்லா உடுத்தினா, அவன் அங்க குளிருக்க கஷ்டப்பட இங்க இவ இப்பிடி செலவழிக்கிறா என்றும், நல்லா உடுத்தாட்டி அவன் அங்க வேற யாரயோ பார்த்திட்டான், இவள கவனிக்கிறதில்ல என்று சொல்றாங்க. எத்தன பேருக்கு நான் பதில் சொல்றது? ஒவ்வொருத்தருக்கும் பதில் சொல்லியே நான் களைச்சுப்போயிட்டன். இப்ப யார் என்ன சொன்னாலும் அதை நான் காதிலயே வாங்கிக்கொள்றதில்லை.

சரி கொஞ்ச நாளைக்கு அம்மா வீட்டில போய் இருப்பம் என்று யோசித்தால் அங்க இதை விட பிரச்சனை. அப்பா இல்லாம அம்மாவும் கஷ்டப்பட்டவ, என் நிலமை அம்மாவுக்கு நல்லாத் தெரியும். ஆனா அவங்க அண்ணனோட தயவில வாழ்றாங்க என்பதை விட அண்ணிய பத்தி உங்களுக்குத் தெரியும் தானே.

நான் இப்படி எத்தனையோ பிரச்சினையில இருக்கிறன். நீங்க அங்க எந்தப் பிரச்சனையும் இல்லாம காசு மட்டுமே வாழ்க்கை என்று இருக்கிறீங்க. விசா இண்டைக்கு வரும், நாளைக்கு வரும் என்று மூன்று வருசமா காத்துக்கொண்டிருக்கிறம். பிள்ளைகளும் வளர்ந்துகொண்டு வாறாங்க. இந்த நேரத்திலதான் நீங்க அவங்க கூட இருக்கவேண்டும். அப்பா, தயவுசெய்து திரும்பி வந்திருங்க. நானும் வேலைக்கு போறன். இல்ல வீட்டில இருந்துகொண்டு ஏதாவது செய்தாவது சம்பாதித்து தாறன். நாங்க எல்லாரும் ஒண்டா இருக்கலாம். உங்கள கெஞ்சி கேட்கிறன். இந்தக் கனடா நமக்கு வேண்டாம். திரும்பி வந்திருங்க.

இப்படிக்கு,
**பவானி**

அன்புள்ள பவானிக்கு,

நலம்.

உனது கடிதம் பார்த்து அழுதேன். எனக்கும் கவலை அடக்க முடியவில்லை. உன்னைக் கலியாணம் பண்ணும் போது உனக்கு இப்படி ஒரு நிலைமையைக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தது கூட இல்லை. என்னுடைய ஒரே நோக்கமாக இருந்தது உன்னை எந்தக்குறையும் இல்லாம கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது மட்டும் தான். ஆனால் இப்போது அதை என்னால் செய்ய முடியாமல் போனதை நினைக்க மிகவும் வேதனையாக இருக்கிறது.

பிள்ளைகளோடு கதைக்கும் போது எனது கண்ணீரை அடக்க நான் படும் பாடு எனக்கு மட்டுமே தெரியும். சின்னப் பிள்ளைகளைப் பார்க்கும் போதும், அவர்கள் விளையாடும் போதும் எனது மனம் படும் வேதனை உன்னால் உணருவது கடினம். ஒரு கணம் பிள்ளைகளை பிரிந்திருந்து பார்த்தால் உனக்குப் புரியும். அந்தவகையில் இத்தனை பிரச்சினைகளையும் அனுபவித்தாலும் நீ அதிஷ்டசாலி. உனக்குப் பிள்ளைகளோடு இருக்கக்கிடைத்திருக்கிறது. பிள்ளைகள் முகத்தைப் பார்த்தாவது நீ ஆறுதல் அடையலாம். அந்த ஆறுதல் கூட எனக்கு இல்லை.

இவ்வளவு காலமும் உனக்குத் தெரிந்தால் நீ மனம் நோவாய் என்று சில விடயங்களை நான் சொன்னதில்லை. ஆனால் உன் கடிதத்தைப் பார்த்தபிறகு சொல்லவேண்டும் என்று தோன்றியது. கனடா வந்து இந்த மூன்று வருசத்திற்கு ஏஜன்சிக்காரனுக்கு முப்பதாயிரம் மட்டுமே கொடுக்க முடிந்தது. இன்னும் இருபதாயிரம் இருக்கு. என்ன நடந்தாலும் ஒவ்வொரு மாதமும் பத்தாம் திகதி சரியாகக் கொடுக்க வேண்டும். போன மாதம் கொடுக்க முடியாமல் போய், தெரிந்த ஒருவரிடம் வட்டிக்கு பணம் வாங்கிக் கொடுத்தேன். அந்த தெரிந்தவர் வேறு யாருமல்ல ராசா மாமாவின் மகள் வசந்தி. வட்டிக்காசு கொடுக்க கொஞ்சம் தாமதமானதால் வீடு தேடி வந்து என்னோடு ரூமில் இருப்பவர்கள் முன் வசந்தி கத்திய கத்து, என் பிள்ளைகளும் நீயும் இல்லாமல் இருந்தால் தற்கொலை செய்து கொண்டிருப்பேன். அந்தளவிற்கு கூனிக் குறுகிப் போனேன்.

நீ கேட்கலாம் ஏன் வட்டிக்கு காசு வாங்கினேன் என்று. போன மாதம் எனது வேலை போய்விட்டது. நான் செய்துகொண்டிருந்ததோ டிஷ் வோசிங் வேலை. அதற்கு ஆப்பு வைத்தது ஒரு தமிழன். இங்கு தமிழனுக்குத் தமிழன் தான் எதிரி. இப்போ இரண்டு நாளாத்தான் ஒரு றெஸ்ரோரன்ட்ல வேலை கிடைச்சிருக்கு. இந்த வேலைக்கு எந்தத் தமிழன் ஆப்பு வைப்பானோ என்ற ஒரு பயத்தோடு தான் வேலை செய்கிறேன்.

கனடா வந்து இப்போது நல்லாயிருக்கும் தமிழர்கள் தாங்கள் கஷ்டப்பட்டதை ஏனோ மறந்துவிட்டார்கள். புதிதாகக் கனடாவுக்கு வந்திருப்பவர்களுக்கு உதவி செய்யாவிட்டாலும், தாங்கள் அனுபவித்த வேதனையைத்தான் அவர்களும் அனுபவிப்பார்கள் என்று உணர்ந்து எந்த உபத்திரவமும் கொடுக்காமலாவது இருக்கலாம். ஒரு நல்ல நாள், பெருநாள் என்றால் கூட அட, குடும்பத்தைவிட்டுத் தனியாக இருக்கிறான், வீட்டுக்காவது கூப்பிடலாமே என்ற எண்ணம் கூட அவர்களுக்கு வராது. ஆனால் எங்கள் சனங்களிடம் இதை எதிர்பார்ப்பது எங்களது முட்டாள் தனம். அப்படி கூட்பிட்டால் எங்க ஏதாவது உதவி கேட்பானோ அல்லது கடன் கேட்பானோ என்று கூப்பிடமாட்டார்கள்.

கனடாவில் இருக்கிறேன் என்று சொன்னால் ஏதோ கௌவரம் என்று, அல்லது பெரிய விடயம் என்று நினைக்கிறார்கள். கனடா வாழ்க்கை மிகவும் மோசமான வாழ்க்கை. இங்கே இருந்து நல்ல புதுக்காருக்கு முன்னால் நின்று அழகாக உடுத்தி ஜக்கட் போட்டு படம் எடுத்து அனுப்பியதும், இலங்கைக்கு வந்து எக்கச்செக்கமாக செலவழிக்கும் போது அங்கு இருக்கிறவர்கள் நினைக்கிறார்கள் மிகவும் நன்றாக வசதியாக இருக்கிறார்கள் என்று. ஆனால் இங்கு வந்து பார்த்தால் தான் தெரியும் அவர்களது வாழ்க்கையும் வசதியும். அந்தக்கார் சில நேரம் சொந்தக்காராக இருக்காது அல்லது அதுக்கு பைனான்ஸ் கட்டேலாம இருக்கும். செலவழிக்கிற காசு முழுக்க கிரடிட் காட்ல இருந்து; அதுக்குப் பிறகு அந்தக் காட் காசை கட்டிமுடிக்க இரண்டு மூன்று வேலை என்று குடும்பமே சீரழிந்து போய்கொண்டிருக்கும். கனடா வாழ்க்கை மிகவும் கேவலமான வாழ்க்கை. இது அநேகருக்குத் தெரியாது.

இது எல்லாம் எனது ஆதங்கம். விடு... நானும் ஒவ்வொரு நாளும் ஒரு நல்ல செய்தி வரும். என் பிள்ளைகளை சிக்கிரமாகப் பார்க்கலாம் என்று எதிர்பார்த்தபடியே இருக்கிறேன். நீங்கள் இங்கு வந்துவிட்டால் எனது மிகப்பெரிய மனப்பாரம் குறைந்து, சந்தோஷமாக வேலையை பார்த்துக்கொண்டு நிம்மதியாக இருப்பேன். கடவுள் கருணை கிடைக்கும் வரை காத்திருப்போம். இந்தக் காத்திருப்பு எங்கள் பிள்ளைகளுக்கு ஒரு நிம்மதியான, சந்தோசமான வளமான வாழ்க்கைக்கு.

இப்படிக்கு,


**சுரேஷ்**




ரஜினி:
ரோபோ, ரிமோட்,
கார், ப்ளேன்,
பேட்டரி, ட்ரெயின்.



ஆர்யா:
நான் கடவுள்,
நான் பேய்,
நான் அரக்கன்,
நான் பிசாசு.



பரத்:
சேவல்,
புறா,
வாத்து,
கோழி



சிம்பு:
சிலம்பாட்டம்,
புலியாட்டம்,
கரகாட்டம்,
குயிலாட்டம்.



மாதவன்:
குரு என் ஆளு,
த்ரிஷா என் ஆளு,
நமீதா என் ஆளு.



விக்ரம்:
கந்தசாமி,
கருப்பசாமி,
குப்புசாமி,
நொந்தசாமி.



சேரன்:
ராமன் தேடிய சீதை,
அனுமன் தேடிய சீதை,
ராவணன் கடத்திய சீதை.



விஜய்:
வில்லு,
அம்பு,
கபடா,
கத்தி.



நரேன்:
அஞ்சாதே,
ஆறாதே,
ஏழாதே.



தனுஷ்:
படிக்காதவன்,
முட்டாள்,
தறுதலை.



விஷால்
சத்யம்,
சாந்தம்,
அபிராமி,
தேவிபாரடைஸ்.



சாந்தனு:
சக்கரைகட்டி,
உப்புகட்டி,
சுண்ணாம்பு கட்டி.



சரத்குமார்:
ஜக்குபாய,
டீ பாய்,
ஆபீஸ் பாய்.



ஜீவன்:
தோட்டா,
புல்லட்,
ரிவால்வர்,
ரைபில்.



கமல்:
மன்மதன் அம்பு,
அர்ச்சுனன் அம்பு,
கௌதமி வம்பு.



விஜயகாந்த்:
விருதகிரி,
ஜாங்கிரி,
லோங்கிரி,
சோனகிரி.



ஜெயம் ரவி:
சம்திங் சம்திங்,
நத்திங் நத்திங்,
எவெரிதிங் எவெரிதிங்,
எனிதிங் எனிதிங்.



அஜித்
மங்காத்தா,
உங்காத்தா,
எங்காத்தா.



ஜீவா:
ஈ, கொசு,
எறும்பு, கரப்பன்
பூச்சி.



கார்த்தி:
பருத்தி வீரன்,
புண்ணாக்கு வீரன்,
ஆமணக்கு வீரன்.



சசிகுமார்
ஈசன்,
நேசன்,
ராசன்.



நகுல்:
காதலில் விழுந்தேன்,
பைக்ல விழுந்தேன்,
காலில் விழுந்தேன்.



சூர்யா:
வாரணம் ஆயிரம்,
தோரணம் ரெண்டாயிரம்,
பூரணம் மூவாயிரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆண்கள் பலவீனமானவர்கள் அல்ல!

கடந்த இதழில் ரஞ்சனி எழுதி சர்ச்சைகளைக் கொடுத்த ஆண்கள் பற்றிய கட்டுரையின் எதிரொலி இது.

உலகில் பல்வேறு சமூகங்களாலும் ஆண், பெண் இருபாலாருக்குமான குணாதிசயங்கள் அல்லது இயல்புகள்... குடும்பம் என்ற கட்டமைப்பையும், எதிர்கால சந்ததியினரான அந்தக் குடும்பத்தின் குழந்தைகளையும் கருத்திற்கொண்டு வரையறுக்கப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாக இருவருக்குமே சில குறிப்பிட்ட பொறுப்புகள், கடமைகள் உள்ளன.

அந்த வகையில் மிக முக்கிய பொறுப்பான குடும்ப வருமானம் ஆணிடமும், குடும்பத்தின் கட்டுக்கோப்பும் குழந்தை வளர்ப்பும் பெண்ணிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போதைய கால கட்டத்தில் இந்த பொறுப்புக்கள் குறித்த ஒருவரை மட்டும் சாராது இருவருக்கும் பொதுவானதாக மாற்றம் பெற்றுள்ளது.

ஒரு சமுதாயத்தில் ஆணின் இயல்புகளாக அவன் எதற்கும் அழக்கூடாது, துக்கத்தில் துவண்டு போகக் கூடாது, இலகுவில் கோபப்பட வேண்டும் போன்ற இயல்புகளும் இதற்கு நேர் எதிரான இயல்புகளை கொண்டவர்கள் பெண்கள் என்றும் வரையறுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. ஆண் இலகுவில் அழமாட்டான் அல்லது பெண் இலகுவில் அழுவாள் என்பது சமுதாயத்தினால் வரையறுக்கப்பட்டது என்பதற்கும் அப்பால், இந்த இயல்பு இயற்கையானது என்று விஞ்ஞான ரீதியாக விளக்கங்கள் அளிக்கப்பட்டும் உள்ளது. இதேபோன்று இவ்விருபாலாரின் பல்வேறு இயல்புகளும் ஆராயப்பட்டு அதற்கான விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளது.

சமூக மற்றும் விஞ்ஞான ரீதியிலான சிந்தனைகள் எதுவும் இன்றி ஒரு ஆணைக் குறைகூறுவதையே நோக்கமாகக் கொண்டு இவ்வியல்புகள் அவனது பலவீனங்கள் என்று கூறிப்படுவது முற்றிலும் தவறான விடயமாகவே பார்க்க வேண்டும்.

இருவரது வருமானமும் ஒரு குடும்பத்தை நல்லபடியாக நடத்துவதற்கு தேவைப்படும் இக்காலத்தில் வீட்டு நிர்வாகத்திலும், குழந்தை வளர்ப்பிலும் ஆண்களும் பங்கெடுத்துக்கொள்கின்றனர். தங்களது கடமையை செவ்வனே நிறைவேற்றவும் செய்கிறார்கள்.

ஒரு ஆணின் தவறு என்பது சமுதாயத்தில் பெரிய மாற்றத்தைக் கொண்டுவராது. ஆனால் ஒரு பெண்ணின் தவறு ஒரு குடும்பத்திலோ அல்லது சமுதாயத்திலோ பாரிய மாற்றத்தைக் கொண்டுவரும். இதனைத் தவிர்ப்பதற்காகக் கூட சமுதாய ரீதியில் சில வரையறைகளை முன்னோர்கள் உருவாக்கியிருக்கலாம். இப்படியான நிலையை மாற்றக்கூடிய பல சந்தர்ப்பங்கள் பெண்களுக்கு இருந்தபோதும் அவர்கள் அதனைச் செய்யாதது ஏன்? அப்படியென்றால் தங்கள் தேவை என்ன என்பது பெண்களுக்குத் தெரியாதா? அல்லது அவர்கள் சிந்திக்கத் தெரியாதவர்களா?

சந்தர்ப்பம் கிடைக்கும் போது ஆண் மட்டுமல்ல பெண்ணும் தவறு செய்யக்கூடியவளே. அதிலும் தமக்கான ஆதாயத்திற்காக ஒரு பெண் எந்தவகையான தவறையும் மிகவும் துணிச்சலுடன் செய்யக்கூடியவளே.

ஒரு பெண்ணின் சம்மதம் இன்றியோ அல்லது அவளின் பங்களிப்பு இன்றியோ ஒரு ஆணால் தவறு செய்ய முடியாது. குறித்த ஒரு பெண்ணின் நடை, உடை என்பது ஒரு ஆணை தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்றது என்ற கூற்றுக்கு இன்றைய பெரும்பாலான பெண்கள் சொல்லும் காரணம் 'பெண் சுதந்திரம்' என்பது.

இன்றைய பெண்களில் 90 சதவீதமானோர் ஆண்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவே தங்களின் நடை, உடைகளில் மாற்றத்தை கொண்டுவந்துள்ளனர் என்பது முற்றிலும் உண்மையான விடயம். அதனை அவர்களே ஒப்புக்கொள்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆண்கள் தங்களுக்கான சுதந்திரம் என்று கூறிக்கொண்டு தங்களது நடை, உடைகளில் வரம்பை மீறியது கிடையாது.

'பெண் சுதந்திரம்', 'பெண் விடுதலை', 'பெண்கள் மென்மையானவர்கள்' என்பவை பெண்கள் தாங்கள் செய்யும் தவறுகளை மறைப்பதற்கான ஒரு கவசம் மாத்திரமே. இந்தப் போர்வைக்குள் பெண்கள் தங்கள் தவறுகளை மறைத்துக்கொள்கிறார்கள். தங்களது தவறுகளை மறைப்பதற்கு பெண்கள் ஆண்களை குற்றவாளிகளாக்கி தமக்குச் சாதகமான விடயங்களை ஆண்களின் பலவீனங்களாக்கி அவர்களை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறார்கள்.

-அபி




பக்கம் 9, In சுவை பகுதியில் உள்ள சிறுவர்கள் இவர்கள்தான்!

பிரேம்ஜி - வெங்கட் பிரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவு திரைப்படவிமர்சனம் - மைதிலி தயாநிதி

பொழுதுபோக்கினை முக்கிய இலக்காகக்கொண்டு வெளியாகும் பெரும்பாலான இந்தியத் தமிழ்த் திரைப்படங்கள் மத்தியிலே, கனேடிய – இலங்கைத் தமிழரான திவ்வியராஜனின் நெறியாள்கையில் உருவான "உறவு" எனும் திரைப்படம் பார்ப்பவரின் சமூக பிரக்ஞையைத் தூண்டும் திறன் கொண்டதாயும், அழகியற்கலை நுகர்வுக்கு நல் விருந்தாயும் அமைகிறது. கனடாவிலே திருமணம் எனும் நிறுவன பங்குதாரர்களான தம்பதியர்க்கிடையே ஏற்படும் முரண்பாடுகள், மன வேற்றுமைகள் காரணமாக மணமுறிவு அதிகரித்து வரும் வேளையில் (Vanier Institute கனடாவில் 40% வீதமான திருமணங்கள் மணமுறிவில் முடிவடைவதாய் கடந்த மாதம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது) கணவன்–மனைவி பந்தத்தை மையமாகக் கொண்டு "உறவு" எனும் தலைப்பில் இப்படம் வெளிவந்துள்ளமை பொருத்தமானதே. ஆணாதிக்கம் படைத்த தந்தைவழிச் சமூக விழுமியங்களை மாத்திரம் உள்வாங்கிக் கொண்ட ஆண், அதே சமூகத்தில் உதித்த, ஆனால் கனேடிய கலாசாரத்திற்குத் தன்னை இசைவாக்கம் செய்து கொண்ட (bi-cultural) பெண் எனும் இரு துருவங்கள் திருமண பந்தத்ததில் இணைந்த பின்னர் ஏற்படும் பிரச்சினை திரைக்கதைப் பொருளாய் அமைந்துள்ளது. இவர்களுக்கிடையிலான முரண்பாடுகளின் தீவிரத்தை உணர்த்துமுகமாக கதாநாயகன் கனடாவிற்குப் புதியவனாகவும், கலையார்வமற்றவனாகவும், கதாநாயகி கனடாவில் கல்வி கற்று வேலை செய்பவளாயும், கலையுணர்வு மிக்கவளாயும் காட்டப்படுகின்றாள். மனைவியின் உடல் மீது கணவனின் ஆதிக்கம், அதிகாரம் தொடர்பாகத் தமிழ்ச் சமூகத்தினரிடையே தலைமுறை, தலைமுறையாகப் புரையோடிப் போயிருக்கும் கருத்துகள் எவ்வாறு புலம் பெயர்ந்த நாட்டிலும் திருமண வாழ்க்கையின் முரண்பாடுகட்கு வித்திடுகின்றன என்பதைத் திரைப்படம் அழகாகச் சொல்கிறது. ஆணின் மேலாதிக்கத்தை வலுப்படுத்தும் வகையில் புலம் பெயர் சமூக அங்கத்தினர் சிலர் கணவனுடன் பேசும் விடயங்கள் கணவன்–மனைவி உறவுப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குவதுடன், புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு என்பவற்றின் பங்களிப்பினையும் கேள்விக்குள்ளாக்குகின்றன. இவ்வகையில் பரந்துபட்ட சமூக மாற்றமொன்றினைப் புலம்பெயர் தேசத்தில் இத்திரைப்படம் அவாவி நிற்கின்றது எனலாம்.

பரத நடன நிகழ்வுடன் தொடங்கி அதனுடனேயே முடிவுறும் இத் திரைப்படத்தில் நடனம் பெண் சுதந்திரத்தின் குறியீடாக அமைகிறது என்று கொள்ளலாம். மனைவியின் உடல் தனக்கே சொந்தம் எனும் கருத்தியலின் தீவிர எல்லையைத் தொடும் கணவன் நடனத்தை மனைவியின் உடல் அழகைப் புறத்திலுள்ளோர் பார்த்து இரசிப்பதற்குரிய ஒரு சாதனமாக மட்டும் பார்க்கிறான். பெண்ணுக்கோ நடனம் தனது உடலின் மீது அதிகாரத்தைக் (power over her body) கொடுக்கிறது. அத்துடன், கணவனின் துணையின்றியே (intervention) பரந்த பல்வேறுபட்ட சமுதாயத்துடன் நடனம் மூலமாக அவள் தன்னைப் பிணைத்துக் கொள்ளக் கூடியதாக இருப்பது அவளின் தனித்துவம், சுயமதிப்பு என்பவற்றுக்குப் பலம் சேர்க்கின்றது. மனைவி என்ற ஸ்தானத்திலிருப்பவள் என்பதால் பெண் ஆணின் நிழலாக மட்டும் இருப்பவளா என்ற கேள்வியை படத்தில் நடனம் பற்றிய சர்ச்சை எழுப்புகிறது. ஆலயத்தில் கணவன் – மனைவி சச்சரவு குறித்து விடுப்புக் கதைக்கும் பெண்ணுக்கு, முத்துத்தாண்டவரின் கீர்த்தனத்திலே "ஆர நவமணி மாலைகள் ஆட" என்று தொடங்கும் சரணத்திலிருந்து சில அடிகளைச் சொல்லி, அந்த இறைவனே ஆடும்பொழுது ஏன் நம் பெண்கள் மட்டும் ஆடக் கூடாது என்று ஒரு ஆண்மகன் கேட்பது அர்த்தம் பொதிந்த, சிந்தனைக்குரிய வினாவாக எனக்குத் தோன்றியது.

இத்திரைப்படத்திற்கு வலுச்சேர்க்கும் அம்சங்கள் அநேகமுண்டு. நடிகர்கள் அனைவரும், தத்தம் பாத்திரத்திரப் பண்பினை உணர்ந்து மிக இயல்பாக நடித்துள்ளனர். இனிய இசை, நடனம், பாடல்கள் என்பன கதையோட்டத்துடன் பின்னிப் பிணைந்து படத்திற்கு மெருகூட்டுகின்றன. எனினும், உரையாடல்கள் மூலமாகக் கதை நகர்த்தப்படுவதும், முகபாவங்கட்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் கமராத் தொழில் நுட்பம் அதிகளவு பயன்படுத்தப்படாமையும் நாடகம் பார்க்கும் உணர்வினை ஏற்படுத்துகிறது. படத்தின் கட்டுக்கோப்பைப் பேணும் வகையில் சில காட்சிகளைத் தவிர்த்திருக்கலாம் அல்லது சுருக்கியிருக்கலாம்: உதாரணமாக, அரசாங்க அதிபருடன் கதாநாயகனின் சந்திப்பு. இவை எவ்வாறாயினும், உறவு நடிப்பு, கலையம்சங்கள் மூலமாக மனதிற்கு மிகுந்த நிறைவையும், கதைக்கரு வழியாகச் சமூகம் தொடர்பான சிந்தனையையும், மொத்தத்தில் கனேடியத் தமிழ்க் கலைஞர் திறமைகள் குறித்த பெருமிதத்தையும் ஒருங்கே தருகிறது.

# நீலவிழிகளின் நீலசபையர்



பிரித்தானியாவின் முடிக்குரிய இளவரசர் வில்லியத்தின் திருமணம் பற்றிய அறிவித்தல் சென்ற நவம்பர் மாதம் திடீரென வெளிவந்து பலரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்திருந்தது.

ஏப்ரல் மாதம் 29ம் திகதி 2011ல் நடக்க இருக்கும் அரசகுடும்பத்தைச் சேர்ந்த வில்லியம் - கேற் மிடில்ரெனின் திருமணத்தை முன்னிட்டு ஏற்கனவே பிரித்தானியாவில் வங்கி விடுமுறையை அறிவித்திருக்கிறார்கள். வியாபாரிகள் வில்லியம் - கேற்றின் படங்களோடு கூடிய திருமண ஞாபகார்த்த தட்டுக்கள், கோப்பைகள், நகைகள் என்று இப்பொழுதே தயாரிக்கத் தொடங்கி விட்டனர். விமானப்பயணத்திற்கான சீட்டுக்கள் விற்பனையாகத் தொடங்கிவிட்டன. இத்திருமணத்தின்போது விருந்தினர் தங்கும் விடுதிகள், வாடகை வண்டிகள் போன்றவை மூலம் சுமார் 620 மில்லியன் பவுண்ஸ் பெறுமதியான வியாபாரம் பிரித்தானியாவில் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கிறார்கள்.

பிரித்தானிய இளவரசர் வில்லியம் தனது காதலி கேற்றுக்கு அணிவித்த திருமண உடன்பாட்டுக் கணையாழி 18 கரட் நீள்வட்ட நீலசபையரில் அமைந்திருந்தது. இந்த மோதிரத்தின் சொந்தக்காரர் யார் தெரியுமா? வேறுயாருமல்ல, வில்லியத்தின் தாயார் டயனாதான். வில்லியத்தின் தாயாரான டயனாவிற்கு திருமண உடன்பாட்டின்போது 1981ம் ஆண்டு யூலை மாதம் தகப்பனான இளவரசர் சாள்ஸ் அணிவித்திருந்த அதே மோதிரம் தான் இது. இந்த மோதிரத்தில் உள்ள நீலசபையர் இலங்கையின் மலையகப்பகுதியில் உள்ள இரத்தினபுரியில் நிலத்திற்கடியில் இருந்து எடுக்கப்பட்டது என்பது பலருக்குத் தெரியாது. அதுமட்டுமல்ல, இலங்கை மண்ணில் புதைந்து கிடந்த வைரக்கல்தான் இன்று இரண்டாவது எலிசபெத் மகாராணியாரின் முடியிலும் அமர்ந்து இருக்கிறது. உங்கள் ஊர் வைரத்தையும், சபையரையும் பார்க்க விரும்பினால் நீங்களும் நேரேசென்று பார்க்கலாம். வசதியில்லாவிட்டால் இருக்கவே இருக்கிறது தொலைக்காட்சி!

டயனாவின் திருமண வைபவம் 1981ல் நேரடியாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டபோது, சுமார் 750 கோடி மக்கள் பார்த்த தொலைக்காட்சி நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. இம்முறை எத்தனை கோடியோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிச்சன் Corner!

## தாய்லாந்து ரெட் ஃபிஷ் கறி

**தேவையான பொருட்கள் :**

| | | |
|---|---|---|
| தேங்காய்ப்பால் | - | இரண்டு கோப்பை |
| மீன் | - | அரைக்கிலோ |
| வெங்காயம் | - | ஒன்று |
| சோளமாவு | - | இரண்டு தேக்கரண்டி |
| எலுமிச்சைச்சாறு | - | ஒரு மேசைக்கரண்டி |
| மீன் சாஸ் | - | ஒரு மேசைக்கரண்டி |
| சோயா சாஸ் | - | ஒரு மேசைக்கரண்டி |
| கொத்தமல்லி | - | ஒரு மேசைக்கரண்டி |
| பேஸில் இலை | - | ஒரு மேசைக்கரண்டி |

**அரைக்க:**

| | | |
|---|---|---|
| காய்ந்தமிளகாய் | - | ஆறு |
| பூண்டு | - | நான்கு பற்கள் |
| இஞ்சி | - | ஒரு துண்டு |
| லெமன் கிராஸ் | - | ஒன்று |
| தனியா | - | ஒரு மேசைக்கரண்டி |
| மிளகு, சீரகம் | - | தலா ஒரு தேக்கரண்டி |
| உப்புத்தூள் | - | ஒரு தேக்கரண்டி |
| எண்ணெய் | - | இரண்டு மேசைக்கரண்டி |


**செய்முறை :**

மீனை சுத்தம் செய்து வேண்டிய அளவு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். காய்ந்தமிளகாயை தண்ணீரில் ஊறவைத்து அதனுடன் அரைப்பதற்கு தேவையான பொருட்களை சேர்த்து மையாக அரைத்து வைக்கவும். சட்டியில் எண்ணெயை ஊற்றி உடனே அரைத்த மிளகாய் விழுதைப் போட்டு வதக்கவும். தொடர்ந்து அரைக்கோப்பை தேங்காய்ப்பாலை ஊற்றி நன்கு கலக்கி விட்டு வேக விடவும். அரைத்த மசாலாவின் பச்சை வாசனை நீங்கும் வரை வேகவிடவும். பிறகு மீதியுள்ள தேங்காய்ப்பாலில் சோளமாவை கரைத்து ஊற்றவும். அதைத் தொடர்ந்து நறுக்கிய வெங்காயம், சோயா சாஸ், மீன் சாஸ், கொத்தமல்லி மற்றும் பேஸில் இலைகளை போட்டு, அரைக்கோப்பை நீரைச் சேர்த்து உப்பை பதம் பார்த்து விட்டு கொதிக்க விடவும்.

சாஸ் கொதிக்க ஆரம்பித்தவுடன் அடுப்பை குறைத்து வைக்கவும். சாஸ் வேண்டிய அளவிற்கு கெட்டியானவுடன் மீன் துண்டுகளைப் போட்டு வேகவிடவும்.

மீன் வெந்தவுடன் எலுமிச்சைச்சாற்றை ஊற்றி இறக்கி வெள்ளைச் சோற்றுடன் சூடாக பரிமாறவும்.





## தாய்லாந்து சிக்கன் பிரைட் ரைஸ்

**தேவையான பொருட்கள் :**

| | | |
|---|---|---|
| தாய்லாந்து ஜாஸ்மின் ரைஸ் அல்லது பாஸ்மதி ரைஸ் | - | 2 கப் |
| தேங்காய்ப்பால் | - | 200 மி.லி. |
| உப்பு | - | 1 1/2 ஸ்பூன் |
| எலும்பில்லாத சிக்கன் துண்டுகள் (நீளவாக்கின் மெலிதாக அரிந்தது) | - | 1/2 கப் |
| சிகப்பு குடை மிளகாய் துண்டுகள் | - | 1/4 கப் |
| ஸ்பிரிங் ஆனியன் | - | ஒரு கொத்து |
| பெரிய வெங்காயம் (நீள வாக்கில் அரிந்தது) | - | ஒன்று |
| பிஷ் சாஸ் | - | 2 ஸ்பூன் |
| காய்ந்த மிளகாய் | - | 4 தண்ணீரில் ஊறவைத்து அரைத்தது |
| பூண்டு விழுது | - | ஒரு ஸ்பூன் |
| சீனி | - | 1/2 ஸ்பூன் |
| தேங்காய் எண்ணெய் | - | ஒரு டேபிள் ஸ்பூன் |
| சன்ஃப்ளவர் எண்ணெய் | - | ஒரு டேபிள் ஸ்பூன் |


**செய்முறை :**

கெட்டியான தேங்காய்ப்பாலில் தண்ணீர் ஊற்றி 4 கப் ஆக்கிக் கொண்டு அரிசியில் தண்ணீருக்கு பதில் அதனை ஊற்றி ரைஸ் குக்கரில் ஒரு ஸ்பூன் உப்பு சேர்த்து வேக வைத்துக் கொள்ளுங்கள். தாய்லாந்து பிரைட் ரைஸுக்கு தேங்காய்ப்பாலில் வேக வைத்த சாதம்தான் நல்ல மணமாகவும், சுவையாகவும் இருக்கும். வாணலியில் தேங்காய் எண்ணெய், சன்ஃப்ளவர் எண்ணெயை கலந்து ஊற்றவும். எண்ணெய் காய்ந்ததும் பூண்டு விழுதை 30 வினாடிகள் போட்டு வதக்கவும். சிக்கன் துண்டுகளை சேர்த்து நன்றாக 2 - 3 நிமிடங்கள் வேகும் வரை வதக்கவும். பிஷ் சாஸ் ஊற்றவும். மிளகாய் விழுது, சீனி, உப்பு சேர்த்து குடைமிளகாய், வெங்காயம் சேர்த்து ஒரு நிமிடம் மட்டும் வதக்கவும். வேக வைத்த சாதம் சேர்த்து பிரட்டி ஸ்பிரிங் ஆனியனை அரிந்து தூவவும். ஃப்ரைட் ரைஸ் ரெடி.

- ஷெரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைக் குயில் பி.சுசீலாவின் ஆசை!

தமிழில் மட்டும் 20,000 பாடல்கள். பிறமொழிகளையும் சேர்த்தால் 40,000 மேல். இசைக்குயில் இளவரசி பி.சுசீலாவின் இந்த வரலாற்று பெருமையை இசை கேட்கும் அத்தனை பேரும் பிரமிப்போடு பார்க்க வேண்டிய தருணம் இது. "பி.சுசீலா டிரஸ்ட்" என்ற ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் வறுமையில் இருக்கும் பாடகர்களுக்கு மாதாந்த பென்ஷன் கொடுத்து வருகிறார் இசைக்குயில். இந்த எண்ணிக்கையை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்பது இவரது விருப்பம்.


இவரது லட்சியத்திற்கு தோள் கொடுக்க சங்கரின் சாதகப்பறவைகள் இன்னிசை குழுவும், பிரபல தொலைக்காட்சி நிறுவனமான விஜய் டிவியும் இணைந்து நேரு உள் விளையாட்டரங்கில் இவரது டிரஸ்ட் சார்பாக 'சிகரங்களின் சங்கமம்' என்ற இசை நிகழ்ச்சியை நடத்தியது. இந்த நிகழ்ச்சியை ஆர்எம்கேவி நிறுவனம் அனுசரணை வழங்கியது.



நிகழ்ச்சியில் வாழ்நாள் சாதனையாளர் விருதை பி.பி. ஸ்ரீநிவாசுக்கும், டிஎம்.சௌந்தரராஜனுக்கும் வழங்கினார்கள். இந்த விழாவில் பாலமுரளி கிருஷ்ணா, கே.ஜே.யேசுதாஸ், எஸ்.பி.பாலசுப்ரமணியம், வாணி ஜெயராம், சித்ரா உள்ளிட்ட ஏராளமான இசை மேதைகளும் கலந்து கொண்டார்கள்.

இது தொடர்பாக நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பில் இசைக்குயில் இளவரசி பி.சுசீலாவிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டன. எல்லாவற்றுக்கும் யார் மனதும் நோகாமல் பதிலளித்தார் சுசீலா. பழைய பாடல்களில் உள்ள இனிமை புதிய பாடல்களில் இல்லையே என்ற கேள்விக்கு, ஒரேயடியாக அப்படி சொல்லிவிட முடியாது. புதிய பாடல்களில் கூட சில பாடல்களில் இனிமை உண்டு என்றார்.

முன்பு இவர் பாடிய பழைய பாடல்களை இப்போது டிவியில் பார்க்கிற போது அவரையறியாமல் கண்ணீர் வருமாம். அதுவும் உன்னை காணாத கண்ணும்.. நாளை இந்த வேளை பார்த்து.. போன்ற பாடல்களை கேட்கும்போது கண்ணீர் வரும் என்கிற பி.சுசீலா, இசைப்பள்ளி ஒன்றை தொடங்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். ஆனால் அதற்கு நிறைய செலவாகும். அரசு பண உதவி செய்தால் ஏற்படுத்தலாம் என்றார். எது எதற்கோ பணத்தை அள்ளி இரைக்கும் இந்திய அரசு, பி.சுசீலாவின் ஆசையை நிறைவேற்ற மனசு வைக்கணும்.



# ஜெய்யின் இயக்குனர் ஆசை

படம் இயக்க வேண்டும் என்ற ஆசை இரண்டு படம் நடிப்பதற்குள்ளேயே ஒவ்வொரு நடிகனின் மனதிலும் உதித்துவிடும்.


சிலர் இந்த எண்ணத்தை உதிர்த்துவிடுவார்கள், சிலர் ஊதி பெரிதாக்குவார்கள். ஜெய் இரண்டாவது வகை.

இந்த இரண்டாவது வகைக்கு இன்னொரு உதாரணம், தனுஷ். படம் இயக்க வேண்டும் என்பது எனது விருப்பம் என்று அறிவித்தவர் தனது அண்ணன் செல்வராகவனின் படங்களில் நடித்ததோடு உதவி இயக்குனராகவும் பணிபுரிந்தார். அந்த ரூட்டைதான் பிடித்திருக்கிறார் ஜெய்.

முருகதாஸின் உதவியாளர் சரவணன் இயக்கும் படத்தில் இரண்டு ஹீரோக்களில் ஒருவராக ஜெய் நடிக்கிறார். இந்தப் படத்தில் நடிப்பதோடு சரவணனின் அசிஸ்டெண்டாகவும் பணிபுரிய திட்டமிட்டுள்ளாராம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னச் சின்ன சுட்டிகளே!
### இது உங்கள் உலகம்...



கதை...
கார்ட்டூன்...
காமிக்ஸ்..

தொகுப்பு: மாலினி அரவிந்தன்


# யானை பார்த்த கதை



சுட்டிகளே நலமா? நத்தார் விடுமுறையை நன்கு பயன்படுத்தினீர்களா? தைப்பொங்கலைக் குடும்பத்தோடு கொண்டாடினீர்களா? கல்விச் செல்வம்தான் தமிழர்களாகிய எங்கள் அசையாத சொத்து என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்து அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்.

ஒரு விடயத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளாவிட்டால் யானை பார்த்த கதை போலத்தான் இருக்கும் என்று ஊரிலே சொல்வார்கள். நீங்கள் யானையைப் பார்த்திருக்கிறீர்களா? நிச்சயமாகப் பார்த்திருப்பீர்கள். பார்க்காவிட்டால் அது எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். இதோ இவர்களின் கற்பனையைப் பாருங்கள்.

யானைக்கு அருகே சென்று தொட்டுப்பார்த்த சிலர் அது எப்படி இருக்கும் என்று சொன்னதை வாசித்துப்பாருங்கள். ஏனென்றால் இவர்கள் பார்வை அற்றவர்கள். ஆனாலும் யானையை எப்படியாவது தொட்டுப்பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக தொட்டுப் பார்த்தார்கள். தாங்கள் அறிந்து வைத்திருந்த ஒரு பொருளை நினைவில் வைத்து, இப்படித்தான் யானை இருக்கும் என்று கற்பனை பண்ணிப் பார்த்தார்கள்.



முதலாவதாக யானையின் உடம்பைத் தொட்டுப் பார்த்தவர் யானை சுவரைப்போல இருக்கும் என்றார். இரண்டாவதாகத் தும்பிக்கையைத் தொட்டுப்பார்த்தவர், ஒரு மலைப்பாம்பைப் போல இருக்கும் என்றார். மூன்றாவதாக யானைத் தந்தத்தைத் தொட்டுப்பார்த்தவர் ஈட்டியைப்போல இருக்கும் என்றார். நான்காவதாகக் காலைத் தொட்டுப்பார்த்தவர் மரக்குற்றியைப் போல இருக்கும் என்றார். ஐந்தாவதாக யானையின் வாலைத் தொட்டுப் பார்த்தவர் யானை நீண்ட கயிற்றைப் போல இருக்கும் என்றார்.

இதிலிருந்து நாங்கள் தெரிந்து கொள்வது என்னவென்றால், அரை குறையாக ஒரு விடயத்தை தெரிந்து கொள்ளும் போது நாங்கள் தவறான முடிவெடுத்து விடுகின்றோம். அப்படித் தவறான முடிவு எடுக்கும்போது அது எங்களை மட்டுமல்ல, பலரையும் பாதிக்கலாம். அதனால் தான் பெரியோர்கள், **கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீரவிசாரித்து அறிவதே மெய்** என்று சொல்வார்கள். சுட்டிகளே நீங்களும் அரைகுறையாக ஒரு விடயத்தை அறிந்து கொண்டு முடிவு எடுக்காமல் தீரவிசாரித்து அறிந்துகொண்டு அதன் பின் முடிவெடுப்பதே சிறந்தது. அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## எரிமலை



எரிமலை குமுறுவது இயற்கையாக நிகழும் ஒரு அனர்த்தமாகும். அந்த நிகழ்வின்போது பூமியின் மேற்பரப்பில் உள்ள வெடிப்பினூடாகப் பூமியின் அடியில் கொதி நிலையில் உள்ள கற்குழம்பு வெளியே தள்ளப்படுகின்றது. நீண்ட காலமாக அவை செயற்படுவதால் மலைகள் போல இவை குவிக்கப் படுகின்றன. கொதி நிலையில் உள்ள கற்குழம்புகள் வெளியே தள்ளப்பட்டதும் அவை குளிர்வடைவதனால் கற்பாறைகளாக மாறி எரிமலையை உருவாக்குகின்றன. மெக்சிக்கோ, நியூசிலாந்து, இந்தோனேசியா, கிரேக்கநாடு, தன்சானியா, ரஷ்யா, கொலம்பியா, இத்தாலி, ஜப்பான், பிலிப்பைன்ஸ், கொங்கோ, குவாத்தமாலா, ஸ்பெயின், பப்பா நியூகினியா, ஹவாய் போன்ற பல நாடுகளில் எரிமலைகளைக் காணமுடியும். சூரிய மண்டலத்தில் உள்ள சந்திரன், செவ்வாய், வியாழன் போன்ற கிரகங்களிலும் எரிமலைகள் இருக்கின்றன.

சிவானி பாலகுமார்

## தைப்பொங்கல்



தைப்பொங்கல் தமிழர் திருநாளாகும். தைப்பொங்கல் தைமாதத்தில் கொண்டாடப் படுகின்றது. தைப்பொங்கல் கதிரவனுக்கு நன்றி சொல்லும் நாளாகும். விவசாயிகளுக்கு உதவி செய்த கதிரவனுக்கு முதல் நாளும், மாடுகளுக்கு மறுநாளும் பொங்கிப்படைப்பர். ஆதிகாலத்தில் விவசாய இயந்திரங்கள் இல்லாததால், மாடுகளே மனிதருக்கு விவசாயத்தில் உதவி செய்தன. புதிய கதிர் அறுத்து அரிசியாக்கி முற்றத்தில் குடும்பமாகப் பொங்கி மகிழ்வர். பொங்கும்போது பொங்கலோ பொங்கல் என்று பாடி, வெடி கொளுத்தி மகிழ்வர். பொங்கலன்று புத்தாடை அணிந்து குடும்பத்தோடு கோயிலுக்குச் சென்று வழிபடுவர். அதன்பின் உறவினர் நண்பர்களோடு ஒன்றுகூடி மகிழ்வர். புலம் பெயர்ந்த நாடுகளிலும் தமிழர் தங்கள் பண்பாடு, கலாச்சாரத்தை மறக்காமல் பொங்கல் திருநாளைக் கொண்டாடி மகிழ்கின்றார்கள்.

அபினயா பவாநந்தன்


## இந்தியா



எனது தந்தை பிறந்த இடம் தென் இந்தியாவைச் சேர்ந்த கேரளாவாகும். உலகின் இரண்டாவது சனத்தொகை கூடிய நாடு இந்தியாவாகும். இந்தியா 1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரமடைந்தது. இந்து சமுத்திரத்தில் அமைந்திருக்கும் இந்த நாட்டில் ஜனநாயக ஆட்சி நடைபெறுகின்றது. இங்கே 300க்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசும் பல்லின மக்கள் வாழ்கின்றார்கள். உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் இங்கேதான் அமைந்திருக்கிறது. முற்காலத்தில் தமிழ் மன்னர்களான சேர, சோழ, பாண்டியர்கள் இந்த நாட்டின் தென்பகுதியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்து ஆட்சி நடத்தினார்கள். அஜந்தா, எல்லோரா போன்ற குகை ஓவியங்கள் மிகவும் பழமை வாய்ந்தவை. அதேபோல தென்னிந்தியாவில் உள்ள மகாபலிபுரம், தஞ்சைப் பெரியகோயில் போன்றவை பாரம்பரிய கலைகளை எடுத்துக்காட்டி நிற்கின்றன. கேரளாவும் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் ஒரு செழிப்பான பிரதேசமாகும்.

அஞ்சனா கிருஷ்ணன்

## பனிக்கரடி



பனிப்பிரதேசத்தில் வாழும் கரடியைப் பனிக்கரடி என்பார்கள். இவை அலஸ்கா, ஆட்டிக் போன்ற இடங்களில் அதிகம் காணப்படுகின்றன. இவை சராசரி 350 – 680 கிலோகிராம் எடையுள்ளனவாகவும், அனேகமாக வெண்ணிறத் தோல் கொண்டவையாகவும் இருக்கும். இவற்றின் தோல் தடிப்பாகவும், அடர்ந்த உரோமத்தைக் கொண்டதாகவும் இருக்கும். இவை வால்ரஸ், சீல், மீன் போன்றவற்றை உண்ணும். வேட்டையாட இலகுவாக இவற்றின் நகம் தடித்து வளர்ந்து இருக்கும். இரையை வேட்டையாடும் போது பனியில் சறுக்கி விழாமல் இருப்பதற்கு இந்த தடித்த நீண்ட நகங்கள் உதவியாக இருக்கும். இவை சராசரி 25 வருடங்கள்வரை வாழக்கூடியவை. இதனுடைய தோலுக்காகவும் இதைச் சிலர் வேட்டையாடுவர். பூமி அதிக வெப்பமடைவதால் காலநிலை மாற்றங்கள் காரணமாக, பனிக்கட்டிகள் வேகமாக உருகத் தொடங்கியிருக்கின்றன. இதன் பாதிப்பு காரணமாகவும் ஒரு காலத்தில் இந்தப் பனிக்கரடிகள் அழிந்து போகலாம். இதன் அழிவைத் தடுப்பதற்கான வழிமுறையை நாங்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

மினேஸ் பிரதீபன்.

## யானை



நிலத்தில் வாழும் மிருகங்களில் யானைதான் மிகவும் பெரியது. யானைக்கு ஒரு தும்பிக்கையும் இரண்டு தந்தங்களும் உண்டு. யானைகள் சராசரி 80 வருடங்கள் வரை வாழக்கூடியன. யானையில் இரண்டு வகை உண்டு. ஒன்று ஆபிரிக்க யானைகள் மற்றவை ஆசிய யானைகள். சிலர் யானையைப் பழக்கிப் பாரம் தூக்கும் வேலையைச் செய்விப்பர். யானைகள் கூட்டமாக வாழும் பழக்கத்தைக் கொண்டவை. யானை கருவுற்றுக் குட்டி போட 22 மாதங்கள் வரை செல்லும். யானைக் குட்டி பிறக்கும்போது அதன் நிறை சராசரி 120 கிலோகிராம்வரை இருக்கும். யானைகள் சராசரி 50 தொடக்கம் 70 வருடங்கள் வரை வாழக்கூடியன. யானை இலை குழைகளைச் சாப்பிடும். யானைக்கு மிகவும் பிடித்தமான உணவு கரும்பு. பெறுமதி மிக்க யானைத்தந்தத்தை எடுப்பதற்காகச் சிலர் அதைக் கொல்வதால் வெகுவிரைவில் யானைகள் அழிந்து விடக்கூடும்.

தக்ஷவி மனோகரன்.

## ஜேர்மனி




ஜேர்மனி ஐரோப்பா கண்டத்தில் இருக்கின்றது. இதன் தலை நகரம் பேர்லின். இங்குள்ள மக்கள் டொச்சு மொழியைப் பேசுவார்கள். ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் உறுப்பு நாடாகவும் ஜேர்மனி விளங்குகிறது. ஜேர்மனியின் சனத்தொகை சுமார் 82,400,000 ஆகும். இரண்டாம் உலகயுத்தத்தின்போது ஹிட்லரின் ஆட்சியில் இருந்த ஜேர்மனி படுதோல்விகண்டது. யுத்தத்தின் பின் கிழக்கு மேற்கு என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்த ஜேர்மனி மீண்டும் 1990 ஐப்பசி மாதம் 3ம்திகதி ஒன்றாக இணைந்திருக்கிறது. 16 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும் ஜேர்மனி 357,021 சதுர கிலே மீற்றர் பரப்பளவைக் கொண்டது. அதன் தேசியக் கொடி கறுப்பு சிகப்பு மஞ்சள் நிறத்தைக் கொண்டது. உள்நாட்டுப் பிரச்சனை காரணமாக ஈழத்தமிழர்கள் பலர் அங்கே புலம் பெயர்ந்திருக்கிறார்கள்.

வினோஜா உதயணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு பயணியின் அந்தரங்கம்!

## குமுதினிக்கு என்ன நடந்தது?

**1985** ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி… நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்தின் வழமையான காலைப் பொழுது. இனிமையான கடற்கரைக் காற்றின் இதமான சுகம் மனதின் உணர்வுகளையெல்லாம் தொலைத்து விட்டிருந்தது. துறைமுகத்தின் முன்னால் பரந்து நின்ற புனித அரச மரத்தின் இலைகள் காற்றலையுடன் உறவாடி சலசலத்துக் கொண்டிருந்தன. அருகில் ஒரு வாசிகசாலை. துறைமுகப் பாலத்தின் முன்னே ஒரு சிறு கட்டடம். துறைமுகத்தின் இருமருங்கும் மிதக்கும் தோணிகள். நீலக் கடலலையின் அழகிய ஆர்ப்பரிப்புகள்… என்று அன்றைய நாளை அந்தச் சூழல் அழகுபடுத்திக் கொண்டிருந்தது.

அவளுக்கு அப்போது 19 வயது. இளமை சிறகடிக்கும் கற்பனைகளுடன் நெடுந்தீவின் அழகில் மயங்கிப்போனவள். அழகின் பரிமாணங்களை முழுமையாக அனுபவிக்கத் தெரிந்தவள். அழகானவள் என்பதைவிட பெண்மையின் நாற்குணங்களுக்கு முற்றிலும் சொந்தமானவள். பகிர் வேலிகளுக்கிடையே சமர்ப்பணமாகாமல் சரித்திரத்தில் இடம் பிடிக்க ஆசைப்பட்டவள். குடும்ப சுமைகள் எல்லாம் தாண்டி அன்றும் அவள் உயர்கல்விக்காக யாழ்நகர் நோக்கிய பயணத்திற்கு ஆயத்தமாகின்றாள்.

காலை 6.30 மணி… வழமை போல் மாவிலித் துறைமுகத்தின் ஆரவாரம் களைகட்ட ஆரம்பிக்கின்றது. பெண்கள், குழந்தைகள், பெற்றோர்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள், நோயாளர்கள், உழைப்பாளிகள்… என்று மாவிலித் துறைமுகம் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்துக் கொண்டிருந்தது. இந்த இயல்பான அழகிய காலைப் பொழுதின் சுகங்களை அனுபவித்தபடி அவளும் அங்கு தன்னை இணைத்துக்கொள்கின்றாள்.

நெடுந்தீவு, யாழ் குடாநாட்டின் வடமேற்கே உள்ள சப்த தீவுகளில் முதன்மையான அமைதியான ஒரு அழகிய பசுந்தீவு. இத்தீவையும் குறிகட்டுவானையும் கிட்டத்தட்ட 7 கிலோ மீற்றர் தூரம் கொண்ட ஆழ்கடல் பிரிக்கின்றது. அங்கு வாழும் மக்கள் தம் வாழ்வியலோடு தொடர்புபட்ட சில தேவைகளில் தன்னிறைவு கொண்டிருக்க முடியாததால் குறிகட்டுவானுக்கும் நெடுந்தீவுக்குமிடையிலான கடல் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததோடு மட்டுமல்லாது அங்கே இரு வழிச் சேவை செய்த குமுதினி படகும் நெடுந்தீவு மக்களின் அன்றாட வாழ்க்கை முறையோடு ஒன்றித்துப்போய் இருந்தது.

காலை 7.30 மணி… அலைதிரளும் நீலக் கடலலை மீது அசைந்தாடிச் செல்லும் குமுதினி படகின் குறிகட்டுவான் நோக்கிய பயணத்திற்கு விடை கொடுத்து அனுப்பியது மாவிலி இறங்குதுறை. பயணிகளின் மனதை வருடிச் சென்ற கடற்காற்றின் அரவணைப்பிலே அவர்களின் கனவுகள், கற்பனைகள், கவலைகள், எண்ணங்கள், திட்டங்கள் எல்லாம் அவர்களது உணர்வுகளை மென்மையாக்கி அசைபோட்டுக் கொண்டிருந்தன.

படகின் ஜன்னல் ஓரமாக அமர்ந்து பாரதியார் கவிதைகளின் உறுதியான வரிகளில் லயித்திருந்த அவள் ஏதோ நினைத்தவளாக தனது கவிதைக் குறிப்பை எடுத்தாள். அவளது கவிவரிகள் வெற்றுத்தாள்களுக்கு பெறுமதி கொடுக்க ஆரம்பித்துக் கொண்டிருந்தது. உணர்வுகளெல்லாம் வார்த்தைகளாக இடம்மாறிக்கொண்டிருந்தன. அப்போது படகின் நடுவில் நடை பழகிய அழகிய குழந்தையொன்றின் மென்பஞ்சுப் பாதம் கண்ணில் பட கவிவரிகள் காணாமல் போயிற்று. குழந்தையின் அழகிய கவிதை அவளிடம் அரங்கேறிக்கொண்டிருக்கும் பொழுதில் குமுதினி படகு திடீரென நடுக்கடலில் வழி மறிக்கப்படுகின்றது.

அவள் திடுக்கிட முன் சிறிய பிளாஸ்டிக் படகில் வந்த 6 படையினர் முக்கோணக் கூர்க் கத்திகள், கண்டங் கோடரிகள், இரும்புக் கம்பிகள் மற்றும் துப்பாக்கிகள் சகிதம் படகில் ஏறுகின்றனர். அவர்களது அசாதாரண ஆயுதங்களைக் கண்ட பயணிகள் யாவரும் பீதியடைகின்றனர்.

படகின் பின்புறம் இருந்த பயணிகள் யாவரையும் இயந்திர அறையின் முன்புறம் செல்லும்படி மிரட்டினார்கள். சற்று நேரத்தின் பின்னர் படையினர் பயணிகள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக படகின் பின்புறம் வருமாறு உத்தரவிடுகின்றனர்.

படகுப் பணியாளர்கள் சிலரில் ஆரம்பித்து ஒவ்வொருவராக படகின் பின்புறம் வருமாறு அழைக்கப்படுகின்றார்கள். தனித்தனியே வந்த ஒவ்வொருவரையும் தமது பெயர் மற்றும் ஊரின் பெயரை உரத்துக் கூறுமாறு பணிக்கப்பட்டு கொலைக் களத்திற்கு அனுப்புகின்றனர்.

அப்பாவி மனிதர்களைக் கொடூரமாக கத்தியால் வயிற்றைக் குத்தியும், கண்டங் கோடரியினால் தலையை பிளந்தும், இரும்புக் கம்பிகளால் மண்டையில் தாக்கியும் படுகொலை செய்து அந்த 4 அடி இயந்திரப் பள்ளத்திலே போட்டனர். குற்றுயிருடனும், உயிர் இல்லாமலும், இரத்த வேதனைகளுடன் ஒவ்வொரு பயணிகளின் உடலும் ஒன்றின் மேல் ஒன்றாக துடிதுடிக்க குவிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இவர்களின் மரண ஓலம் மற்றவர்களின் பெயர் மற்றும் ஊர் உச்சரிப்பில் அமிழ்ந்து காணாமல் போயிற்று… இரத்த ஆறு படகின் அடிப் பகுதியில் ஓட ஆரம்பித்துக் கொண்டிருந்தது.

இதை அறியாத அவளும் தனது முறைக்காக வந்து நின்றாள். மண்டையில் பலமான அடி விழுந்தது… தலை விறைத்து சுருண்டு விழுந்தாள்… சிறிது நேரத்தின் பின் புதை குழியில் வேதனை தாங்காது லேசாக கண் திறந்த அவளுக்கு அங்கே கண்ட கோரத்தை பதிந்து கொள்ள முடியவில்லை. அந்த பிஞ்சுக் குழந்தையின் நெஞ்சு கிழிக்கப்பட்டுக்கிடந்தது. பெண்கள், ஆண்கள் என்று ஈவு இரக்கமின்றி எல்லோருமே குத்திக் கிழிக்கப்பட்டுக் கிடந்தார்கள். இயந்திர அறை எங்கும் இரத்த ஆன்மாவின் கறை படிந்து கொண்டிருந்தது… சிறு சிறு புழுக்களைப் போல் மனித உடல்கள் குற்றுயிருடன் துடிதுடித்துக் கொண்டிருந்தன. ஒவ்வொரு உடலின் மீதும் இரத்தம் சீறியபடி இன்னொரு உடல் வீழ்ந்து கொண்டிருந்தது. கொடூரத்தின் அதி பயங்கரம் அங்கே நடந்து கொண்டிருக்கும் போது அவளது ஆன்மாவும் மெல்ல மெல்ல பிரிந்து கொண்டிருந்தது. மனித வேள்வியை முடித்த படையினர் படகை அனாதரவாக விட்டு விட்டுக் கிளம்பிச் சென்றனர்.

சில மணி நேரத்தின் பின்… குமுதினி படகு காற்றின் பாதை வழியே சில குற்றுயிர்களை தாங்கிய படி ஆழ்கடல் ஆரம்பிக்கும் களப்புக் கடலின் ஒரு மேட்டுப் பகுதியில் பொறுத்துப்போய் நிற்கின்றது. நேரம் செல்லச் செல்ல ஒவ்வொருவரின் ஆன்மாவும் பிரிந்து கொண்டிருந்தது. சிலர் குற்றுயிருடன் தமது சட்டைகளைக் கழற்றி உதவி தேடி உயிர் காத்துக் கிடக்கின்றனர்.

மீட்புப் பணிகள்… மரண ஒப்பாரிகள்… ஒட்டுமொத்த சமூகமே அதிர்ச்சியில் உறைந்தது.

ஒரு சரித்திரம் சாகடிக்கப்பட்ட வேதனைகளுடன் அன்றைய நாளும் சோகமாக விடைபெற்றுச் சென்றது. அவளது கவிதைப் புத்தகம் மட்டும் கறை படிந்த பக்கங்களுடன் மௌனமாக அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்தது. ●

– மோனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# See yourself in a whole new light.

*You have the power to control your success.*

Are you looking for a career opportunity where you can make a difference and bring balance to your life? Do you want to be your own boss, where the earning potential is limitless and your efforts are rewarded? If this is you, I'd like to talk to you.



**Chandran Rasalingam**
Associate Manager
Bus 416-412-0401 ext 2305
Cell 416-909-0400
Fax 416-412-1438
chandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

Sun Life Financial

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2009.

# RITHI TRAVELS



TORONTO - MONTREAL - TORONTO
BUS SERVICES

உங்கள் இல்லத்து வாசல் முதல் சென்றடையும் வாசல் வரை
DVD யுடன் இனிதான இளைப்பாறிய பயணம்

55$ Return

30$ one way

We Provide all kind of charter services with 7, 14 and 24 Passengers

*WE ALSO OFFER SPECIAL DELIVERIES AND OTHER PERSONALIZED SERVICES*

**Toronto - 416 887 3350 Montreal - 514 802 3350**

Pick-up & Drop off Limited Area Only SERVICES NOW AVAILABLE 7 DAYS A WEEK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் இரகசியமே இதுதான்...



**கே. ஜி மாஸ்டர்**

நம் ஒவ்வொருவரதும் வாழ்வியல் நோக்கம் தன்னிறைவு அடையவேண்டும் என்பதுதான். நமது ஒவ்வொரு நகர்வும் நமது குறிக்கோளை அடைவதற்கு ஏற்றமுறையில் நகர்த்தப்பட்டு வெற்றியடையவேண்டும் என்ற அடிப்படையில் தான் மேற்கொள்ளப்படுகிறது. இந்தக் குறிக்கோள்கள் தெளிவாக வரையப்பட்டவையாகவோ அல்லது பொதுவானதாகவோ அமையலாம். ஆனால் குறிக்கோள் இல்லாத வாழ்வியல் நகர்வு முன்னோக்கிய நகர்வாக அமைவது சாத்தியமற்றதே. ஏனெனில் சாதாரண நிலையில் இருந்து விசேட நிலை ஒன்றுக்குச் செல்ல குறிக்கோள் அத்திவாரமாக அமைகின்றது.

சிறந்த மகிழ்ச்சியான, வெற்றிகரமான வாழ்க்கை என்பது உயர்ந்த இலக்கு ஒன்றை நிர்ணயித்து அந்த இலக்கை அடைவதில் வெற்றிகாண்பதாகும். நடைமுறையில் இலக்கு அல்லது குறிக்கோளை நிர்ணயிப்பது மிக இலகுவானதாகவுள்ளது. ஆனால் அதை நடைமுறைப்படுத்தி வெற்றிகாண்பது என்பதுதான் பலருக்கு முயல் கொம்பாக அமைந்துவிடுகின்றது. இதற்கு அடிப்படைக்காரணம் அவர்களது ஆரம்பமாகும்.

ஒவ்வொரு வெற்றிக்கும், அதன் இலக்கும் அதற்கான நடைமுறைகளும் தெரிவு செய்யப்பட்டு, தெளிவுபடுத்தப்பட்டு ஆரம்பிக்கப்படவேண்டும் என்பது அடிப்படையானதுதான். ஆனால் அவ்வாறு மேற்கொள்ளும் விடயம் ஒன்றிற்கு மிகவும் அவசியமானது ஆரம்பம்தான். அதாவது ஒரு இலக்கை அடைவதற்கு எங்கிருந்து ஆரம்பிப்பது என்பதுதான் மிகவும் அவசியமானதாகும். நாம் வெற்றிகொள்ள வேண்டிய குறிக்கோளை வெற்றிகொள்வதற்கு ஆரம்பிக்க வேண்டிய இடம் அந்தக் குறிக்கோளின் முடிவுதான். இன்னொரு வகையில் கூறுவதாயின் முடிவே ஒன்றின் ஆரம்பமாக இருப்பதால் முடிவில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும். அப்போது வெற்றி என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

## முடிவில் இருந்து ஆரம்பியுங்கள்... வெற்றி நிச்சயம்

உதாரணமாக ஒருவன் மலை உச்சியை அடையவேண்டும் என்றால் அதனை ஆரம்பிக்க வேண்டிய இடம் அந்த மலையின் உச்சியாகும். புதிராக இருக்கின்றதா? வெற்றியின் இரகசியமே இதுதான். அதாவது உளவியல் ரீதியாக எந்தவித ஐயப்பாட்டிற்கும் இடமளிக்காமல் ஏற்கனவே மலை உச்சியயை அடைந்துவிட்டதான உறுதியான உணர்வுடன் ஆரம்பியுங்கள். உங்கள் காலடியில் மலையுச்சி நிச்சயம். ஏனெனில் நீங்கள் இப்பொழுது மலையைவிட பெரிதாகி மலை சிறியதாகிவிட்டது. சிறியது பெரியதுள் அடங்கவேண்டியது இயற்கையின் விதிதானே!

எனவே எப்பொழுதும் உச்சியில் (முடிவில்) இருந்தே ஆரம்பியுங்கள். வெற்றி நிச்சயம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல்... காதல்... காதல்...

சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன்

காதல் என்ற சொல்லை உச்சரித்தாலே ஒரு கிளுகிளுப்பு ஏற்படுகின்றது. உலகெங்கும் எல்லோராலும் அடிக்கடி உச்சரிக்கப்படும் இச்சொல், இலக்கியம், நாடகம், சங்கீதம், சினிமாத்துறைகளில் இழையோடும் விதமே தனித்துவமானது. இனம் புரியாத உணர்ச்சியை ஊட்டும் இச்சொல் அனைவரிடமும் மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தும் அபார சக்தி கொண்டது. அனைவராலும் விரும்பப்படும் காதல் உணர்வினை அளப்பதற்கு மட்டும் கருவியில்லை. மந்திர சக்தி படைத்துள்ள இச்சொல் பல்வேறு நிலைகளில் பல்வேறு அர்த்தங்கள் உடையது என்பது உளவியலாளரின் கருத்தாகும்.

பொதுவாக நாம் கருதுகின்ற காதல் (Love) என்ற சொல்லுக்கு தெளிவான வரைவிலக்கணம் கூறுவது கடினமாகும். பல்வேறு அர்த்தங்களைப் பிறப்பிக்கும் சொல்லாக அது உள்ளதினால் தொடர்ந்தும் ஆய்வு செய்யப்படும் கருத்தாகவும் விளங்குகின்றது. காதல் பல்வேறு உணர்வு மட்டங்களை இணைக்கவல்லது, தோற்றுவிக்கவல்லது என்று பொதுவாகக் கூறலாம்.

காதல் பற்றிய உணர்வுகள் பல்வேறுபட்டவை. பெற்றோர்கள் பிள்ளைகள் மீது செலுத்தும் அன்பு (Parental Love), நாட்டின்மீது கொண்டுள்ள பற்று (Patriotism), குடும்ப உறவு (Family Affection), கடவுள் மீது காட்டும் அன்பு (Godly Love), இனத்தின் மீது ஏற்படும் பற்று (Racial Love) , சேவையில் காட்டும் பரிவு (Actruistic Love) போன்றவை உள்ளதெனினும் அதிகமாக ஆய்வுக்குட்பட்டுள்ளதும் அதிக அளவில் மக்களை ஈர்த்து வருவதும் பாலியல் காதல் (Erotic Love). ஆங்கிலத்தில் Love என்ற சொல்லாட்சியை தமிழில் அதன் தேவை கருதி நேசம் (Affection), உறவு (Relationship), பரிவு (Sympathy), கருணை (Compassion), விருப்பம் (Fondness), தயவு (Mercy), அன்பு (Kindness) போன்ற பல்வேறு அர்த்தங்களைப் பிறப்பிக்கின்றன. உண்மையில் அனைத்தும் Love என்ற மூலச்சொல்லின் அடியிலிருந்து உருவாகியவையே ஆகும்.

1979 இல் டொர்த்தி ரெனோவ் (Dorothy Tenov) என்ற அறிஞர் காதல் பற்றிப் பல ஆய்வுகளை நடத்தியவேளை காதல் வயப்பட்ட இருவரது மன எழுச்சிகள் எவ்வாறு ஏற்படுகின்றன என்ற முடிவுகளைப் பெற்றார். கவர்ச்சிமயமான தன்மைக்கும் காதலுக்கும் உள்ள தொடர்புகளை இவர் விளக்கினார். நட்பு ரீதியில் (Friendship) சில வேளைகளில் எழும் காதல் பற்றி Davis என்ற அறிஞர் 1985இல் 250 கல்லூரி மாணவர்களிடம் ஆராய்ந்தார். உடல்ரீதியான விருப்பு அன்றி ஒருபால் ரீதியானவர்களே கூடுதலான நட்பு கொண்டிருந்ததனை முடிவு காட்டியது. எனவே எதிர்பால் நட்பு காதலாக மாறும் நிலைக்கு செல்லமுடியும் என்று இவர் கருதினார்.

பாலியல் ரீதியில் காதலை விளக்கமுயன்ற விஞ்ஞான ஆய்வுகள் உடலில் - மனஎழுச்சி ரீதியில் எழும் தன்மை பற்றி குறிப்பிட்டதுடன் இக்காதல் வடிவம் 6 வகையான தன்மைகளை காட்டுவதாகவும் குறிப்பிடுகின்றன. அவை முறையே துணையார் (Companionship), கவனம் (Caring), நெருக்கம் (Intimacy), கற்பனைக்காதல் (Romance), பாலுணர்வு (Sex), பொறுப்புணர்வு (Commitment) ஆகும். முதலாவதாக குறிப்பிட்ட துணை ரீதியாக எழும் காதல், மன எழுச்சி வாழ்வு அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் தன்மையில் இருவருக்கிடையில் ஏற்படுகின்றது. பொதுவான விருப்பங்கள், பரஸ்பர விளக்கங்கள் என்பவற்றில் இது ஏற்படலாமென போவே (Powe) என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார். இத்துணை விரும்பிகள் இறுதியில் திருமணம் செய்துகொள்ளவும் கூடும். ஆனால் கட்டாயமானதல்ல. ஆதரவு காரணமாகத் தோன்றும் காதல் பற்றி ரூபின், மக்னில் (Rubin and McNeil) அகிய அறிஞர்கள் 1981 இல் ஆராய்ந்தனர். மற்றவர் மீது ஏற்படும் கவனம் காரணமாக இக்காதல் ஏற்படுகின்றது என்றும் தமது சிந்தனை உணர்வு, பயங்கள், நம்பிக்கைகள் என்பவற்றைப் பகிர்ந்து கொள்ளும் தன்மையால் இக்காதல் ஏற்படுகின்றது என்றும் கூறியுள்ளனர்.

பின், மக்னில் (Rubin and McNeil) அகிய அறிஞர்கள் 1981 இல் ஆராய்ந்தனர். மற்றவர் மீது ஏற்படும் கவனம் காரணமாக இக்காதல் ஏற்படுகின்றது என்றும் தமது சிந்தனை உணர்வு, பயங்கள், நம்பிக்கைகள் என்பவற்றைப் பகிர்ந்து கொள்ளும் தன்மையால் இக்காதல் ஏற்படுகின்றது என்றும் கூறியுள்ளனர்.

அடுத்து கற்பனைக்காதல் (Romance) மூலமான காதல் என்பது நெருங்கிய, மறைமுகமான தன்மையில் அல்லது எதுவித காரணமும் இன்றி சில வேளைகளில் குழந்தைத் தனமாகவோ, உணர்ச்சிவசப்பட்டு கற்பனை ரீதியான உணர்ச்சிக்குத் தள்ளப்படும் வேளையில் இது எழலாம். "காதலுக்கு கண் இல்லை" என்று நாம் கூறுவது போன்று இதற்கும் காரணம் கூற முடிவதில்லை.

திடீரென்று தோன்றும் மேற்கூறிய காதல் வடிவம் பற்றி ருவெஸ்ரின் (Rubenstein) என்ற அறிஞர் 1983 இல் ஆராய்ந்த போது 96% ஆண், பெண்கள் இதில் நம்பிக்கையும் விருப்பமும் கொண்டிருந்தனர். அவர்களுக்கு, உணர்ச்சி, கவர்ச்சி, மகிழ்ச்சி என்பவை முக்கியமாக இருந்துள்ளது. பாலியல் காதல் உணர்வு என்பது பாலியல் ரீதியில் எழுகின்ற திருப்திகரமான தொடர்பு ஆகும். அனைவரது வாழ்க்கையிலும் அடி நாதமாக பாலியல் கொள்கையே ஏற்பட்டுள்ளது. கடமைப்பாடு என்ற காதல் நிலையில் கஷ்டமான சந்தர்ப்பங்களில் கூட விடாமுயற்சியுடன் ஈடுபடும் தன்மை ஏற்படுகின்றது. மன அழுத்தம், மன முரண்பாடுகள் ஏற்பட்டாலும் இவர்களது காதல் தொடர்ந்தும் இடம்பெறும். இவ்வாறான வேறுபட்ட தோற்றமும் காதல் வடிவமும் தொடர்ந்தும் உளவியலாளர்களின் ஆய்வுக்குட்பட்டு வருகிறது.

காதல் குருடானதா என்று நோக்கும்போது உண்மையில் காதலுக்காக உயிர் துறந்துள்ளவர் பலர். தாஜ்மஹாலை தன் காதலி மும்தாஜ் நினைவுக்காக கட்டியெழுப்பிய சாஜகான் போன்று பல தியாகங்களை காதலுக்காக செய்தவரும் உளர்.

முதலில் தோன்றும் வியப்பு உணர்வு (Admiration) படிப்படியாக பாலியல் கவர்ச்சியாக (Sexual Attraction) மாறி பின்பு ஒரு நெருப்பு (Spark) போன்று காதல் தோன்றி விடுகின்றது. இதனை ஆய்வு செய்த ஐரா றீஸ் (Ira Reiss) என்ற அறிஞர் காதல் வட்டம் (Love Circle) என்ற கொள்கை அடிப்படையில் விளக்கி ஒருவர் பற்றி ஒருவர் விளங்கிக் கொண்டு உரையாடி, ஒருவரில் ஒருவர் தங்கும் நிலை வந்து இறுதியில் ஒருவர் இன்றி ஒருவர் வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் என்கிறார். பொதுவாக கவர்ச்சியான உடலமைப்பு, மகிழ்ச்சியான தோற்றம், சிந்தனைத் திறன், விளையாட்டுத்திறன், என்பவற்றினை அவதானித்தே காதல் எழுவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.

"காதல் உள்ளம்" பல்வேறு பிரச்சினைகளையும் சந்திக்கின்றன. சில வேளைகளில் காதல் மறுப்பு (Rejection) நிகழலாம். இதனால் கோபம், மன முறிவு ஏற்பட வாய்ப்புண்டு. இந்த சந்தர்ப்பங்களில் மீள முயற்சித்தல், பேச்சுவார்த்தையில் ஈடுபடுதல், பய அனுபவத்தினைப் புதுப்பித்தல் போன்றவற்றினை கையாளவேண்டி ஏற்படலாம்.

காதலில் தோல்வி அடைந்தவர்களுக்கு சோகமும், கூடியிருப்பவர்களுக்கு மகிழ்சியும் இன்றைய அன்றாட நிகழ்வு. ஒருவகையில் காதல் கீதமும் மறுவழியில் சோககீதமும் வாழ்வில் ஒலிக்கின்றன. பெரியோர் விருப்பமின்மை, புதிய காதல் உறவு, பரஸ்பர நம்பிக்கையின்மை போன்றவற்றால் மாறிச் செல்கின்றன. காதல் தடம்புரளும் வேளையில் நிதானமாக நடந்துகொள்வது புத்திசாலித்தனமானது. தெய்வீகக் காதல், மாறாத காதல் என்றெல்லாம் பொருள்படும் இவ்வுணர்வு பற்றிய எண்ணத்தில் வாழ்ந்து வருபவர்களும் பலர் உளர். தொகுத்து நோக்கின் உடல், மன உணர்வுகளை மீட்டிக் கொண்டிருக்கும் காதல் தொடர்ந்தும் புதிய தளிர்களை வெளியிடவே செய்யும். ♦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரன் சேரன்

# பக்கத்து வீட்டில் பறுவதம் பாட்டி



**அன்று** அதிகாலைநேரம், தொலைபேசியினைப் பொத்தென்று கீழேவைத்த பாட்டி, படபடப்புடன் பக்கத்து வீடுநோக்கிப் பறந்துசென்றார். நானும் என்னவோ ஏதோவென்று பின்னாலே சென்றேன். அங்கே எங்களைப் போல் பலரும் வந்து கூடியிருந்தனர். நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. பக்கத்து வீட்டு பங்கயத்து அம்மா பொசுக்கென்று போய்விட்டா! மாமிவீட்டில் வசித்துவரும் அண்ணாமலைத் தாத்தாவும் இந்தச் சாக்கில் அங்கு

"பாத்தியளே! வந்திருக்கிற உறவுகளை"

தாத்தா புரியாமல் விழித்தார்.

"இந்த உறவுகளைப் பற்றித்தான் பங்கயம் என்னோட நெடுகச்சொல்லிக் கவலைப்படுவாள். இந்த மனுசி எல்லா உறவுகளோடயும் எவ்வளவு அன்பு, பாசம் வைச்சிருந்தது. உயிரோட இருக்கும் போது வீட்டை வாருங்கோ, வீட்டை வாருங்கோ என்று எத்தினை நாள் ரெலிபோனிலை அழைத்து ஆசையோட காத்திருந்திருப்பாள். ஒருநாள் கூடத் திரும்பிப் பார்க்காத ஆட்களெல்லாம் இப்ப கூட்டம் கூட்டமாயெல்லோ வந்து சேர்ந்து இருக்கினம்."

"இங்கைபார்! இந்த நாட்டில நேரமுமெல்லே ஒரு பெரிய பிரச்சனை."

"இது நல்ல நொண்டிச் சாட்டு எண்டுதான் சொல்லவேணும். இப்பமட்டும் நேரம் வந்திட்டுதோ என்ன? எனி ஒரு கிழமைக்கு ஓடியோடி நிமிடத்துக்கு நிமிடம் வந்துபோவினம். பிறகு ஒருவருடத்திற்கு மாதம் மாதம் வந்துபோவினம். அப்புறம் வருடா வருடம் வந்துபோவினம். இதுக்கெல்லாம் நேரம் இருக்கு. உயிரோட இருக்கும் போதுமட்டும் சொந்தம் கொண்டாடி அந்த உறவை சந்தோசப்படுத்த யாரும் தயாரில்லை. இது என்ன நியாயம் சொல்லுங்கோ பார்ப்பம்."

அக்கம்பக்கம் பார்த்தபடியே, "பறுவதம்! இப்பிடித்தான் உலகம். நாங்கள் இதுக்கு என்னதான் செய்யமுடியும்."

## உயிரோட இருக்கும் போது வீட்டை வராத சனமெல்லாம்...

ஓடோடி வந்து பாட்டியைச் சந்தித்துக்கொண்டார்.

பாட்டியும் பங்கயத்தம்மாவும், நாங்கள் இந்த வீட்டுக்கு வந்தகாலத்திலிருந்து நல்ல நண்பர்கள். நாங்கள் பாடசாலை சென்றதும், இருவரும் இணைந்து ஒரு முறை நடைப்பயிற்சி செய்துவருவார்கள். அந்த வேளையில் அவர்கள் பகிர்ந்து கொள்ளும் தகவல்கள் பலவிதம். பங்கயத்தம்மாவின் சாவு பாட்டியைப் பொறுத்தவரை பேரிழப்புத்தான். பாட்டியின் நெஞ்சினில் ஓடிக்கொண்டிருந்த பங்கயத்தம்மாவுடன் பேசிக் கழித்த நாட்களின் நினைவலைகள் அண்ணாமலை தாத்தாவின் தலையீட்டினால் தடைப்பட்டுக்கொண்டது.

"என்ன! தனிய இருந்துயோசிக்கிறாய்?"

பாட்டி, தாத்தாவின் காதில் குசுகுசுக்கத் தொடங்கினார்.

"நல்ல உலகம் தான். உலகத்தில வாழ்ந்துகொண்டு இருக்கிறவையை மனிசரெண்டு மதியாயினம். செத்தபிறகு குடும்பம் குடும்பமாய் மலர்வளையம் கொண்டுவந்து வைப்பினம். பாராட்டுவினம். இறந்தவர் பெருமையை அழகாய்ப் பேசுவினம். அஞ்சலி செலுத்துவினம். கல்வெட்டுக்கு கவிகவியாய் எழுதுவினம். ஒரு மனுசர் செத்த பிறகு உதெல்லாம் யாருக்குச் செய்யினம்? உந்த அன்பை கடைசி, ரெலிபோனிலையாவது பங்கயம் வாழும் போது அவளிடம் காட்டியிருக்கலாம். மனுசி அந்த சந்தோசத்திலை கொஞ்சம் கூட நாளாவது உயிர் வாழ்ந்திருக்கும்."

பாட்டியின் பக்க நியாயத்தினைப் புரிந்துகொண்ட தாத்தாவும் மெல்லிய தலையசைவுடன் மௌனமானார். ●



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை சோடிகள் உள்ளன?

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 1 | 4 | 8 | 7 | 5 | 6 | 3 | 9 | 4 | 6 | 7 | 8 | 8 | 3 | 1 | 2 | 3 | 4 |
| 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 1 | 4 | 2 | 1 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 1 | 5 | 2 | 1 |
| 3 | 3 | 4 | 6 | 7 | 3 | 8 | 2 | 9 | 1 | 4 | 5 | 6 | 7 | 3 | 4 | 9 | 1 | 2 | 9 |
| 3 | 3 | 4 | 6 | 7 | 3 | 8 | 2 | 9 | 1 | 4 | 5 | 6 | 7 | 3 | 4 | 9 | 1 | 2 | 9 |
| 5 | 3 | 9 | 8 | 2 | 7 | 7 | 4 | 6 | 7 | 5 | 3 | 7 | 0 | 9 | 8 | 8 | 0 | 2 | 8 |
| 2 | 0 | 5 | 6 | 3 | 7 | 7 | 0 | 8 | 9 | 5 | 7 | 4 | 9 | 7 | 4 | 5 | 5 | 0 | 5 |
| 6 | 4 | 3 | 2 | 8 | 9 | 7 | 6 | 3 | 7 | 8 | 2 | 0 | 9 | 3 | 8 | 2 | 4 | 5 | 7 |
| 7 | 6 | 5 | 5 | 4 | 7 | 4 | 4 | 4 | 6 | 6 | 6 | 8 | 8 | 8 | 3 | 1 | 3 | 4 | 5 |
| 3 | 2 | 1 | 3 | 2 | 1 | 1 | 2 | 3 | 1 | 2 | 3 | 5 | 4 | 3 | 7 | 8 | 2 | 3 | 9 |
| 9 | 8 | 7 | 9 | 8 | 7 | 8 | 7 | 6 | 8 | 2 | 6 | 7 | 6 | 5 | 7 | 0 | 1 | 9 | 8 |
| 1 | 9 | 8 | 7 | 3 | 8 | 2 | 6 | 4 | 5 | 5 | 9 | 1 | 0 | 8 | 8 | 4 | 2 | 3 | 4 |
| 2 | 4 | 6 | 8 | 2 | 4 | 6 | 8 | 3 | 6 | 9 | 1 | 1 | 8 | 1 | 9 | 4 | 4 | 5 | 5 |
| 8 | 3 | 6 | 5 | 9 | 1 | 7 | 2 | 3 | 7 | 5 | 9 | 4 | 3 | 7 | 6 | 7 | 7 | 6 | 6 |
| 9 | 1 | 8 | 2 | 7 | 3 | 6 | 4 | 5 | 5 | 8 | 1 | 8 | 3 | 7 | 2 | 9 | 1 | 0 | 8 |
| 2 | 7 | 3 | 4 | 8 | 5 | 5 | 6 | 4 | 7 | 2 | 3 | 7 | 8 | 0 | 2 | 6 | 7 | 7 | 5 |
| 6 | 3 | 8 | 6 | 0 | 9 | 1 | 8 | 7 | 6 | 4 | 3 | 8 | 2 | 9 | 2 | 8 | 7 | 6 | 5 |

அருகில் உள்ள சதுரத்தில் இருக்கும் எண்களில் அடுத்தடுத்து வரும் இரண்டு எண்களை இடமிருந்து வலமாகவோ அல்லது மேலிருந்து கூட்டினால் பெறப்படும் தொகை **10.**

அவ்வாறு எத்தனை சோடிகள் உள்ளன என்பதை வட்டமிட்டுக் காட்டுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**THOORAL - P.O. Box 4056 McCowan Square, 1235 McCowan Road, Scarborough, Ontario M1H 0A4**
**Fax : 416 273 7606 E-mail : editorial@thooralonline.com**

பெயர்.................................................

முகவரி.................................................


.................................................

.................................................

உங்கள் விடைகளை பெப்ரவரி 28ம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.

## சரியான விடை எழுதியோரில் பாராட்டுப் பெறும் சிலர்...

ஜனுஸ்கா சுஜானுகா - ரொறன்ரோ
பவானி சந்திரன் - மார்க்கம்
எஸ். ரமணன் - மிசிசாகா
செல்லத்துரை ஜெயசிங்கம் - ஸ்காபரோ
பிரணவன் - ரொறன்ரோ
ராசதுரை ரவீந்திரநாதன் - ஏஜக்ஸ்
தாரினி தவராஜா - ஸ்காபரோ
தேவகுமார் ஆறுமுகம் - ஸ்காபரோ
முருகையா நாராயனிர் - ஸ்காபரோ
கந்தசாமி ரிந்துஜா - ஸ்காபரோ
இந்திரா - ரொறன்ரோ
திருமதி த. பபினேஸ்வரன் - மிசிசாகா
ஹர்சினி யோகேந்திரன் - மார்க்கம்
செல்வநிஷா - ஸ்காபரோ




# பரிசு பெறுவோர் விபரம்

முதல் பரிசு → மயூரன் திருநாவுக்கரசு - ஸ்காபரோ
இரண்டாம் பரிசு → தனலட்சுமி கந்தசாமி - ரொறன்ரோ
மூன்றாம் பரிசு → நிஷாந்தினி ஆனந்தன் - மார்க்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவிழியில் மிதந்த கவிதை



- குரு அரவிந்தன்

மின்னல் அடித்ததுபோல எல்லாமே சட்டென்று நடந்துவிட்டது. அதிர்ச்சியில் இருந்து நான் மட்டுமல்ல, அவளும் மீளவில்லை என்பதை அவளது அந்தப் பிடி உணர்த்தியது. எவ்வளவு லாவகமாய் அவள் என்னைக்கடந்து சட்டென்று திரும்பி பின்பக்கமாய் வந்து என்னை இறுக்கி அணைத்தாள் என்பது எனக்கே வியப்பாக இருந்தது. தன்னைப் பாதுகாக்க என்னை முன்னால் தள்ளி நிறுத்தினாளோ, அல்லது எனது ஆண்மையில் அவளுக்கு இருந்த அதீத நம்பிக்கைதான் காரணமோ தெரியவில்லை. எதுவாய் இருந்தால் என்ன, என்னை நம்பிச் சரணடைந்தவளைக் காக்கவேண்டியது எனது பொறுப்பு என்பதை உணர்ந்து அவளுக்கு அடைக்கலம் கொடுத்தேன்.

தற்செயலாகத்தான் அது நடந்தது. பாடசாலையால் வரும்போது அவளது பென்சில் பெட்டி தெருவில் விழுந்து விடவே அதைக் குனிந்து எடுக்க முயன்றபோது, முன்வீட்டு வாசலில் படுத்திருந்த நாய் தன்னைத் தாக்கத்தான் எதையோ எடுக்கிறாள் என்ற பயத்தில் அவளைத் துரத்தத் தொடங்கியது. அந்த சமயம் பார்த்து நானும் எங்கள் வீட்டுக் கேற்றைத் திறந்து வெளியே வந்தேன். அதனால்தான் பாதுகாப்புத்தேடி ஓடிவந்து அருகே நின்ற என்னைக் கட்டிப்பிடித்தாள். அழகு ஓவியம் ஒன்று இதமான உடம்பும் சதையுமாய் என்னைத் திடீரெனக் கட்டிப் பிடித்ததில் நான் அதிர்ந்து போனதென்னவோ உண்மைதான். அதுவும் சிலநாட்களாக யார் மீது எனக்கு ஒருவித ஈர்ப்பு ஏற்பட்டிருந்ததோ, அவளே வலியவந்து என்னை அணைப்பதென்றால்? ஒரு ஸ்லோமோஷன் காட்சிப்படம் போல அந்தக் காட்சி என் மனதில் திரும்பத்திரும்ப நிழலாடிக் கிளுகிளுப்பை ஏற்படுத்தியது. சொர்க்கத்திற்குப் போனது போன்ற அந்த இனிய சுகம் அதிக நேரம் நீடிக்கவில்லை.

அதிர்ச்சியில் இருந்து அவள் மீண்டபோது, பெண்மைக்கே உரிய நாணம் அவளைச் சட்டென்று விலகி நிற்கவைத்தது. வேர்த்து வியர்த்திருந்த முகத்தில் இன்னமும் பயக்களை தெரிந்தது. இப்பொழுதும் அவளது உடம்பு லேசாகப் பதறிக் கொண்டிருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது. மூச்சு வாங்க ஓடி வந்ததில் அவளது மார்பகம் மேலும் கீழும் ஏறி இறங்கியது. பாடசாலையின் மெல்லிய வெள்ளைச் சீருடை ஆங்காங்கே வியர்வையில் தோய்ந்து போனதில் அந்த இடத்தை மட்டும் சூரியவெளிச்சம் வட்டம் போட்டு அதிசயமாய்க் காட்டியது. வயசுக் கோளாறோ என்னவோ எனது பார்வை சட்டென்று அங்கேபட்டுத் தெறித்தபோது, அவள் என்னை அணைத்தபோது ஏற்படாத உணர்வு அந்த வயதில் கிளர்ந்தெழுந்தது. வேறு நேரம் என்றால் எனது பார்வையின் உக்கிரத்தை அவள் புரிந்து கொண்டிருப்பாள். இப்போதைய நிலையில் சுயமாக இயங்க முடியாமல் தடுமாறியதில் அவள் அதைக் கவனத்தில் எடுக்கவில்லை என்பது எனக்குப் புரிந்தது. தப்பாத இடத்தில் தப்பான பார்வை என்பதால் வலிந்து பார்வையைத் திசை திருப்பினேன்.

'இதிலே கொஞ்ச நேரம் இருங்க..!' அருகே இருந்த மரக்குற்றியைக் காட்டிச் சொன்னேன்.

அவள் பாதையைத் திரும்பிப் பார்த்தபடியே தயக்கத்தோடு உட்கார்ந்தாள். உட்கார்ந்ததும் ஓடிச்சென்று ஒரு டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தேன்.

அதை வாங்கிய அவள் என்ன செய்வது என்று தெரியாமல் உட்கார்ந்தபடியே என்னை மேலும் கீழும் பார்த்தாள்.

'பயந்து போயிட்டீங்க, இதைக் கொஞ்சம் குடியுங்க.' என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமாக இயங்கமுடியாமல் எனது வழி நடத்தலுக்காகவே காத்திருந்தவள்போல, மளமளவென்று தண்ணீரைக் குடித்தாள்.

முருகனுக்கு ஒரு பிள்ளையார் யானை உருவில் வந்தது போல எனது காதலுக்குப் பைரவர் நாயின் உருவில் உதவிக்கு வந்தாரோ? என்று தெருவிலே விழுந்து கிடந்த புத்தகங்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கும்போதும் மனசுக்குள் யோசித்தேன். பொறுக்கிய புத்தகங்களை அப்படியே எடுத்து வந்து அவளிடம் கொடுத்தேன். வாங்கிக் கொண்டாள், நன்றி சொல்லவில்லை. தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்றே தெரியாத அதிர்ச்சி நிலையில் அவள் இருந்தாள்.

'ஆ யூ ஓகே..?' என்று வினாவினேன்.

கனவுலகிலிருந்து கலைந்து 'ஓம்' என்று என்னை நிமிர்ந்து பார்த்துத் தலை அசைத்தவள், மீண்டும் மெல்லத் தலை குனிந்தாள். அதுவே அவள் அழகிற்கு அழகு சேர்த்தது.

சற்றே தலை குனிந்தாள், சாமீ! இவளழகை
எற்றே தமிழில் இசைத்திடுவேன்? கண்ணிரண்டும் ஆளை
விழுங்கும் அதிசயத்தைக் கூறுவனோ?
மீன விழியில் மிதந்த கவிதையெல்லாம்
சொல்லில் அகப்படுமோ?

ஏக்கப் பெருமூச்சு விட்டபடி மெதுவாக எழுந்து வீதியத் திரும்பிப் பார்த்தபடியே வீடு நோக்கி நடந்தாள். என்னைத்தான் திரும்பிப் பார்த்தாளோ அல்லது திரும்பவும் தன்னை அந்த நாய் துரத்தலாம் என்ற பயத்தோடு திரும்பிப் பார்த்தாளோ தெரியவில்லை. அவளுக்கு சற்றுமுன் நடந்ததை நினைத்துப் பயம் இருந்திருக்கலாம். நாய் துரத்தாவிட்டாலும் என் மனம் அவளைப் பின்னால் துரத்திக் கொண்டே சென்றதை அவள் அறிந்திருக்க நியாயமில்லை. ஏக்கப் பார்வையோடு அவள் பிரிந்தபோது, பாரதி கண்ட கனவுகளை எனக்குச் சொந்தமாக்கி, அவளிடம் கண்ட அந்த ஆளை விழுங்கும் அழகை எனக்குள் மென்று சுவைத்துப் பார்த்தேன். நான் நானாக இல்லை என்பதை என்னைவிட்டு அவள் பிரிந்த அக்கணமே நான் உணர்ந்து கொண்டேன்.

அவள் என்னைவிட ஒரு வகுப்பு மேலே படித்துக் கொண்டிருந்தாள். பள்ளிச் சீருடையில் கூட்டமாக மாணவிகள் போகும்போது மற்றவர்களைவிட அவள் மட்டும் வித்தியாசமாய் என் கண்களில் பட்டாள். தினமும் எத்தனையோ பெண்களைப் பார்த்தாலும், என்னைக் கவரக்கூடிய ஏதோ ஒருவித கவர்ச்சி அவளிடம் இருந்திருக்கிறது. அதுதான் என் மனம் நேரகாலம் தெரியாமல் அவளைத் துரத்தித் திரிகிறது என்பதை நான் புரிந்து கொண்டேன். அவள் கல்லூரி சீருடையில் மட்டுமல்ல எந்த உடையிலும் சிரித்த முகத்தோடு அழகாகவே இருந்தாள். அந்த நிகழ்வின் பின் என்னைக் கண்டால் ஒரு புன்சிரிப்புடன் தலை குனிந்து கொள்வாள். பெண்மையின் நளினம் அவளது ஒவ்வொரு அசையிலும் வெளிப்படுவதைத் தினமும் அவதானித்தேன். எனக்குள் மெல்ல மெல்லக் காதலை வளர்த்துக் கொண்டேனே தவிர காதலைச் சொன்னதில்லை. சொல்ல நினைத்தாலும் விலாங்கு மீன்போல நழுவிக் கொண்டேயிருந்தாள். ஒரு நாள் படிப்பதற்கு ஏதாவது கதைப்புத்தம் இருக்குமா என்று வலிய வந்து கேட்டாள். கிடைத்த சந்தர்ப்பத்தை ஏன் நழுவவிடுவான் என்று குறுஞ்சிமலர் நாவலை அவளிடம் கொடுத்தேன். படித்துவிட்டு மிகவும் அருமையான நாவல் என்று வர்ணித்தாள். ஏன் என்று வினாவினேன். அதில் வரும் கதாநாயகனின் பெயர் தனக்கு மிகவும் பிடித்த பெயர் என்றாள். அதன்பின் எங்களிடையே புத்தகப் பரிமாறல் அடிக்கடி தொடர்ந்து கொண்டிருந்தது. நாட்டின் போர்ச் சூழல் காரணமாக நாங்கள் பயந்து பயந்தே தினமும் வாழவேண்டி வந்தது. ஒருநாள் எங்கள் ஊரைநோக்கி இராணுவம் திடீரென முன்னேறுவதாகச் செய்தி வந்தது. நாங்களும் எங்கே போவது என்று தெரியாமல் அவசரமாக இடம் பெயர்ந்தோம். உயிர் வாழ ஆசைப்பட்டு ஆளுக்கொரு திசை நோக்கிச் சென்றதால் அவளை நான் மீண்டும் சந்திக்கவில்லை. நான் புலம் பெயர்ந்து வெளிநாடு வந்திருந்தேன். அவளும் அப்படியே ஏதாவது வெளிநாட்டிற்குப் போயிருக்கலாம் என்று என்னைச் சமாதானப் படுத்திக்கொண்டு மறைமுகமாக அவளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டேன்.



மின்னஞ்சல்கள் தினமும் நிறைய வந்து குவிந்து கொண்டிருக்கும். இலவசம் என்பதால் விரும்பியவர்கள் எல்லாம் திக்கெட்டில் இருந்தும் அனுப்பிக் கொண்டிருப்பார்கள். வேண்டாதவற்றை அழிப்பதே மிகவும் சிரமமாக இருக்கும். அன்றும் ஆர்வம் காரணமாக நண்பன் ஒருவன் அனுப்பிய மின்னஞ்சல் ஒன்றைத் திறந்து பார்த்தேன். வன்னியில் நடந்த ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் பிரதி பெறுபவளின் பக்கம் என் கவனம் திரும்பியது. அவளேதான், இயக்கப் பெயராக இருக்கலாம் பெயர் மட்டும் மாற்றப்பட்டிருந்தது. அப்படி என்றால் அவள் அங்கேதான் இருக்கிறாளா? இது எப்படிச் சாத்தியமாயிற்று, ஒரு நாயைக் கண்டு பயந்து அந்த ஓட்டம் ஓடியவள், துப்பாக்கி ஏந்துவாளா? என்னால் கடைசிவரை நம்பமுடியாமலே இருந்தது. தமிழர் வாழ்ந்த நிலமெல்லாம் இராணுவத்தால் மெல்ல மெல்ல ஆக்கிரமிக்கப்பட்டது. யுத்தம் ஓய்ந்து வன்னி நிலம் பறிபோனபோது அவளுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. எந்த ஒரு செய்தியும் அவளைப்பற்றிக் கிடைக்கவில்லை. தினமும் வரும் திடுக்கிடும் செய்திகளைக் கேட்கும்போதும், படங்களைக் காணொளிகளைப் பார்க்கும் போதும் அவளை நினைத்து என் மனம் வேதனையில் தடுமாறும்.

மாவீரர் தினத்திலன்று ஒவ்வொரு முறையும் மலரஞ்சலி செய்யும் போது என்கண்கள் பனிக்கும். கார்த்திகைப் பூக்கள் சூடுவதற்கல்ல, அர்ப்பணிப்பதற்கே என்பதும் எனக்குத் தெரியும். ஆனாலும் அர்ப்பணிக்கும் அந்த மலர்கள் நிச்சயமாக அவளுக்காக இருக்கக்கூடாது என்று ஒவ்வொரு தடவையும் என்மனம் சுயநலமாய் நினைக்கவைக்கும். ஏனோ இம்முறை மட்டும் மலர் வைக்கும்போது என்னை அறியாமலே குலுங்கிக் குலுங்கி அழுதேன். அன்று காணொளியில் பார்த்த அந்தக் காட்சி என்னை மீண்டும் மீண்டும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உறைய வைத்திருந்தது.

மண்மீது கொண்ட காதலால்

மண்ணின் மானம் காக்கத்

தன்னையே தந்த அவளது அந்த

மீன விழியில் மிதந்த வலியெல்லாம்

சொல்லில் அகப்படுமோ? ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம்...

## சொர்க்கத்தின் திறவுகோல்

**இறப்பு** என்பது ஒரு பிரமையே என்பதை உணர்ந்து கொள்வதற்கு இழப்புக்களை நிச்சயம் எதிர்கொள்ள வேண்டும். அவ்வாறு எதிர்கொள்ளப்படுகின்ற இழப்புக்களையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்தால்...!

"எதை நீ கொண்டுவந்தாய் அதை நீ இழப்பதற்கு" எனும் கண்ணனின் பகவத்கீதை வரியின் அர்த்தம் புலப்படும். மனிதம் என்பது இன்றைய நாகரீக வளர்ச்சியில் உந்தப்பட்டு ஆன்மீகம் மறந்து, தம்மையும் மறந்து, 'நான்' எனும் அகங்காரத்திற்கு கட்டுண்டு தமது நிஜ வாழ்வினையே தொலைத்து நிற்கின்றது. புற உந்தல்களால் அக வாழ்வின் அர்த்தம் மறந்த உலகு இது. இங்கும் வல்லவன் வாழ்வான் என்பதுபோல் புற உந்தல்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையிலேயே தம்மை மறந்த நிலையாக மனிதம் வாழ்கின்றது.

ஓர் உயிரின் மறு பிறப்பு என்பது பல மதங்களாலும் பல இனங்களாலும் பலவாறாக நம்பப்பட்டு வருகின்றது. இது கூட சமுதாயத்தை வழிநடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டதா எனும் சந்தேகமும் இல்லாமலில்லை. முற்பிறப்பின் பின் விளைவுகளால் உயிர்கள் பூமியில் பிறப்பெடுப்பதாக நம்பப்படுகிறது. உயிர்கள் யாவும் இறைவனின் படைப்புகள் என்பதும், அவை மீண்டும் மீண்டும் பிறந்து இறைவனின் அம்சமாக வாழ்ந்து பின்னர் இறைவனையே சென்றடைகின்றது என்பதும் பகவத்கீதையின் சாரம்.

அவ்வாறாயின் ஒவ்வொரு உயிர்களும் ஏன் வேறுபட்ட குணாதிசயங்கள், உருவங்கள், தன்மைகள், கொண்டவையாக காணப்படுகின்றது? மனிதன் இவ்வுலகின் உன்னத படைப்புகளில் ஒன்று. அவனில் தான் எத்தனை ஏற்றத்தாழ்வுகள். எத்தனை வித்தியாசங்கள். இவ்வாறு வேறுபட்ட மனிதன் ஏன் படைக்கப்படுகின்றான் என்று ஒரு கேள்வி தோன்றுகின்றது அல்லவா? இங்குதான் சமநிலை என்பதும், ஒவ்வொருவரின் தேவைகள் என்பதும், அவற்றினை பூர்த்தியாக்குவது என்பதும் முன்னிலை வகிக்கின்றது.

மனித வாழ்க்கை பற்று நிறைந்ததாகவும், அதே வேளை உயிரோட்டமாகவும் இருப்பதற்கு வேற்றுமை என்பது இன்றியமையாதது. வேற்றுமையில் ஒற்றுமையை காண்பதுதான் எமக்கும் மேலாக இருக்கும் சக்தியின் படைத்தல் என்பது இங்கு புலனாகின்றது. இவ்வாறான வேற்றுமைகள் நிறைந்த உலகானது மனிதனை ஒன்றிணைத்தது. ஒவ்வொரு உயிர்களும் ஒரு சக்தியின் பிரிவுகள் என்பதால் உடல்களாலும், உருவங்களாலும், அவை வேறுபட்டாலும், தமைமறந்து உன்னத நிலையிலேயே ஒன்றிணைகின்றது. அவ்வாறு ஒன்றிணையும் நிலையில் அவ்வுயிர்கள் உறங்குநிலையில் காணப்படுகின்றது.

இவ்வாறு உயிர்ச் சுழற்சியில் சிக்குண்ட நாம் எமது சக்தி, திறமை, அறிவு, பொறுமை, அனுபவம், ஆற்றல் போன்றவற்றை சீரறிய அறிந்து எமக்கெனத் தரப்பட்ட கடமைகளை நிறைவேற்ற வேண்டியது அவசியம். மேலே வேற்றுமைகளாகப் பார்க்கப்பட்ட உயிர்களுக்கு கடமைகள் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றது என்பது அடுத்த விவாதம். எமது பிறப்பு, எமது தேவை, எமது அறிவு, எமது பலம், யாவுமே எமது கடமைகளின் அளவுகோல். அதனால்தான் செய்யும் தொழிலினை தெய்வமாகக் கருதுகிறோம். அதாவது எத்தொழிலும் எமக்கு மேலாக இருக்கும் ஒரு சக்தியினால் இயம்பப்பட்டவென்று.

ஆக,

தனது கடமைகளைத் தனக்கென வழங்கப்பட்ட நியதிகளுக்குக் கட்டுப்பட்டு செவ்வனே நிறைவேற்றிய உயிர்கள் மீண்டும் உறங்கு நிலைக்கான தகுதிகளைப் பெறுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. உலகை இயங்க வைக்கும் சக்தியின் ஸ்பரிசம் மென்மையானது. கேள்விகள் அற்றது. தேவைகள் அற்றது. எல்லாம் இன்பமயமானது. அங்கு சுவர்க்கம் என்பது மட்டுமே காணப்படும். அவ்வாறான சுவர்க்கத்தின் திறவுகோல் மரணத்தின் பிடியில்தான் மனிதனுக்கு சாத்தியமாகின்றது.

உயிர்களிடத்தில் அன்பாயிருத்தல் என்பது உண்மையாய் இருத்தல் என்பதாகும். இந்த உண்மைதான் உயிர்களின் உறங்குநிலைக்கான ஆரம்பம். ●

- கருணா கோபாலபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது உணவு முறையில் மாற்றம் வேண்டுமா?

## கருத்துக் களம்

கனடாவில் விற்பனை செய்யப்படும் உணவுவகைகள் Food and Dugs Act and the Consumer Packing and Labeling Act இன்படியே தயாரிக்கப்பட வேண்டும் என்பதை நம்மில் எத்தனை பேர் தெரிந்து வைத்திருக்கிறோம். நாம் வாங்கும் பொருட்களில் உள்ள உள்ளீடுகள் பற்றி நாம் எப்போதாவது சிந்தித்ததுண்டா? உடல் இயக்கத்திற்கு ஒவ்வொரு உள்ளீடும் நமக்கு எந்தளவுக்குத் தேவை, இவை குறைந்தால் என்ன நிகழும், கூடினால் என்ன நிகழும், குறிப்பிட ஒரு நோய்க்கு இந்த உள்ளீடு அதிக பாதிப்பை ஏற்படுத்துமா? அல்லது குறைக்குமா? என்று எவற்றையாவது தவிர்த்திருக்கிறோமா அல்லது சேர்த்திருக்கின்றோமா?

எமது சமூகத்தில் எமது உணவு முறை தொடர்பாக நாம் அக்கறை செலுத்துவதில்லை என்பதே உண்மை. நாம் ஒவ்வொருவரும் எமது வயது, எடை என்பவற்றைக் கருத்திற்கொண்டு எமது உணவு முறைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். சில உணவுப் பொருட்களைத் தவிர்த்தும், சில உணவுப் பொருட்களை அதிகம் சேர்த்துக் கொள்ளவும் வேண்டும். இது தொடர்பாக சிலருடன் கருத்துக்களை பகிர்ந்து கொண்டோம்.

**வதனி - ஸ்காபரோ**

எமது உணவு முறைகளை நாம் நிச்சயம் மாற்ற வேண்டும். நாம் நமது நாட்டில் கடைப்பிடித்த உணவுப்பழக்க வழக்கத்தை இங்கேயும் கடைப்பிடிக்க முடியாது. அந்த நாட்டு காலநிலைக்கும் இந்த நாட்டு காலநிலைக்கும் நிறைய மாற்றங்கள் உண்டு. எனவே நாம் இந்த நாட்டுக்கேற்ப உணவு முறையில் மாற்றம் கொண்டுவரவேண்டும் என்பது என் கருத்து.

**செல்வராசா -- மார்க்கம்**

எமது உணவுமுறையில் மாற்றம் வேண்டும் என்று எப்படிச் சொல்கிறீர்கள். கனடியர்களின் உணவுகளுக்குப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டுமா? எமது உணவு வகைகள் மிகவும் சத்தான உணவுகள். அதனால் தான் எமது முன்னோர்கள் நீண்ட காலம் வாழ்ந்தார்கள். கனடியர்களின் உணவுமுறைக்கு பழக்கப்படுத்தி கொண்டால் மிகச் சிறிய வயதிலேயே மரணத்தை எதிர்கொள்ள வேண்டிவரும்.

**கவிதா — எற்றோபிக்கோ**

நாம் பொதுவாக எமது உணவுகளில் சீனி, உப்பு, மிளகாய், எண்ணெய் போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றோம். இவை நான்கும் நமது வயதிற்கேற்ப குறைத்துக் கொள்ள வேண்டியவை. உணவு தயாரிக்கும் போது அவரவர் வயதைக் கருத்திற்கொண்டு இவற்றை பயன்படுத்த வேண்டும்.

**ரவி — மிசிசாகா**

நீங்களே பொரித்தல் வறுத்தல் தவிர்க்க வேண்டும் என்று மருத்துவ பகுதியில் எழுதிவிட்டு இப்போது எமது உணவு முறையில் மாற்றம் வேண்டுமா என்பது நியாயமில்லை. நாம் எமது உணவுகளை வதக்கி, தாளித்து, பொரித்து உண்ணும் போது அதில் உள்ள சத்துக்கள் போய்விடுகின்றது. இதன் பின்பு அந்த உணவுகளை உட்கொள்வதில் எந்தப் பிரயோசனமும் இல்லை.

**சந்திரிகா — ஏஜக்ஸ்**

மேல் நாட்டவர்கள் அதிகமாக உணவுகளை பேக் செய்தே சாப்பிடுவார்கள். இதன்போது தேவையற்ற கொழுப்புகள் கரைந்து வெளியேறிவிடும். ஆனால் நாம் சமைக்கும்போது அந்த கொழுப்புகள் எமது கறிகளில் இருந்து வெளியேறுவதில்லை. இதனால் சிறிய வயதிலே கொலஸ்ரோல் பிரச்சனைகளுக்குள்ளாக வேண்டி ஏற்படுகிறது. எமது நலத்திற்கேற்ப எவ்வகையான உணவுகளை உட்கொள்ளவேண்டும் என்று ஆராய்ந்து நாம் உண்ண வேண்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். எல்லோரும் ஆரோக்கியமாக வாழவே விரும்புகின்றோம். அதற்காக கொஞ்சம் நேரம் செலவிடுவதில் தவறில்லை.

**விஜி — ரொறன்ரோ**

நாம் எமது உணவுகளில் பச்சைக் காய்கறிகள், பழங்கள், சலாட் போன்றவற்றை பயன்படுத்த வேண்டும். சாதாரணமாக உணவில் சலாட் போன்றவற்றை சேர்த்தால் பலருக்கு கோபம் வரும். இதை ஏதோ வேலையை தவிர்ப்பதற்கு தயாரித்ததாக நினைக்கிறார்கள். ஆனால் அது சத்தான உணவு என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேணுகா — மார்க்கம்

நாம் பொருட்கள் வாங்கும் போது அவற்றின் காலாவதியாகும் திகதி, அவற்றை பதனிடுவதற்கோ அல்லது அதனுடன் சேர்த்துள்ள பொருட்கள் என்னவென்று அவதானித்து நமது குடும்பத்தில் உள்ள எவராவது தவிர்க்கவேண்டிய பொருட்கள் சேர்க்கப்பட்டுள்ளதா என்று கவனத்தில் கொள்ளவேண்டும்.

விஜயலஷ்மி - ஸ்காபரோ

நிச்சயம் எமது உணவுவகைகளில் மாற்றம் கொண்டுவர வேண்டும். பொதுவாக நம்மூரில் நாம் இறைச்சி வகைகளை கிழமைக்கு ஒரு நாள் என்ற வகையிலேயே சாப்பிடுவோம். மீன் வகைகளையே அதிகம் உணவில் சேர்த்துக்கொள்வதுண்டு. ஆனால் கனடாவிலோ இறைச்சி வகைகள் குறைந்த விலையில் கிடைப்பதால் நாம் மீன்வகைகளை தொட்டும் பார்ப்பதில்லை.
இந்த இறைச்சிகளுக்குப் பயன்படுத்தப்படும் இராசாயனப் பொருட்களே எமது அதிகளவான பருமனுக்கும் வயதுக்கு மீறிய வளர்ச்சிக்கும் காரணம். எனவே நாம் இதனைத் தவிர்த்து மீன் போன்றவற்றை அதிகம் சாப்பிட வேண்டும்.

அமுதா — எற்றொபிக்கோ

சாதாரணமாக சமைத்த உணவுகளை ஓரிரு நாட்களுக்கு மேல் வைப்பது நல்லதல்ல. ஆனால் நாமோ வேலைப்பளு காரணமாக சில சமயங்களில் பல நாட்களுக்கு மேல் வைத்துச் சாப்பிடுகின்றோம். கனடாவில் நேரம் என்பது முக்கியமானது. ஆனால் அதற்காக எமது சுகத்தைக் கெடுத்துக் கொள்ளாமல் இலகுவாக செய்யக்கூடிய சலாட், பழங்கள், பருப்புவகைகள் போன்றவற்றை உட்கொள்ளலாம். இது நேரத்தையும் மிச்சப்படுத்தும், சத்தானதும் கூட.

தீபன் - மிசிசாகா

எமது உணவுப்பழக்கம் ரைவ் துருவில் வந்துநிற்கின்றது. சிலர் உணவகங்களே கதி என்று இருக்கும் நிலையில் தான் இருக்கின்றார்கள். சிலர் சமையலறையில் சமைத்து பல வருடங்கள் ஆகிவிட்டன. இதற்கு சொல்லும் காரணம் சமைப்பதற்கு நேரமில்லை. அதனால் தான் நேரம் பாராமல் மரணமும் நம்மிடம் வந்துவிடுகின்றது. வீட்டிலேயே குறைந்த நேரத்தில செய்யக்கூடிய எத்தனையோ உணவுகள் உண்டு. சுகமாக வாழ வேண்டும் என்றால் இவற்றை செய்து பார்க்கலாம்.

தினேஷ் - பிக்கரிங்

நாம் இவ்வளவு கஷ்டப்பட்டு சம்பாதிப்பதே சாப்பாட்டுக்குத்தான். அப்படியிருக்கும் போது எமக்கு எந்த உணவு திருப்தி அளிக்கிறதோ அந்த உணவையே சாப்பிடவேண்டும். ஏனெனில் நாம் வாழ்வது கொஞ்சக் காலந்தான். அப்படியிருக்கும் போது நம்மைக் கட்டுப்படுத்தி நாம் ஒன்றையும் சாதிக்கப்போவதில்லை. ஆட்லீஸ்ட் வாழும் போது திருப்தியாகச் சாப்பிட்டோம் என்றாவது இருக்கட்டுமே.

பவானி — மில்டன்

பொதுவாக எமது உணவுகள் கொழுப்புச் சத்து நிறைந்ததாகக் காணப்படுகிறது. நாம் இன்னமும் தேங்காய் பாலில் சமைத்து, அதிக கொழுப்புள்ள ஆட்டிறைச்சியை அடிக்கடி சாப்பிட்டு இன்னும் எமது உடலில் கொழுப்புச் சத்துக்களை கூட்டுகின்றோம். கனடா போன்ற ஒரு நாட்டில் வாழ்ந்து கொண்டு எப்போது எந்தவகையான நோய் தாக்கும் என்று தெரியாதிருக்கும் போது நாம் தெரிந்தே செய்கின்ற இவ்வாறான பிழைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். நீராவியில் வேகவைத்த உணவுவகைகள், அதிகம் கீரைவகைகள் போன்றவற்றை அதிகம் பயன்படுத்தலாம்.

**இது உங்கள் கருத்துக்களுக்கான பக்கம்...**
**உங்களின் ஆரோக்கியமான கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துக் கூறுங்கள்.**
**அடுத்த இதழின் தலைப்பு:**

## பேஸ் புக்கின் [Face Book] வரவு சமுதாயத்திற்கு நன்மையா தீமையா?

உங்கள் கருத்துக்களை பின்வரும் முறைகளில் அனுப்பலாம்:
**Fax: 416-273 7606 Email: editorial@thooralonline.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MONEY PROBLEMS?™

சிறிய மாதக் கட்டணத்தைச் செலுத்தி உங்களுடைய சகல கடன்
தொல்லைகளுக்கும் தீர்வு காணுங்கள்!

## எம்மால்...

- √ உடனடியாக நீங்கள் வட்டி செலுத்துவதை நிறுத்தமுடியும்!
- √ உங்களுடைய கடன்பெறும் தகமையை மீழப் பெற்றுத்தர முடியும்!
- √ உங்களுடைய கடன் பழுவைக் குறைக்க முடியும்!

## இனிமேல் தொல்லைகள் இல்லை...

- X கடன் அறவிடுவோரிடமிருந்து தொலைபேசி அழைப்புகள் வரமாட்டாது!
- X உங்களுக்கு எதிரான நீதிமன்ற ஆணைகள் இருக்காது!
- X உங்களுடைய ஊதியத்தில் இருந்து பணம் வசூலிக்கப்பட மாட்டாது!
- X உங்களுக்கு ஆதனங்களை இழக்கும் கவலையிருக்காது!
- X அத்துடன் உங்களுக்கு பணச்சிக்கல்கள் எதுவுமே இருக்காது!




எம்முடன் உங்கள் தாய்மொழியில் உரையாட

**416-650-5400**
(West Toronto)

**416-754-1800**
(East Toronto)

திவாலாகும் நிலைமைக்கு அவசியமே இல்லை

வங்கிறோத்து அமைப்பின் அறங்காவலரைச் சந்திப்பதற்கு முன்னர் எம்மைச் சந்தியுங்கள்

அந்த அறங்காவலர்கள் கடன் கொடுத்தவர்களின் பிரதிநிதிகள்

ஆனால் நாம் உங்களுடைய பிரதிநிதிகளாகச் செயற்படுபவர்கள்

gta™
credit

GTA Credit Solutions Services Ltd.

www.gta-credit.com

**North York** - 1280 Finch Ave. W. Suite 411, M3J 3K6
**Scarborough** - 4433 Sheppard Ave E. Suite 201, M1S 1V3
**Mississauga** - 93 Dundas St. E. Suite 114, L5A 1W7
**Brampton** - 284 Queen St. E. Suite 215 L6V 1C2
**Ajax** - 30 Hunt Street Suite 203, L1S 3M2
**Downtown** - 01 Eglinton Ave East, Suite 703 M4P 3A1
**Oshawa** - 187 King Street East, Suite 102, Oshawa L1HY 1C2
**Barrie Office** - 129 Dunlop St., Suit 201, Barrie, Ontario, L4M 1A6
**Hamilton / Stoney Creek Office** - 800 Queenston Road,Suite 302, Stoney Creek, Ontario, L8G 1A7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமெடி Collections...

சிலபஸ்லயே இல்லாத திருக்குறளை எல்லாம் கடகடன்னு சொல்றியே எப்படி?

பல பஸ்ல படிச்சேன் டீச்சர்!

ஆப்ரேஷன் செஞ்சா பொழைக்க முடியாதுண்ணு சொல்றாங்களே... உண்மையா டாக்டர்?

யார் சொன்னது... நான் ஆபரேஷன் செய்துதான் பொழைக்கிறேன்!

டாக்டர் : வாயை நன்றாகத் திறங்க.
நோயாளி : ஆ!
டாக்டர் : இன்னும் பெரிசா!
நோயாளி : ஆ! ஆ!
டாக்டர் : இன்னும் அகலமா...
நோயாளி : நீங்க உள்ளே போய்த்தான் வைத்தியம் செய்ய முடியும்னா எனக்கு அது வேணாம், டாக்டர்.

ஒரு டாக்டர் கதை எழுதினா எப்படி அத்தியாயம் பிரிப்பார்?

சாப்பாட்டுக்கு முன்பு – சாப்பாட்டுக்குப் பின்புன்னு!

அவர் டாக்டரா?

ஆமாம். எப்படிக்கண்டுபிடிச்சே?

அவர் காரை இடிக்க வந்தவனைப் பார்த்து 'ஆபரேசன்ல போறவனே'னு திட்டினாரே!

மனைவி : நம் பையன் போன் பண்ணி ரொம்ப நாளாகுதில்ல..
கணவன் : ம்ம்ம்..
மனைவி : கடைசியா எப்போ போன் பண்ணினான்?
கணவன் : ஒரு நிமிஷம் இரு. செக் புக்கைப் பார்த்து சொல்றேன்.

அப்பா உங்க டாக்டர் மாப்பிள்ளையோட கொடுமைக்கு அளவேயில்லாம போச்சுப்பா..

ஏம்மா என்ன பண்றாரு?

ஆஸ்பிடல்ல கூட்டமே இல்ல.. உங்க வீட்ல இருந்து 4 பேர வந்து அட்மிட் ஆக சொல்ல சொல்லி என்ன துன்புறுத்துறாருப்பா.

பெத்த பொண்ணும், பரீட்சை பேப்பரும் ஒண்ணுதான்டா...

எப்படிடா மச்சான்?

ரெண்டுத்தையும் கட்டிக் கொடுக்குற வரைக்கும் டென்ஷன்தான்.

மகன் : பல ரோஜாக்களை பறிக்கும் போது ஒரு முள்ளு குத்தத்தான் செய்யும்.
அப்பா : இப்போ எதுக்குடா இந்த தத்துவம்?
மகன் : 5 பேப்பர் எழுதினா ஒன்று பெயிலாகும் என்கிறதை உங்களுக்கு உணர்த்தத்தான்.

முன்னவர் : ஆசையே துன்பத்துக்குக் காரணம்னு இப்பதான் நான் தெரிஞ்சுக்கிட்டேன்!
பின்னவர் : எப்படி?
முன்னவர் : என் மனைவியை நான் ஆசைப்பட்டுத் தானே கல்யாணம் பண்ணிக்கிட்டேன்

பூமி தன்னைத்தானே சுத்தி சூரியனைச் சுத்துமா? இல்ல சூரியன் தன்னைத்தானே சுத்தி பூமியைச் சுத்துமா?

மாணவன் : எனக்குத் தலையைச் சுத்துது சார்.

ஜோதிடத்த நம்பாதீங்க நம்பாதீங்கன்னுச் சொன்னா கேட்டீங்களா? இப்ப பாருங்க...

ஏன் அப்படி என்னதான் சொல்லிட்டான்?

பின்ன என்னவாம், உங்க ஜாதகப்படி உங்களுக்கும் அறிவும், அழகும் ரொம்ப ஜாஸ்தியாம்.

வேலைக்காரன் : ஐயாவுக்கு மூளைல ஸ்கேன் எடுக்கணும்னு சொல்லிட்டாங்களாமே.
முதலாளி : அதுக்கு நீ ஏன் பதர்ற?
வேலைக்காரன் : இல்லாத விஷயத்துல எப்படி ஸ்கேன் செய்வாங்க ஐயா!

இன்னும் முப்பது வருஷம் இளமையா இருக்க வழி இருக்கா?

எதுக்கு?

ஒரு மெகா சீரியல்ல கதாநாயகி வாய்ப்பு கிடைச்சிருக்கு!

விளம்பரத்துல நடிக்கிறவர நீதிபதியா நடிக்க வச்சது தப்பாப் போச்சு..

ஏன்.. அப்படி என்னத்தா செஞ்சாரு?

குற்றம் நடந்தது என்ன... ஒரு சிறிய விளம்பர இடைவேளைக்குப் பின்... னுன்னு இடைவேளை விடுறாரு

சிரிப்போ... சிரிப்பு...

என்னோட அம்மாவும் அப்பாவும் என்னை ரொம்ப மிரட்டினாங்க. அதனாலதான் நான் ரமேஷ மறந்துட்டு அவங்க சொல்றவனையே கல்யாணம் பண்ணிக்கலாம்னு சம்மதிச்சேன்.

அப்படி என்னதாண்டி மிரட்டினாங்க?

தொடர்ந்து ரமேஷ் கூட பழகினா அப்புறம் அவனையே கல்யாணம் பண்ணி வச்சுடுவேன்னு மிரட்டினாங்க.

–ராகவன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Canadian Tamils' Business Directory

கையேடு முதல்
கணனி வரை...

www.tamilsguide.com





செந்தியின் தமிழன்

வழிகாட்டி

Athavan Publications Inc.

**TAMILS' GUIDE PUBLISHERS**

771 Brimley, Road Scarborough, Ontario Canada, M1J 1C7

Tel: 416 615 4646 - Fax: 416 615 2414

"Our Business is to promote you in Business"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 26 கோடிக்கு விளம்பர ஒப்பந்தம் செய்துள்ள டோணி

இந்தியாவின் நவீன கிரிக்கெட் கேப்டன் என்று வர்ணிக்கப்படும் எம்.எஸ். டோணி விஜய் மல்லையாவின் யு.பி. குழுமத்துடன் இந்திய மதிப்பில் ரூ. 26 கோடி பெறுமான விளம்பர ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார். இவர் 3 ஆண்டுகால ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

"உலகக் கோப்பை கிரிக்கெட் பிப்ரவரியில் தொடங்குவதற்கு சற்று முன் இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும்." என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாகப் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

யு.பி. நிறுவனத்திற்கு முன்னர் டோணியின் மிகப்பெரிய விளம்பர ஒப்பந்தம் ரீபாக் நிறுவனத்துடனானது. அதாவது ரூ.29-30 கோடி ஒப்பந்தம் செய்து கொண்டார் டோணி.

சுமார் 22 பிராண்ட்களுக்கு டோணி விளம்பரம் செய்துவருவதாகத் தெரிகிறது.

# Sports News

## 2018 ஆம் ஆண்டு உலக கிண்ண உதைப்பந்தாட்டம்

உதைப்பந்தாட்ட உலக கிண்ண போட்டியை 2018 ஆம் ஆண்டு ரஷ்யாவிலும், 2022 ஆம் ஆண்டு கட்டாரிலும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2018, 2022-ம் ஆண்டுகளுக்கான உலக கிண்ண போட்டியை எந்த நாடு நடத்துவது என்பது தொடர்பாக சுவிட்சர்லாந்தின் ஜூரிச் நகரில் உலக உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் (பிஃபா) 22 செயற்குழு உறுப்பினர்கள் ரகசியமாக வாக்களித்து இந்த இரு நாடுகளையும் தேர்வு செய்தனர்.

கடுமையான போட்டிகளுக்கு மத்தியில் 2018ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை நடத்துவதற்கு ரஷ்யாவும், 2022-ம் ஆண்டு உலகக் கிண்ணத்தை நடத்துவதற்கு கட்டாரும் தேர்வு செய்யப்பட்டன. இதை பிஃபா தலைவர் செப் பிளேட்டர் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். 2014 ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டியை நடத்துவதற்கு பிரேசில் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## களநடுவர் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் முறை அமுல்

2011ஆம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இந்தியா, இலங்கை, வங்கதேசம் ஆகிய நாடுகளில் நடைபெறுகிறது. இதில் காலிறுதி முதல் இறுதிப் போட்டிவரை களநடுவர் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் முறை அமுல் செய்யப்படுகிறது.

4 காலிறுதி, 2 அரையிறுதி, மற்றும் ஒரு இறுதிப் போட்டி ஆகியவற்றில் தீர்ப்பு மேல்முறையீடு முறை நடைமுறைப்படுத்தப்படும். என்று ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

உலகக் கோப்பை போட்டிகள் பிப்ரவரி மாதம் 19ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 2ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

## டேவிட் பெக்கமிற்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் முன்னாள் தலைவர் டேவிட் பெக்கமிற்கு பி.பி.சீ உலக சேவையின் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படவுள்ளது. 35 வயதான டேவிட் பெக்கம் இங்கிலாந்து அணியின் சார்பில் அதிகளவான போட்டிகளில் விளையாடிய வெளிக்கள வீரராக கருதப்படுகின்றார். டேவிட் பெக்கமின் திறமை அளப்பரியதென பி.பி.சீ ஊடகம் புகழாரம் சூட்டியுள்ளது.

பிரித்தானிய விளையாட்டுத்துறையின் பிரதிநிதியாக சர்வதேச அரங்கில் நாட்டுக்கு பெக்கம் புகழைத் தேடிக்கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. டேவிட் பெக்கம் 59 தடவைகள் இங்கிலாந்து அணியை தலைமையேற்று வழிநடத்தியுள்ளார்.

ஏ.சீ மிலான், ரியல் மட்ரீட், லா கெலக்ஸி, மான்செஸ்டர் யுனைடட் போன்ற உலகின் முதனிலை கால்பந்தாட்ட கழகங்களுக்காக பெக்கம் விளையாடியுள்ளார். உலகின் முன்னணி கால்பந்தாட்ட நட்சத்திரம் பேலா, பிரபல கிரிக்கட் நட்சத்திரம் இயன் பொத்தம், பிரபல டென்னிஸ் நட்சத்திரம் மார்டினா நவரட்னலோவா போன்றவர்கள் கடந்த தசாப்தத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருதினை பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

## அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்!








# FIREMAN STEINMETZ

PERSONAL INJURY LAWYERS

CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

## MOTOR VEHICLE ACCIDENT

FRACTURES · SPINAL CORD INJURY · BRAIN OR HEAD INJURY · SCARRING OR DISFIGUREMENT · INTERNAL INJURIES OR DEATH



**Jack J. Fireman Q.C. LLM.**
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer" catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



**Harry F. Steinmetz**
Mr. Steinmetz is a member of the Advocates Society, the Canadian Bar Association, the Metropolitan Toronto Lawyers Association and the Medico-Legal society.

## உங்களுக்குத் தெரியுமா?

- நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள் அத்துடன் **$86,000.00** வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.
- நடந்த விபத்து உங்கள் தவறாக இருப்பின் உங்களால் **$86,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

*if you have optional insurance you can calm up to **$1,000.00** IRB'S - per week
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்!

**If the impairment catastrophic your claim can be:**

- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expanses up to **$1,000,000.00**

***OVER 50 YEARS COMBINED EXPERIENCE***

**even if you are:**

unemployed - employed - passenger - pedestrian - cyclist - traveling in public transit - student - housewife

**You may be eligible for benefits to THOUSANDS of dollars**

**இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்**

MOTOR VEHICLE ACCIDENT

# தீபன்


**(416) 505 - 9804**
**(416) 624 - 4751**
24 Hours

**Thiparanjan Sivarajalingam**
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of upper Canada)

அனுபவம் இல்லாதவர்களின்
ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்.

TORONTO · SCARBOROUGH · MISSISSAUGA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org